10

மங்கை

பெண்களின் புத்தகம்





இப்படத்தில் காணப்படும் குழந்தை
ஸ்ரீ ஜான்ஸி ராணி நம் 'மங்கை'யில்
யோகாசனக் கட்டுரைகள் எழுதிவரும்
ஸ்ரீமதி சீதாலட்சுமி குமாரஸ்வாமியின் குமாரி.
வயது ஒன்றுதான் ஆகிறது இக்குழந்தைக்கு!

•

புதுமையான நூல்கள்

★

ரு.அ.

பாரதியும் கவிதையும் 2-8

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி எழுதியது. பாரதியார்பற்றிய அரிய குறிப்புகள்

மெய்க்காதல் 3-12

ஸ்ரீமதி வாண்டாவாஸிலெவ்ஸ்கா எழுதிய அருமையான நாவல். ருஷ்யாவில் 1944 வருஷத்திய பரிசு பெற்ற நாவல்

கதைகள் 4-8

மேற்கு வங்காள கவர்னர் ஸ்ரீ ராஜாஜி எழுதிய அருமையான கதைகளின் தொகுப்பு

சாரதையின் தந்திரம் 4-8

பிரபல கதாசிரியர் 'கல்கி' எழுதிய கவர்ச்சிகரமான கதைகளின் தொகுப்பு

பெண்களுக்கு (அச்சில்)

மகாத்மா காந்தியடிகள் அவ்வப்பொழுது பேசியதும் எழுதியதும். திருமண காலங்களில் பெண்களுக்குப் பரிசு கொடுக்கத் தகுதி வாய்ந்த நூல்

லெனின் சரித்திரக் கதைகள் 3-12

உலக மகா புருஷர் லெனின் வாழ்க்கையில் நடந்த அருமையான சம்பவங்கள். தி. ஜ. ர. தமிழாக்கியது

★

புதுமைப் பதிப்பகம் லிமிடெட்

காரைக்குடி

பொருள் அடக்கம்

தொகுதி 2 : பகுதி 3

●

நல்ல காலம் பிறந்துவிட்டதா?	...	தலையங்கம்	5
செய்திக் குறிப்புகள்	...		9
இந்தியா மீண்டும் வழிகாட்டும்	...	கவியரசி சரோஜினி	11
கொடி பறக்குது	...	"லலிதா"	12
நமது குழந்தைகள்	...	டாக்டர் நாமகிரி	13
கதாசிரியை	...	குமாரி கிருஷ்ண குல்கர்னி	19
சூரியகாந்தி	...	மு. அருணசலம்	33
சின்ன விஷயம்தான்	...	ஸ்ரீமதி ரங்கதேவி சதாசிவம்	35
தைக்கும் விதம்	...	சரோஜினி	37
நறுமணம்	...	ராதாசகி	40
பெண்களும் யோகாசனமும்	...	சீதாலக்ஷ்மி குமாரஸ்வாமி	41
உடலோம்புதல்		டாக்டர் திருபுரசுந்தரி எம்.பி.பி.எஸ்.	47
சீமாவின் தமாஷ்	...	'ஸ்வாதி'	51
ஓமம்	...	டாக்டர்	59
பானங்கள்	...	செல்லம்	61
கமலாதேவி சட்டோபாத்யாயா	...	பெண்மணி	65
மனைவி	...	ஸ்ரீமதி மங்களாத்திரிமணி	69
பெனிசிலின்	...	குமாரி மீனசதாசிவம்	75
அழகுக் குறிப்புகள்	...	நாகலட்சுமி	77
சமையல்	...	"தமயந்தி"	81
சமத்துச் சங்கரன்	...	நாணு	83
அதிசயப் பிறவி	...	குஞ்சலம்	87
உங்களுக்குத் தெரியுமா?	...	காமு	89
சினிமாவும் பெண்களும்	...	நவயுவதி	90
மிஸ் மாலினி	...	விமர்சனம்	92
மங்கை வாசகர்களுக்கு	...		95

ஆசிரியர்: எஸ். விசாலாட்சி

1947

செப்டம்பர், அக்டோபர்

ஜெய் ஹிந்த்

பாரத நாட்டு மக்களே!

இந்தியாவில் உற்பத்தியாகும் ஆடைகளை உபயோகிக்க இன்னும் ஏன் தயங்குகிறீர்கள்? இந்தியர்கள் நம் நாட்டுக் கைத்தறி ஆடைகளை வாங்கி நம் மக்களை ஆதரிப்பதில் சிரத்தை காண்பியுங்கள்.

இந்தியப் பெண்மணிகளே!

கைத்தறி ஆடைகளில் சிறந்து விளங்கும் எங்கள்

"போட்டோ மார்க்"

சேலைகளை வாங்குங்கள்



தயாரிப்பவர்கள்:

ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி.

ஏஜண்டுகள்:

1. ஸ்ரீ முருகன் அண் கோ., மால் 2-வது தெரு மதுரை. ஸ்ரீ பால முருகன் கம்பெனி மால் 5 ஹனுமார் கோவில் தெரு மதுரை. 3. ஆர். எம். எச். எஸ். மூர்த்தி கம்பெனி, லக்ஷிமிபுரம் குறுக்குத் தெரு மதுரை. 4. பாலமுருகன் அண் கோ., 166 தெற்கு மாசி வீதி மதுரை. 5. எம். எஸ். டி. சுப்பய்யர் அண் சன்ஸ், 115 சந்தை ரோடு நாகல்நகர் திண்டுக்கல். 6. கஸ்தூரி ரங்கய்யர், நாகையர் அண் கோ., ஸௌராஷ்ட்ர தெரு வத்தலகுண்டு. 7. என். எஸ். குப்புசாமி என். ஏ. கே. சுப்பய்யர் ஜவுளி வியாபாரம், தென்கரை பெரியகுளம். 8. ஸ்ரீ சுப்ரமணியம் கம்பெனி சேலம் அண்டு வட ஆற்காடு ஜில்லா. 9. எம். ஆர். சுப்பையா செட்டியார் ஜவுளி வியாபாரம் முத்துசாமி பிள்ளை வீதி பொள்ளாச்சி. 10. ராஜா அண் கோ., மதராஸ் அண்டு ஆந்திரா ஜில்லா.

குறிப்பு:—*40. 60. 80.* கெ. ஜவுளி தினுசுகளுக்கும், பிரிண்டெட் வாயல் சேலை தினுசுகளுக்கும்,

சரஸ்வதி வீவிங் கம்பெனி

நாகல்நகர், திண்டுக்கல்

32, லக்ஷிமிபுரம், 3-வது தெரு, மதுரை

நீங்கள் நேரில் வந்து
பரீக்ஷை செய்யுங்கள்

முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானால் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் **பாபாலால்** கம்பெனியிலிருந்து வாங்கினதானால் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டியதில்லை. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

197643.

பாபாலால் & கம்பெனி

கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்

மதராஸ்

DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS.

மங்கை

பெண்களின் புத்தகம்

தொகுதி 2	சென்னை, செப்டம்பர்-அக்டோபர் 1947	பகுதி 3

நல்லகாலம் பிறந்து விட்டதா?

●

ஐயாயிரம் மைலுக்கப்பாலிருந்து வியாபாரம் செய்வதற்கென்று வந்து நாட்டை அடிமை கொண்டு, ஆதிக்கம் செலுத்தி வந்த அந்நியரின் ஆட்சியைச் சென்ற மாதம் குழி தோண்டிப் புதைத்தாய் விட்டது. போவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே நாட்டைச் சுரண்ட ஆரம்பித்து கொள்ளையடித்துக் கொண்டு போகக் கூடிய தனத்தையும் பலவிதங்களில் கொண்டுபோய் விட்டார்கள். வெள்ளி ரூபாயைக் காகிதப் பவுன் நோட்டுக்குத் தாலிகட்டி குடிகாரனுக்கு வாழ்க்கைப் பட்ட தாரம் தாலிப் பொன்னையும் பறி கொடுத்த நிலைக்கு பாரதத் தாயைக் கொணர்ந்து விட்டனர். பல பொருளாதார நிபுணர்கள் தங்கத்தின் ஏற்றுமதியைத் தடை செய்யும்படி கூக்குரலிட்ட போதிலும் செவி சாய்க்காமலிருந்து நாட்டை ஏழ்மைப்படுத்திவிட்டனர். அதன் காரணமாக இன்று ரூபாயின் மதிப்பு சற்றேறக்குறைய ஆறிலொரு பங்காகக் குறைந்திருக்கிறது. முன்பு ஒரு ரூபாய்க்கு வாங்கிய பண்டத்திற்கு ஆறு ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதையறியாத சில பாமர மக்கள் "என்ன சுயராஜ்யம் வேண்டியிருக்கிறது? விலைவாசிகள் குறையவில்லை. வயிற்றுக்குச் சோறில்லை. குடியிருக்க வீடில்லை. கட்டத்துணியில்லை. காங்கிரஸ் ராஜ்யம் வந்தென்ன பிரயோசனம் என்று சொல்கிறார்கள். காங்கிரஸ் காரர்கள் மந்திரவாதிகளல்ல. "ஜூ மந்திரக்காளி, என்று அலாவுதீன் மாய விளக்கைத் தேய்த்தது போல ஆட்சியை மேற்கொண்டதும் வயிற்றுக்குச் சோறும் உடுக்க உடையும் குடியிருக்க வீடுகளையும் ஒரே இரவில் உண்டாக்கிவிட!

காங்கிரஸ் மந்திரிகள் திட்டங்கள் போட்டு வருகிறார்கள். ஆனால் அத் திட்டங்கள் நிறைவேறுவதற்கு விசையை மாத்திரம் மாற்றினால் போதாது. இயந்திரங்களின் மற்ற உறுப்புகளையும் மாற்றியமைக்க வேண்டும். அதாவது அவற்றின் அலுவல்கள், தேசத் தேவைக்குகந்தவைகளாக மாற வேண்டும். பிரிட்டிஷாரிடமிருந்து காங்கிரசுக்கு அதிகாரம் மாறியிருப்பது ஓட்டைக் கடிகாரத்

துக்குப் புது மெயின் ஸ்பிரிங் போட்டது போலத்தான். மற்றச் சக்கரங்கள் சுழலும் தொளைகள் எல்லாம் தேய்ந்து போயிருப்பதால் கடிகாரம் சரியாக ஓடாது. ஓட்டைகளைப் "பஞ்சு" வைத்து அடித்துச் சிறிதாக்க வேண்டும். அப்பொழுதுதான் கடிகாரம் சரியாக ஓட ஆரம்பிக்கும். அந்நிய ஆட்சியின் கீழ் சுரண்டலுக்கு ஒத்தாசையாக இருந்த உத்தியோகஸ்தர்கள் ஒரே இரவில் தங்கள் குணங்களை மாற்றிக் கொண்டு புது மனிதர்களாகிவிட மாட்டார்கள். அவர்களில் பலர் அரிப்பெடுத்த கையர்கள். ரூபாய்களால் சொறிந்து கொண்டு பழக்கப்பட்டவர்கள். ஆகையால் காங்கிரஸ் அரசாங்கத்தின் முதல் அலுவல் இந்த உத்தியோகஸ்தர்களைத் திருத்துவது அல்லது மாற்றியமைப்பதுதான். இது மிகவும் கடினமான காரியம். மாற்றி யமைப்பதில் இன்னும் அதிக ஊழல்கள் உண்டாக்காத நபர்களைத் தேர்ந்து எடுக்க வேண்டும்.

பிரகாசம் காருவின் மந்திரி சபையைக் குறை கூறியவர்களில் சிலர் இப்பொழுது "அது தேவலையே" என்கிறார்கள். காரணம் மந்திரி சபை மாறுதலால் மாத்திரம் பெரிய அதிசயங்களைச் செய்துவிட முடியாது என்பது தான். நிர்மாணத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வர வேண்டியவர்கள் சர்க்காரின் உத்தியோகஸ்தர்கள். அவர்கள் நேர்மையாக நடந்து கொள்ளும்படித் திட்டங்களை மந்திரிகள் வகுத்தால் நாட்டின் கஷ்டங்களைச் சீக்கிரத்தில் அகற்ற முடியும்.

பழைய இந்திய அரசாங்கத்தின் நடை முறை மற்றவர்கள் உபயோகமில்லை என்று பரிசோதித்து உதறிவிட்ட திட்டங்களைத் தாமும் பரீட்சார்த்தமாக எடுத்துக் கொண்டு பலத்த பொருள் நஷ்டத்தை நாட்டிற்கு ஏற்படுத்தியதுதான். இங்கிலாந்தில் ஒரு கல்வி முறை பரீட்சை செய்யப்பட்டு உபயோகமற்றது என்று கைவிடப்படும். அங்கு அந்த முறையைப் பரீட்சை செய்தவர்கள் மாதம் பல ஆயிரம் சம்பளம் பெற்று இந்தியாவிற்கு நிபுணர்களாக வந்து அதே கல்வி முறைகளைப் பரீட்சை செய்து உபயோகமில்லை என்று கண்டு பிடித்து விடுவார்கள்! இத்தகைய நிபுணர் அமைப்புக் கொள்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏறிய கப்பலோடு சேர்த்தனுப்பியிருக்க வேண்டும்.

அடுத்த படியாக அந்நிய அரசாங்கம் பொது மக்களின் குறைகளைத் தீர்க்கக் கையாண்ட முறைகள். பொது மக்கள் சிமென்ட் கிடைக்கவில்லையென்று கூக்குரலிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். உடனே சர்க்காரின் தத்துப் புத்திரர்களில் ஒருவருக்குச் சிமென்ட் கண்டிரோலர் பதவி கிடைத்துவிடும். அவருக்கு ஒரு ஆபீஸ், டெலிபோன், எலக்டிரிக் வசதி எல்லாம் ஏற்பட்டுவிடும். பொதுமக்கள் ஏற்கனவே அனுபவித்ததை விட அதிகக் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும். இருந்த சரக்கும் கருப்பு மார்க்கெட்டில் ஒளிந்துகொண்டுவிடும். கண்டிரோலர், அஸிஸ்டென்ட் கண்டிரோலர், அவர் ஆபீஸ் குமாஸ்தாக்கள், பியூன்கள் அனைவருக்கும் ஒன்பதாவது மடத்தில் குரு பிரவேசித்து விட்டான் என்பதற் கறிகுறியாக அவர்கள் வாழ்க்கையில் பல மாறுதல்கள்

நேரும். கண்டிரோலர் 15,000 ரூபாய் பெறுமான மோட்டாரில் சவாரி போவார். அவர் வசிக்கும் பங்களா சமீபத்தில் 50,000 ரூபாய்க்கு வாங்கியதாக இருக்கும். இதே ரீதியில் மற்றவர்களுடைய வாழ்க்கை நிலையும் உயரும். இன்னும் சில உத்தியோகஸ்தர்கள் அதிகமாக ஏற்பட்டிருப்பார்கள். பல ஆயிரம் டன் கணக்கில் கருப்பு மார்க்கட் நடப்பது கணக்கில் கிடைக்காது. எதோ ஒரு அப்பாவி சென்னையில் ஒருபடி சிமென்டு வாங்கித் தன் வீட்டில் பெருச்சாளி வளை அடைக்கக் கொண்டுபோனால் அவனைப் போலீஸ் புலிகள் பிடித்து கொட்டிலில் அடைத்து சட்டம் உயிருடன் இருக்கிறது என்பதை நிரூபித்துவிடுவார்கள்.

இந்தக் கொள்கை மாறவேண்டும். இப்பொழுது நடப்பது ஜனநாயக சர்க்கார். ஜனப் பிரதிநிதிகள் தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது.

உதாரணமாக இப்பொழுது சென்னையில் பால் கிடைப்பது அரிதாயிருக்கிறது. இதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். பழைய அன்னிய சர்க்கார் உடனே ஒரு பால் கண்டிரோலரையும் அவருக்காக ஒரு ஆபீசையும் சிருஷ்டித்து விட்டுத் தங்கள் கடமையைச் செய்து விட்டதாகத் தூங்க ஆரம்பித்து விடுவார்கள். காங்கிரஸ் சர்க்கார் அப்படிச் செய்யமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் பால் குடிப்பவர்களுக்கும் பால் விற்பவர்களுக்கும் பிரதிநிதிகளாக அதிகாரம் வகிக்கிறவர்கள். இருவர்களுடைய ஓட்டுகளையும் பெற்று பதவிக்கு வந்தவர்கள். ஆகையால் உணவு மந்திரியே நேரில் பால் நிலைமையைப் பரிசோதிப்பார். 1942-ம் ஆண்டில் ஒரு ரூபாய்க்கு 20 வைக்கோல் பிரிகள் (ஒவ்வொரு பிரியும் 14 இராத்தல் எடை கொண்டது) கிடைத்தது. இப்பொழுது 6 இராத்தலுக்கும் எடையில் குறைவாயுள்ள பிரிகள் ரூபாய்க்கு மூன்று தான் கிடைக்கிறது. உடம்பு முழுதும் வயிறாகக் கொண்டுள்ள கால் நடைகளுக்கு அவற்றின் முக்கிய ஆகாரம் ஒன்று பதினொருகப் பெருகி விட்டது. அடுத்தபடியாக எண்பது படி கடலைப் பொட்டு இரண்டரை ரூபாய்க்குக் கிடைத்தது. இப்பொழுது ரூபாய்க்கு ஐந்து படிதான் கிடைக்கிறது. இவ்வாறே பிண்ணாக்கின் விலையும் அதிகமாயிருக்கிறது. ஆகையால் பால் விலையைக் கட்டுப்படுத்திப் பிரயோஜனமில்லை. பாலில் ஜலம் கலந்ததற்காக ஏதோ இரண்டு நபர்களைப் பிடித்துத் தலா பத்து ரூபாய் அபராதம் விதித்தும் பயனில்லை என்னும் தீர்மானத்திற்கு வருவார். பால்காரர்களுக்கு அவர்கள் எருமைகளுக்கும் பசுக்களுக்கும் வேண்டிய உணவுப்பொருள்களைப் பழைய விலைக்குக் கிடைக்கும்படிச் செய்ய முயற்சி செய்வார். அப்படிச் செய்த பிறகும் பேராசை காரணமாக ஏதாவது சிலர் அபரிமிதமாகத் தண்ணீர் கலந்து அநியாய விலைக்கு விற்றால் அவர்களுக்குத் தாட்சண்யம் காட்டாமல் கடுமையான தண்டனை விதிப்பார். அப்பொழுது தான் ராம ராஜ்யம் லபித்துவிட்டது என்று மக்களும் மகிழ்வடைவார்கள்.

அத்தகைய நெறி வழுவா நல்லறிவை நமது அமைச்சர்களுக்கு அருளுமாறு இறைவனை வேண்டுவது நமது கடமையாகும்.

செய்திக் குறிப்புகள்

★ அகில இந்திய மாதர் மகாநாட்டின் இவ் வருஷத்திய தலைவியாக ஸ்ரீமதி அநுசூயா பாய் காளே தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இந்திய மாதர் முன்னேற்றத்துக்காகப் பல வகையிலும் பணியாற்றி வரும் அம்மையார் இப் பதவிக்கு தகுதியுள்ளவராவர். சிமூர், அஷ்டி கலவர வழக்கிலே மரண தண்டனை பெற்ற கைதிகளை எமன் வாயிலிருந்து மீட்ட பெருமையும் இவ்வம்மையாரைச் சேர்ந்ததாகும். 1928-ம் வருஷம் முதல் ஸ்ரீமதி காளே பொது வாழ்விலே தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டார். குழந்தைகளின் அறிவு வளர்ச்சியிலும் ஸ்ரீமதி காளேக்கு மிகவும் கருத்துண்டு. மாதர் முன்னேற்றத்துக்காக' பாகினி சமாஜத்தையும், குழந்தைகளுக்காக 'பாலக் மந்திரை'யும், ஏழை எளியவர்களுக்காகக் கைத்தொழில் நிலயங்களையும் ஸ்தாபித்துள்ளார். 1929-ல் மத்திய மாகாணத் தொழில் கமிஷனராகச் சிலகாலம் வேலை பார்த்தார். உண்மையான உழைப்பும், சீலமும், நீண்ட கால அனுபவமும் உயர்ந்த நோக்கமும் உடைய ஸ்ரீமதி காளே அ. இ. மா. மகாநாட்டினரை இன்னும் சிறந்த முறையில் பணியாற்றும் வகையில் நடத்திச் செல்வார் என்று நாம் நம்புகிறோம்.

★ ஐ. நா'வுக்கு விஜயலட்சுமி

சோவியத் ருஷ்யாவில் இந்தியாவின் ஸ்தானிகராகப் பணியாற்றும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிதை மீண்டும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்குச் செல்லும் இந்தியக் கோஷ்டிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். தென் ஆப்பிரிக்கப் பிரதமரின் நிறவெறியைத் தாக்கி வீரத்துடன் போராடி வெற்றி பெற்ற நமது மாதர் திலகம் தற்போது தூங்கிக் கொண்டிருக்கும் ஐ. நாவுக்கு விழிப்பூட்டி மீண்டும் இந்தியாவின் நியாயக் கோரிக்கைக்கு உலக ஆதரவு பெறுவார் என்று நம்புகிறோம். அவருக்கு, இந்தியப் பெண்மைக்கே பெருமை தரும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிதைக்கு எமது வாழ்த்தும், பாராட்டும், வணக்கமும் உரியதாகும்.

★ சரிநிகர் சமானமாக

உலகத்திலேயே வேறு எந்த நாடுகளிலும் இதுவரை கடந்திராத சீர்திருத்தச் சம்பவங்கள் இந்தியாவில் சமீபத்தில் நடைபெற்றிருக்கின்றன. அவைகளில் குறிப்பிடத்தக்கது நாட்டு நிர்வாகத்தில் பெண்களுக்கு உயர்ந்த பதவிகள் கிடைத்திருப்பதே யாகும். கவியரசி சரோஜினிதேவியார் ஐக்கிய மாகாண கவர்னர் பதவி யேற்றுக் கொண்டுள்ளார். அவர் முதல் இந்திய கவர்னர் மட்டும் அல்ல. முதல் ஸ்திரி கவர்னரும் ஆவர்! ஸ்ரீமதி ராஜகுமாரி அமிருத கௌரி மத்திய சர்க்காரில் கல்வி மந்திரி பதவி யேற்றுக் கொண்டுள்ளார். பாரதியார் அன்று 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்', ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வ மிந்த நாட்டிலே' என்று பாடினார். அவர் வாக்கு இன்று நம் நாட்டிலே நிதரிசனமாக நிறைவேறி வருகிறது எவ்வளவு மகிழ்தற்குரிய விஷயம்?

★ வகுப்புக் கலவரங்களும் பெண்களும்

சில தினங்களுக்கு முன்னர் வங்கத்திலே நடந்த வகுப்புக் கலவரத்தைக் காந்தியடிகள் நேரிலே சென்று தம் அன்புப் பணியால் அடக்கியதை யாரும் மறக்க முடியாது. ஆனால் இப்போது பஞ்சாபிலே இந்தக் கலவரப் பேய் புகுந்து அளவு கடந்த வெறியுடன் ஆடுவது நாட்டின் துர்ப்பாக்கியமே. கலவரத்தில் பெண்கள், குழந்தைகள் பலர் மிகவும் கொடுமைக்குட் பட்டதாகப் பத்திரிகைகளிலே செய்தி வருகிறது. எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயினும் பெண்கள் கொடுமைப் படுத்தப்படுவது மனிதத் தன்மைக்கும், நாகரீகத்துக்கும் கேவலமாகும். ஸ்ரீமதி ராஜகுமாரி அமிருத கௌரி, ஸ்ரீமதி சுசேதா கிருபளானி, ஸ்ரீமதி சுசீலா நய்யார் முதலிய பெண்மணிகள் இந்த வெறியாட்டத்தால் தவிப்போருக்குச் செய்யும் சேவை மகத்தானதாகும். அதே சமயம் பொறுப்பாட்சி வேண்டும் மைசூரிலும், ஹைதராபாத்திலும் திக்கற்ற குழந்தைகளையும், பெண்களையும் கொடுமைப் படுத்துவதைக் கேட்டு, உள்ள முருகாக் லிருக்க முடியாது. நியாய புத்தியுள்ள எவரும் இவ்வநீதங்களைம கண்டிக்காம லிருக்க முடியாது. பெண்களைக் காப்பதில் சர்க்காரும், தேச சேவக, சேவகிகளும் இந்தச் சந்தர்ப்பத்தில் சரியான முறையில் பணியாற்ற வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்திய சுதந்திர தினத்தன்று கவியரசி சரோஜினி தேவியார் செய்ததொரு பிரசங்கத்தின் சாரம்.

இந்தியா மீண்டும் வழி காட்டும்

●

கவியரசி சரோஜினி தேவி

நாகரிக உலகின் முன் வரிசையிலே நம் நாடு மீண்டும் பெருமையுடன் திகழும். உலகமெங்கும் சமாதானத்தைப் பரப்புவதோடன்றி இன்று நம்மைச் சூழ்ந்துள்ள வறுமை, துவேஷம், பலாத்கார உணர்ச்சி ஆகிய இருளிலிருந்து ஒளி நிலையை அடைய நவ இந்தியா வழி காட்டும். சர்வ தேசங்களுடனும், என்றும், பரஸ்பர நம்பிக்கையும், அன்பும், நட்புரிமையும் பாராட்டுவதென்று இந்த நாடு உறுதி கொண்டுள்ளது.

உலகெங்குமுள்ள சுதந்தர நாடுகளே, எங்கள் நாட்டின் சுதந்திர தினமாகிய இன்று, உங்களை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறோம். இன்னும் சுதந்திரம் அடையாதிருக்கும் நாடுகள் அனைத்தும் அதி சீக்கிரத்தில் அடிமைத்தனத்திலிருந்து விடுபட வேண்டுகிறோம். எங்கள் சுதந்தரப் போராட்டம் மகத்தானது. அநேக வருஷங்களாக, ஏராளமான உயிர்த் தியாகத்தையும் கொண்ட உன்னதப் போராட்டம். சுதந்தரப் போரில் இந்த நாட்டுப் பெண்களின் பங்கு மகத்தானது. இந் நாட்டுப் பெண் மணிகள் காளி தேவியைப் போன்ற வீராங்கனைகளாக மாறி விடுதலைப் போரிலே கலந்து கொண்டது சரித்திரப் பிரசித்தியானது. ஏழை, செல்வர் என்ற பாகுபாடு இன்றி, ஆண் பெண் என்ற பேதம் இன்றி சுதந்தரம் ஒன்றே லட்சியமாகக்கொண்டு நாங்கள் போராடினோம். இந்தப் போரிலே இளைஞர், கிழவர் என்றோ படித்தவன், படியாதவன் என்றோ, ஞானி, அஞ்ஞானி என்றோ, எவ்விதமான பேதமும் ஏற்பட்டதில்லை. ஒரே லட்சியத்துக்காகத்தான் அனைவரும் போராடினோம்.

உலக சரித்திரத்திலேயே இது வரை நடக்காத புரட்சி, ரத்தக் களறியின்றி நடந்ததொரு பெரும் புரட்சி இந்தியாவில்தான். அது வெற்றி பெற்றது இங்கே தான். இதற்காக நாங்கள் அந்தத் தனி மனிதனுக்கு—அடக்கி ஒடுக்கப்பட்ட ஜன சமுதாயத்தின் கண் கலக்கத்தைத் துடைப்பதே தமது லட்சியமாகக் கொண்ட அஹிம்ஸா மூர்த்தியும், எங்களை நேரான பாதையில் நடத்திச் சுதந்தர லட்சியத்தை அடையச் செய்தவருமான மகாத்மா காந்தியடிகளுக்கு எங்கள் மனப் பூர்வமான வந்தனத்தை உரியதாக்குகிறோம்.

அஹிம்ஸா தருமமொன்றைத் தவிர அவருக்கு வேறு திட்டம் எதுவும் இல்லை. தியாகமும், நன்மைக்காகத் துன்பத்திற்குள்ளாவதும்தான் அவருடைய ஆயுதங்கள். பலாத்காரத்தைத் துணை கொண்ட ஏகாதிபத்தியத்தை

அவர் தலைமை சாத்விகத்தால் வென்றது. அமரத்துவமும், அமானுஷ்ய சக்தியும்கொண்ட அந்தமனிதரை நாங்கள் வணங்குகிறோம். எங்களுக்கு மட்டும் இன்றி உலகத்துக்கே ஒரு புது வாழ்வையும், அந்த வாழ்வுக்கான பாதையையும் வகுத்த மகானை— அந்தச் சத்தியத் தீர்க்கதரிசியை வணங்குகிறோம். எங்கள் தலைவராக அவர் இருப்பதுபற்றி பெருமையும், அளவற்ற மகிழ்வையும் அடைகிறோம்.

இந்தியாவின் விடுதலைக்காகப் பாடுபட்ட ஏனைய நாடுகளின் நண்பர்களுக்கு எங்கள் நன்றியும் வந்தனமும் உரியதாகும். நாட்டின் விடுதலைக்காக எந்தப் பிரதிபலனும் கருதாத, புகழோ, செல்வமோ எதுவுமே வேண்டாது உயிரும், உடமையும் தியாகம் செய்து மறைந்த, ஊர் பேர் தெரியாத் தியாகிகளுக்கு வணக்கம். அவர்கள் உடல் மறைந்தாலும் அமரர்கள். நம்மிடையே இன்றும் இருப்பவர்கள்.

எங்களை ஆண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந் நாட்டிலிருந்து மறைந்துவிட்டது. விக்டோரியா ராணியாரின் காலத்தில் டிஸ்ரேலியால் சமைக்கப் பெற்ற சாம்ராஜ்யம் அதே ராணியாரின் கொள்ளுப் பேரரான மவுண்ட் பேட்டன் துரையால் கலைக்கப் பெற்றுவிட்டது. அவர்களுக்கும் எங்கள் வந்தனம்!

இனி நாம் கனவு காணும் புது உலகத்தை நிர்மாணிப்பதில் இந்தியா உரிய பங்கை எடுத்துக் கொள்ளும். அறிவும், ஆண்மையும், உண்மையும், நேர்மையும், அன்பும், அமைதியும், நீதி நெறியும் பரிபூரணமான அளவில், உயர்வு தாழ்வற்ற வகையில் உலகம் எங்கும் பரவும் பான்மை கொண்டு இந்த நாடு உழைக்கும். சுதந்தர இந்தியா, தனக்கு மட்டும் இன்றி—உலகமும் உய்யும் வகைக்கும் வழி காட்டி நடத்திச் செல்லும்.

✻

வழிகாட்டி

காந்தியடிகள் மானிட ஜாதியின் எதிர்கால வாழ்க்கைக்கு வழி காட்டியா யிருக்கிறார். அவர் தமது லட்சிய வாழ்க்கையில் உறுதியாக நிற்கிறார். அவர் உறுதி பிறருக்குத் தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் அளிக்கிறது. சகல 'சக்திகளிலும்' உயர்ந்த மனோசக்தியால் அக்கிரமங்களை எதிர்த்து நிற்கத் துணிச்சலுண்டாகிறது.

கொடி பறக்குது

"லலிதா"

ராகம் - மாண்டு　　　　　　　　　　　　　　　　　　தாளம் - ஆதி

கொடி பறக்குது கொடி பறக்குது
　　கூடி யோடி வந்து பாருங்கள்
மிடி துலைந்திடும் மதமொழிந்திடும்
　　மிக்க மகிழ்வுடன் வாருங்கள்　　　　　　(கொடி)

எத்தனை யோவீரர் ஏங்கி வேண்டியது
　　இன்று பலித்தது பாருங்கள்
சுத்த மனத்துடன் தூய கொடியிதை
　　நித்தம் பணிந்திடவாருங்கள்　　　　　　(கொடி)

சத்திய அஹிம்ஸைத் தண்ணீரைப் பாய்ச்சியே
　　தியாகிகள் வளர்த்த பயிரிதை
உத்தியோகத்திற்கு பித்து விடாமலே
　　உள்ளன் புடன் ஏத்த வாருங்கள்　　　　　　(கொடி)

ஜாதிமதச் சண்டை ஒழிந்த அன்பது
　　சாசுவத மென்றிதோ ஆடுது பார்
நீதியை நாட்டியே நாட்டை யாள்வோமென
　　நிமிர்ந்து நின்றிதோ ஆடுதுபார்　　　　　　(கொடி)

காவியும் வெள்ளையும் பச்சையும் கொண்டது
　　கதிர வனுடன் பேசுதுபார்
ஜீவர்களுக் கென்றும் இன்பந்தருந்தர்ம
　　சக்கரங் கொண்டொளி வீசுதுபார்　　　　　　(கொடி)

அணுச்சக்தி வேண்டாம ஹிம்ஸையாலிந்த
　　அவனியாள் வோமென்றுடுதுபார்
விணுக்கு ரத்தத்தை சிந்தாது அன்பால்
　　வீரராய் வாழுங்களென்குது பார்　　　　　　(கொடி)

ஆணும் பெண்ணும் என்றும் அமைதியைப்பெற
　　ஆடிக் கொடியைப் பணிவோமே
அணுக்கணுவான ஆதி சக்திதந்த
　　ஆனந்தக் கொடியைப் பாடுவோமே.　　　　　　(கொடி)

✻

குழந்தைகளைப் பெற்றுவிடுவது சுலபம்! ஆனால் அவைகளை வளர்ப்பதுதான் சிரமம். இன்று அனேகத் தாய்மார்களுக்கு குழந்தை வளர்ப்புப் பிரச்னை சிக்கலாயிருப்பது நாம் அறிந்ததே. ஆகையால்தான் 'வளர்த்தவள் அறிவாள் பிள்ளையருமை' என்று புது மொழி உண்டாயிருக்கிறது போலும்!

நமது குழந்தைகள்

டாக்டர் நாமகிரி

"பெற்றவளறிவாள் பிள்ளையருமை" என்றொரு பழமொழி உண்டு. என்னைக் கேட்டால் "வளர்த்தவளறிவாள் பிள்ளையருமை" என்று பழமொழியை மாற்றியமைக்க வேண்டுமென்பேன்.

பிறவியிலிருந்து பூரண வயதடையும் வரையில் நோய் வாய்ப்படாத குழந்தையே இல்லை என்று கூடத் திடமாய்ச் சொல்லிவிடலாம். இதற்கும் பல ஆயிரம் குழந்தைகள் மிகவும் இளம் பிராயத்திலேயே செத்து விடுவதற்கும் பெற்றோர்களின் அறியாமையே காரணமாகிறது என்றால் மிகையாகாது.

என் குழந்தைக்குச் சளிகூடப் பிடித்தது கிடையாது. என்று சொல்லிக்கொள்ளும் தாயைக் கோயிலில் வைத்துத் தொழ வேண்டும். ஏனெனில் அதற்காக அவள் செய்திருக்கும் தியாகம் மகத்தானது.

பல பெற்றோர்கள் தமது கடமைகளை உணர்வதேயில்லை. தங்கள் குழந்தைகளிடம் தேவையான அளவுக்குக் கருத்தோ, அக்கரையோ கொள்ளாதவர்களும் இருக்கிறார்கள். கேவலம் மிருக ஜாதிகளில் இருக்கும் அக்கரையும் அனுதாபமும் கூட மனுஷ்ய ஜாதியில் இருப்பதில்லை! என்ன பரிதாபம்! நாய்க்குட்டிகள் பால் குடித்துக் கொண்டிருந்தன. ஒட்டிப்போன வயிற்றை ஆறு குட்டிகள் இரப்பரைப் போல இழுத்துக் குடித்துக் கொண்டிருந்தன. தாய்க்கு ரொட்டியும் பாலும் கொண்டுபோய் வைத்தேன். அந்த நாய் எழுந்திருக்கவேயில்லை. ஆச்சரியத்தோடு கவனித்துக் கொண்டேயிருந்தேன். குட்டிகள் வயிறு நிரம்பியவுடன் தாய் எழுந்து போய் ஆவலோடு தன் ஆகாரத்தை யுண்டது.

என் ஓர்ப்படி குழந்தைக்கு சாதம் ஊட்டிக்கொண்டிருந்தாள். மைத்துனர் ஆபீஸிலிருந்து வந்தவர், "கமலி, இன்று சினிமாவுக்குப் போகலாமா?" என்றார். அவ்வளவுதான். விளாங்காயளவு பெரிய சோற்றுருண்டையை கமலம் குழந்தை

வாயில் திணித்தாள். அது விழுங்க முடியாமல் திணறிற்று. "எங்கேயாவது போவதென்ருல் உடனே இந்தச் சனியனுக்கு வந்துவிடும். ஊசித் தொண்டை தாழி வயிறு. முழுங்குடா, கட்டேலே போறவனே" என்று முதுகில் ஒரு அறை விட்டாள். குழந்தை வீறிட்டு அழுதது.

கமலம் பல விரதங்கள் செய்து பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளைதான் அவன். அவன்மீது அவளுக்கு அன்பில்லையா? "கமலி, குழந்தைக்கு ஆகாரம் ஊட்டும்போது அதைப் பய முறுத்தினல் அதன் ஜீரணக் கருவிகள் கெட்டுவிடும்" என்று நான் சொன்னதற்காக கமலம் என் மீது எப்படிச் சீறினுள். "ஆமாம், இப்படி நீங்கள் சொல்வதால்தான் இது இப்படி அடம் பிடிக்கிறது" என்று இன்னெரு அறை வைத்தாள் முதுகில். அவள் பெத்த பிள்ளை மீது அவளுக்கு அன்பில்லையா? கேவலம் அறிவில்லாத ஜந்துவாகிய நாய்க்குத் தன் குட்டி மீதிருக்கும் பாசம் பல தவங்கள் செய்து பெற்ற தன் ஒரே பிள்ளை மீது கமலிக்கில்லையா? இயற்கையன்னை சிருஷ்டிச் சக்கரம் சலியாமல் ஓட வேண்டுமென்று பெண்ணுள்ளத்தில் ஏற்படுத்திய தாய்மை உணர்ச்சி கமலிக்கு மாத்திரம் இல்லாமல் போய் விட்டதா? சென்ற வாரம் அவள் வேலைக்காரக் குட்டியிடம் குழந்தையை விட்டு விட்டுத் தாரா சௌத்ரி நடனத்திற்குப் போயிருந்த பொழுது அந்தக் குட்டி குழந்தைக்கு நிலக்கடலை உருண்டையைக் கொடுத்து விட்டதால் குழந்தைக்கு ஜுரமும் வாந்தியுமாக இருந்த போது, பாவம், கமலி என்ன பாடுபட்டாள். வீட்டில் டாக்டரை வைத்துக்கொண்டு எத்தனை டாக்டர்களை அழைத்து வர என் மைத்துனரை ஏவினுள். எத்தனைத் தெய்வங்களுக்குப் பிரார்த்தனைகள் செய்துகொண்டாள் திருப்பதிக்கு வேண்டிக் கொண்டு தன் தங்க ஒட்டியாணத்தையே முடிந்து வைத்து விட்டாளே. அதற்குள் அவள் ஏன் குழந்தைக்கு வியாதி ஏற்படும் என்று தெரிந்தும் இப்படி நடக்கிருள்? அவள் இண்டர் மீடியேட் வரையில் படிக்க வில்லையா? வகுப்பில் முதன்மையாகத் தேற வில்லையா?

இந்தக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். இவற்றிற்கெல்லாம் பதில் "அறியாமை" என்று வந்தது. இந்த அறியாமையைப் போக்க ஒரு கட்டுரை எழுதுவ தென்ருரம்பித்து நடுநிசியில் உட்கார்ந்து இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். இதைப் படிக்கும் சகோதரிகள் தம் தவறுகளை உணர்ந்து தமது குழந்தையிடத்தில் தமது கடமைகளைச் சரிவர நடத்துவாளேயானல் என் தூக்கம் கெட்டது வீணுக வில்லை என்று சந்தோஷப் படுவேன்.

"குழந்தை நோய் கள்ள மறியாது." சிறிது சளி பிடித்துக் கொண்டால் நாம் படாத பாடு படுகிறோம். 102 டிகிரி ஜுரமிருக்கும் போது கூட குழந்தைகள் விளையாடிக் கொண் டிருப்பார்கள். ஆகையால் புத்திசாலியான தாய் தன் குழந்தையின் குறிகள் அதிக ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். சரீரத்தின் ஏதாவதொரு பாகத்தில் அல்லது அவயவத்தில் ஏதாவது வித்தியாசமாகத் தோன்றினல் உடனே

ஏதாவது வியாதியின் குறியாக அது இருக்கக் கூடுமோ என்று நிதானித்துப் பார்த்துத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

குழந்தைகளை இரு பாகங்களாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். பேசத் தெரிந்த குழந்தைகள்; பேசத் தெரியாத குழந்தைகள். பேசத் தெரிந்த குழந்தைகள் பாடு சிறிது தேவலை "என் வயிற்றில் என்னவோ செய்கிறது' "காலை வலிக்கிறது" என்று குழந்தை சொன்னால் குழந்தையின் தேக சுகத்தில் ஏதோ கெடுதல் நேர்ந்திருக்கிறது என்று ஊகிக்கலாம். கோளாறு என்னவென்று தெரியா விட்டாலும், முன்னெச்சரிக்கையாக இருக்கவாவது முடியும்

சில குழந்தைகள் பெரியவர்கள் தங்களைக் கவனிக்க வேண்டுமென்று விளையாட்டுக்காகவதோ வியாதி யிருப்பதாகச் சொல்வார்கள். அல்லது பாசாங்கு செய்வார்கள். அதனால் குழந்தை "வயிற்றை வலிக்கிறது' என்றால் உடனே டாக்டரை அழைக்கவோ அல்லது மருந்து கொடுக்கவோ ஆரம்பித்துவிடாமல், குழந்தையின் முகக் குறியைக் கவனிக்க வேண்டும். உண்மையில் சுகக்கேடுண்டா யிருந்தால் முகத்தில் விஷமக் குறி தோன்றும்.

பேசத்தெரியாத சிறு குழந்தைகளின் குறிகளைத் தாயார் இன்னும் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். குழந்தை அழுதால் உடனே அதற்கு வயிறு பசிக்கிறது என்று தீர்மானித்து ஆகாரத்தைத் திணிக்கும் தாய் பெருத்த தவறு செய்கிறார். குழந்தைக்குச் சிறிதுகாலம் பசிக்கும் போது ஆகாரம் ஊட்டாமலிருந்தால் பெருத்த அபாயம் ஒன்றும் நேர்ந்துவிடாது. ஆனால் அதற்குப் பசிக்காத போது ஆகாரத்தைத்திணித்தால் அஜீர்ணமும் அதைத் தொடர்ந்து இன்னும் பல நோய்களும் ஏற்படும்.

சாதாரணமாக பேசத்தெரியாத குழந்தைகளிடம் நோய்க்குக் காரணமாக வெளியில் தோன்றக்கூடிய குறிகள் பின்வருமாறு.

1. பேதி.

2. வாந்தி.

3. மலம் போகாதிருத்தல்.

4. சளி அல்லது மூக்கு ஒழுகல்.

5. இருமல்.

6. கழுத்தைச் சுற்றி சதைக் கோளங்கள் பெருத்திருப்பது.

7. தொண்டைப் புண்.

8. குழந்தை பசிக்கழா திருத்தல். அதாவது சாதாரணமாக ஆகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய சமயத்தில் ஆகாரம் புகட்டா திருந்தும் குழந்தை அழா திருத்தல்.

9. எடை குறைதல்.

10. மூக்கிலிருந்து இரத்தம் வடிதல்.

11. கைவிடாமல் அழுதல் அல்லது தூங்காமல் புரளல்.

12. வயிற்றைத் தொட்டால் அழுதல்.

13. சருமத்தில் தத்துகள் தடிப்புகள், நிற வேற்றுமை.

14. பூட்டுகளில் நோய்.

15. கண்களில் சிவப்பு.

16. காதுகளைத் தொட்டால் அழுவது.

17. மலத்தோடு இரத்தம் அல்லது சீழ் கலந்து போவது.

18. சிரமப்பட்டு மூச்சு விடுவது,

19. வலிப்பு.

20. மூத்திரத்தில் இரத்தம்.

21. தொண்டைக் கட்டு.

21. மூர்ச்சை; ஸ்மரணை யில்லாமல் கிடப்பது.

22. தலை நில்லாமல் மயங்கி விழுவது.

23. திக்கிப் பேசுவது.

24. நொண்டுவது.

இந்தக் குறிகளையும் அவை குறிப்பிடும் வியாதிகளையும் குறித்து எழுதுவதா யிருந்தால் பல புத்தகங்கள் வேண்டும். அதோடு தாய் குறிகளை கவனித்துப் பரிகாரம் தேட வேண்டுமென்பதுதான் என் நோக்கம். தாய்மார்களே சிகிச்சை செய்ய வேண்டு மென்னும் எண்ணமே கிடையாது. ஆனல் மிகவும் சாதாரணமான வியாதிகளுக் கெல்லாம் டாக்டரைத் தேடி யலையாமல் தானே சில எளிய சிகிச்சைகளைச் செய்வதும் உசிதம்தான்.

பேதியாவது எத்தனையோ வியாதிகளுக்குக் குறியாகும். அவற்றை யெல்லாம் இங்கு விவரிக்க முடியாது. சுமார் பத்துப் பனிரண்டு முறை துர்நாற்றத்தோடு நீராக பேதியானல் ஏதோ கிருமிகள் சேஷ்டை என ஊகிக்கலாம். ஆகையால் உடனே டாக்டர் உதவியை நாட வேண்டும். கை வைத்தியம் இங்கு உதவாது. பாட்டியும் அடுத்தாத்து அம்மாமியும் சொல்லும் வைத்தியங்களை ஒன்று மாற்றி ஒன்று செய்துகொண் டிருந்தால் அபாயம் நெருங்கி விடலாம்.

ஒருவேளை அஜீரணமே காரணமாக இருக்கலாம். அல்லது கொடுத்த ஆகாரம் போதாமலுமிருக்கலாம். கொழுப்புகள் ஆகாரத்தில் அதிகமாயிருந்தாலும் இவ்வாறு பேதியாகலாம்.

மலச் சிக்கல்தான் குழந்தைகளின் பல வியாதிகளுக்குக் காரணமாகிறது. அதை உடனே கவனித்து அகற்றி விட்டால் நம் தமிழ் நாட்டில் இளம் குழந்தைகளின் மரண விகிதத்தை சரிபாதியாகக் குறைத்துவிடலாம் என்று கூட சொல்லுவேன். மலச் சிக்கலை அகற்ற பேதிக்குக் கொடுத்தால் மட்டும் போதாது. அதன் காரணத்தை யறிந்து அகற்ற வேண்டும். ஆகாரத்தில் நிண பதார்த்தங்கள் அதிகமாயிருந்தாலும், போதுமான மாப்பண்டங்கள் இல்லாம லிருந்தாலும் நைத்திரோ ஜனிதங்கள் அதிகமானலும், சத்துள்ள ஆகாரமில்லாததாலும், ஆகாரக்குறைவினலும் கெட்ட பழக்கங்களாலும், போதுமான தேகப் பயிற்சி யில்லாமையாலும் நரம்புக்கோளாறுகளாலும் தாயின் அஜாக்கிரதையாலும் மலச் சிக்கல் ஏற்படும். குடல் கோளாறுகளால் மலம் போவது தடைப்படுவது மிகமிகத் துர்லபம். நூற்றுக்குத் தொண்ணூறு குழந்தைகளுக்கு மலம் தடைப்படுவது மிக எளிய முறைகளில் தவிர்க்கப்படலாம்.

ஜல தோஷம் பிடித்திருக்கிறது என்பதை அறிய மூக்கில் சளி ஒழுகும் வரையில் காத்திருக்கும் தாய் தன் கடமையில் தவறியவளாகவே கருதப்படவேண்டும். சற்று முன் எச்சரிக்கையாக இருந்தால் சளி பிடிக்காமல் தடுத்து விடலாம். மூக்கு ஒழுக ஆரம்பிப்பதற்கு முன் குழந்தை மூக்கை புறங்கையால் தேய்த்துக் கொள்ளும். 'அஸிங் அஸிங்' என்று தும்மும். குழந்தை காரண மில்லாமல் தும்மினல் சளி பிடித்துக்கொள்ளப்போகிற தென்று தெரிந்து முன்னெச்சரிக்கையாக ஒரு வெள்ளைத் துணி

பின் மூலையைத் திரித்து எண்ணெயில் நனைத்து மூக்கில் விடவேண்டும். மலச் சிக்கலிருந்தால் உடனே அதை நீக்கச் சிறிதளவு மில்க் ஆப் மக்னீஸியா அல்லது வேறேதாவது மலத்தை இளக்கி விடும் மருந்தைக் கொடுக்க வேண்டும்.

மக்னீஸியம் கார்பனேற்று 6 ஸ்பூன் ஸோடியம் பைகார்ப்பனேற்று ஒரு ஸ்பூன் அனீதி திரவம் 3 ஔன்ஸ், பாரபின் தைலம் ½ ஔன்ஸ் இவற்றை நன்ரு யரைத்துக் குழப்பிக் கொடுத்தால் பச்சிளங் குழந்தைகளுக்கு நன்ருக மலப் பிர விருத்தியாகும்.

கோரோசனை மாத்திரையும் கஸ்தூரி மாத்திரையும் வயதுக் கேற்றவாறு தேனில் இழைத்துக் கொடுக்கலாம்.

மூக்குச் சளியோடு இரத்தம் கலந்து வந்தால் உடனே வைத்தியரிடம் குழந்தையைக் காட்ட வேண்டும்.

இருமல்

குழந்தை இருமினுல் அதற்கு முதல் காரணம் மலச் சிக்கலாக இருக்கலாம். மலம் குடலில் தீய்ந்து, கெட்ட வாயுக்கள் மேல் நோக்கி வருவதால் தொண்டை புண்ணுகி ஜலதோஷமும் இருமலும் சேர்ந்து வரலாம். மலச் சிக்கல் தீர மருந்து கொடுத்தால் இருமல் தானே நின்று விடும். ஐந்து வயதிற்கு அதிகமான குழந்தைகளுக்குப் புகைந்து புகைந்து இருமினுல் ஐந்து மிளகைப் பொடித்து ஒரு ஸ்பூன் ஆமணக்கெண்ணெயில் பொரித்து வாயில் விட்டால் ஒரே நாளில் குணமாய் விடும். அதைவிடச் சிறிய குழந்தைகளுக்கு மேலே கொடுத்திருக்கும் மக்னீஸியம் கார்பனேற்று மருந்தைக் கொடுக்கலாம்.

மாசிக்காயைத் தேனிலிழைத்து ஒரு குச்சியில் பருத்தியைச் சுற்றி தொண்டைக்குள் தடவினுல் குணமுண்டாகும்.

கழுத்தைச் சுற்றி சதைக் கோளங்கள் பெருப்பதற்குத் தொண்டைப் புண்கள் காரணமாக இருக்கலாம். மற்ற ஏது ஒன்று மின்றி இக் கோளங்கள் பெருத்தால் சுவாசாசய நோய்களுக்குக் காரணமாகலாம். தலையில் பேன் பிடித்திருக்கும் பெண் குழந்தைகளுக்கு கழுத்துக் கோளங்கள் பெருப்பதுண்டு.

விரல்களைக் கடிக்கும் குழந்தைகளின் முழங்கைக்குப் பின்னிருக்கும் கோளங்கள் பருத்திருக்கும்.

பசி மந்தத்திற்குப் பல காரணங்களுண்டு. அவற்றில் முதன்மையாக வருவது பெற்ருேர்களின் 'செல்லம்' குழந்தையைச் சாப்பிடச் சொல்லி வருத்துவதும் பலவந்தம் செய்வதும் தவறு. குழந்தைக்கு அதே ஒரு விளையாட்டாகிவிடும்! நான்கு மணி சாவகாசம் கொடுக்காமல் ஆகாரம் திணிப்பதால் ஜீரணக் கருவிகள் தமது அலுவல்களைச் சரிவரச் செய்ய அவகாச மில்லாமல் சீர்கெட்டுப் பசி மந்தம் ஏற்பட்டு விடும். பலவந்தமாகக் குழந்தைக்கு ஆகாரம் கொடுக்காமல் விட்டிருப்பதாலேயே இதை ஓரளவுக்கு நிவர்த்தி செய்து விடலாம்.

எடை குறைவுக்கும் பல காரணங்களுண்டு. முக்கியக் காரணம் புஷ்டியுள்ள ஆகாரமின்மைதான். மற்ற குறிகளோடு ஒப்பிட்டுப் பார்த்து

சிகிச்சை முறையை வகுக்க வேண்டும்.

வயிற்றைத் தொட்டதும் குழந்தை அழுதால் உடனே அப்ஸண்டிஸைடிஸ் என முடிவுகட்டி விடக் கூடாது. வயிற்றில் காற்று சேர்ந்தால் குழந்தை அதிக வேதனைப்படும். எனிமா கொடுத்து நிவர்த்தி செய்து விடலாம். வயிற்றுப்பிசத்தோடு அஜீரணமும் சேர்ந்தால் வயிற்று வலியால் குழந்தை அழும்.

சருமத்தில் தத்துகளும் வெடிப்புகளும் வெய்யில் காலத்தில் சாதாரணமாக வேர்க்குருவோடு சேர்ந்து காணலாம். ஆனால் மற்றக் குறிகளை கவனித்து சின்னம்மையாக இருக்கலாம் என்றும் ஊகிக்க வேண்டும். அம்மைக் குத்துவதாலும் டைபாய்டு இஞ்குலேஷன் செய்வதாலும் சருமம் தடித்து இருக்கலாம். சிறிது பிரவாள பஸ்பம் கொடுத்தால் தடிப்பு மறைந்து விடும். ஒரு காரணமுமில்லாமல் அலேர்ஜியால் உடம்பில் தடிப்புகளும் வேர்க்குரு போல வெடிப்புகளும் உண்டாகலாம் அர்ட்டிகேரியாவிலும் சருமம் திடீரென்று தடிப்பதும் மறைவதும் உண்டு.

தோலின் நிறம் மாறி யிருப்பதற்குத்திமிர்க்குஷ்டம் காரணமா யிருக்கலாம் என்பதை மறக்கக் கூடாது. இளம் பிராயத்தில் இந்த வியாதி எளிதில் கட்டுப் படுத்தக் கூடியதாகையால் சருமம் நிறம் மங்கி யிருந்தால் தேமல் என்று வாளா யிருந்துவிடக் கூடாது. வைத்தியரிடம் காட்டியோ அல்லது தாமாகவேயோ பரிட்சித்துப் பார்ப்பது அவசியம்.

குழந்தைகள் எப்பொழுதும் சிரித்து விளையாடிக்கொண்டிருக்கும் சுபாவம் உள்ளவை. அதற்குப் பதிலாத அழுது கொண்டோ சுருண்டு படுத்துக் கொண்டோ முகத்தைச்சுளித்துக்கொண்டோ இருந்தால் தேக சுகம் கெட்டிருக்கலாம் என நினைத்து மற்ற படி இன்னும் ஏதாவது குறிகள் இருக்கின்றனவா என்று பரிசோதித்தறிய வேண்டும். இது தாயின் கடமையாகும்.

மழலை இன்பம்

சிற்பம், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய லளித கலைகளை ரஸிப்பதற்குத் தனி 'ஞானம்' வேண்டும், ஆனால் சின்னஞ் சிறு குழந்தைகளின் மழலைச் சொல்லின் இனிமையை அனுபவிக்கத் தனி 'ஞானம்' எதுவும் வேண்டாம். எதுவுமே அறியாத முட்டாளும் ரஸித்து, மகிழ்வு கொள்ளச் செய்வது குழந்தையின் மழலைச் சொல்லேயாகும்.

அவள் மிகச் சிறந்த கதாசிரியையாகப் பேர் பெற விரும்பினாள். எழுதுவதிலும் திறமை யிருந்தது. திறமை ஆசையைத் தூண்டுமல்லவா? போட்டியில் பரிசு பெற வேண்டாமா? ஒரு அற்புதமான கதை எழுத வேண்டும்! அது அனுபவ பூர்வமான கதையாகவும் இருக்க வேண்டும். ஆனால் கற்பனை செய்ய முடியாத 'அனுபவத்தை' அங்கே, தன் தோழியின் வீட்டில் அவள் பெற்றவுடன் ஆசை எல்லாம் பறந்து விட்டது!........

* கதாசிரியை

குமாரி கிருஷ்ணா குல்கர்னி, பி. ஏ., (ஆனர்ஸ்)

பிரதிபா ஒரு கதாசிரியை. "வருங்காலத்தில் தான் பிராபல்யம் அடைவது நிச்சயம்; பிரதி பத்திரிகையிலும் தன் நவீனங்களைப் பற்றிய பாராட்டுகள் வெளிவரும்; தன் கதைகளில் சில பேசும் படங்களாகவும் எடுக்கப்படலாம்; அதன் விளைவாகத் தன் புத்தகங்கள் ஆயிரக் கணக்கில் விற்பனையாகும்; ரசிகர்கள் ஒவ்வொருவர் வாயிலும் தன் பெயர் ......" இம்மாதிரி எண்ண ஓட்டம் அவள் மனதுக்கு ரொம்பவும் பிடித்தது. ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு முறையாவது அவள் இத்தகைய இன்பக் கனவில் ஈடு படுவது வழக்கமாகி விட்டது.

வெளியே எங்கேயாவது உலாவச் சென்றால் சுற்று முற்றிலும் உள்ள இயற்கை எழிலில் அவள் சொக்கிப்போவாள். "இக்காட்சியின் வனப்பை இனி எழுதும் ஏதாவது சிறுகதை ஒன்றில் வர்ணிக்க வேண்டும்" என்று அவள் உடனே திட்டம் போட்டு விடுவாள். அவள் ஏதாவது சிறுகதையை எழுத ஆரம்பிக்கும் போதே எடுத்த எடுப்பிலேயே அவளுக்குச் சந்தேகம் தட்டும். நீல வானத்தில் சஞ்சரிக்கும் ஒரு மேகத்தைப் பற்றிய வர்ணனை என்று வைத்துக் கொள்வோம். "பரந்த வானவெளியில்—ஜிகினா இட்ட மக்மல் வெல்வெட்டைப் போன்ற அந்த நீலத் திரையில்—அடிவானத்திலிருந்து அவ் வெண் முகில் மெல்ல, மெல்ல மேல் நோக்கி மிதக்க ஆரம்பித்து ......"—'சே இயற்கை எழிலை இந்த மாதிரி செயற்கைப் 'புறாக் கூண்டு' அறையில் உட்கார்ந்து கொண்டு உயிரற்ற மேஜையின் சாந்நித்யத்தில் எழுத முடியமா என்ன? இயற்கை வனப்பை இயற்கைச் சூழ்நிலையில் இருந்து வர்ணிப்பதுதான் இயற்கை

* மொழிபெயர்ப்பு: வே. ராமராவ்

யானது—வர்ணனையும் உண்மையாக இருக்கும்—" என்ற எண்ணத்தினால் தூண்டப்பட்டு கையில் நோட்டுப் புத்தகம், பேனா இவற்றுடன் அவள் ஊருக்கு வெளியே பச்சைப் பசேலென்ற பூஞ்சோலை அல்லது தென்னந் தோப்பு ஒன்றை நாடிச் சென்று மரகதப் பட்டு விரிப்பு போன்ற புல் வெளியில் உட்கார்ந்து ஆகாயத்தைப் பார்த்து எதையாவது கிறுக்கித் தள்ளுவாள். அப்படித் தன்னை மறந்த நிலையில் இருக்கும் பொழுது, ஒரு சிகப்புக் கட்டை எறும்பு கடித்தலினாலோ, கழனிக் காட்டில் வேலை செய்யும் காரிகையர்களில் ஒருவள் கையரிவாளுடனும், தலையில் புல்லுக் கட்டுடனும் தன் ஆடை சலசலக்க விரைந்து நடக்கும் சப்தத்தினாலோ, துணுக்குற்று வீறிட்டுக் கீச்சுக் குரலில் கத்தி வீடு திரும்புவாள். இம் மாதிரி நிகழ்ச்சியின் போது ஒரு முறை அவளுடைய விலை உயர்ந்த பார்க்கர் பேனா புல் வெளியில் எங்கேயோ விழுந்து தொலைந்தது. அந்தச் சம்பவத்திலிருந்து இத்தகைய முயற்சிகளில் அதிகம் ஈடுபடுவதில்லை.

'விக்கிபாமுக்கு நோபல் ப்ரைஸ் கிடைத்தது' என்ற இம் மாதிரி செய்தி செவியில் விழுந்ததும், அவளை யறியாமலேயே ஒரு ஆழ்ந்த பெருமூச்சு வெளி வரும். ஜோலேண்டோ போல்ட்ஸுக்கு ஒரு இலக்கிய சிருஷ்டியில் நாலாயிரம் பவுன்கள் பரிசு கிடைத்தது என்று படித்ததும், அவள் வெகு நேரம் அந்த ஆசிரியையின் போட்டோவையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் எங்கேயோ படித்தாள்—அலெக்ஸாண்டர் க்யூப்ரினின் "யாமா" என்ற புத்தகம் முப்பது லக்ஷம் பிரதிகள் அச்சிட்டு விற்பனையாயின என்று. அது வரையில் அச்சிட்டு வந்துள்ள தன் முப்பது சிறு கதைகளில் "ஏதாவது ஒன்றைப் பாராட்டியேனும் யாருமே ஒரு வார்த்தைக் கூட இது வரையில் சொல்லவில்லையே என்பதைப் பற்றி நினைக்கையில்,

அவளுக்கு என்னமோ மாதிரித்தான் இருந்தது.

பதினைந்தாம் வயதிலிருந்தே அவள் கதை எழுத ஆரம்பித்திருந்தாள். அவளுடைய முதல் கதை அவள் அணிந்திருந்த புது ஜதைப்பாதரட்சையைப் பற்றியது. அக் கதையை வீட்டில் எல்லோரும் பாராட்டினார்கள். அவளுக்குத் தன் கனவு நனவானதாகத்தோன்றிற்று. உள்ளத்தில் மட்டற்றமகிழ்ச்சி. அவளுடைய மூத்த சகோதரன் ஒருவன் மெடிகல் காலேஜில்வாசித்து வந்தான். அவன் தன் காலேஜில் நடக்கும் தமாஷ்களையும் ரஸமான சம்பவங்களைப் பற்றியும் அவளுக்கு அடிக்கடி சொல்லி வருவதுண்டு. மறுதினம் அப்படிப்பட்ட சம்பவம் ஒன்றை அடிப்படையாகக்கொண்ட சிறுகதை ஒன்றை எழுதி அவனுக்குக் காட்டி "நான் இதைப் பத்திரிகையில் பிரசுரத்துக்குத் தரப் போகிறேன்" என்று சொன்னாள். "ஐயோ, தலைவிதியே" என்று சொல்லி "உன்னால் என்றைக்காவதுஎன்மானம் கப்பலேறிவிடும். உனக்கு ஒரு நமஸ்காரம். உன் அழகிய சிறுகதைக்கு நமஸ்காரம்" என்றான்.

பிரதிபாவுக்கு கோபம் வந்தது. அவள் அநேக நாட்கள் அவனோடு பேச்சு வார்த்தை வைத்துக்கொள்ளவில்லை. ஒரு தடவை அவளுடைய செல்லப் பூனைக்குட்டி இறந்துவிட்டது. அதைப் பற்றி அவள் சோகரஸம் மிக்க உணர்ச்சிச் சொற் சித்திரம் ஒன்றைத் தீட்டி ஒரு பத்திரிகைக்கு அனுப்பியிருந்தாள். அந்தக் கதை சில நாட்களுக்கப்புறம் ஆசிரியருடைய வந்தனங்களுடனும், வருத்தத்துடனும் தபாலில் வீடு திரும்பியது. அதைக் கண்டு தன் பூனை இறந்த துக்கத்தை விட நூறு மடங்கு துக்கம் அவள் நெஞ்சில் குமுறிக் கொண்டு

வந்தது. அவள் கண்கள் ஊற்றெடுத்துப் பொலபொலவென்று கண்ணீர்த் துளிகள் சிந்தின. அக் காட்சியை மட்டும் அந்த பத்திரிகை ஆசிரியர் பார்த்திருந்தால்! உடனே "இந்தச் சிறு கதை மகாராஷ்ட்டிர இலக்கியத்தின் அணிகலன்களில் ஒன்ருய்த் திகழும் என்கிற" தம் அபிப்பிராயத்துடன் வெளியிட்டிருப்பார். அழகும் யௌவனமும் மிக்க ஒரு கட்டழகியின் கண்ணீர் கல்லையும் உருக்கும் என்பார்களே, அப்படியிருக்க அது பத்திரிகாசிரியர் உள்ளத்தை உருக்காதா என்ன!

ஆனல் பிரதிபாவின் தீவிர ஆவல் சீக்கிரமே ஈடேறும் சந்தர்ப்பம் வாய்த்தது. அவள் 'மெட்ரிக்' பாஸ் செய்துவிட்டு காலேஜில் சேர்ந்தாள். அதற்கப்புறம் அவளுடைய நெஞ்சை அள்ளும் சிறு கதைகளுக்கும், அழகிய லாவகமான எழுத்துத் திறனுக்கும், முற்போக்குச் சிந்தனைகளுக்கும் சிறகு முளைத்தது. ஆறுமாதகாலம் அவளுடைய உள்ள வானத்தில் வட்டமிட்டு, வட்டமிட்டு இறுதியில் காலேஜ் பத்திரிகையில் அவை உருவாகி நிலைத்தன.

பிரதிபா இப்பொழுது காதல் கதைகள் எழுத ஆரம்பித்தாள். காலேஜ் என்ருல்தான் என்ன! காதற் கோயில், காதல் நகர், காதல் புரி......காலேஜ் மாணவர்கள் காதல் தொண்டர்கள்! காலேஜ் காற்று மேல் பட்டதும் பிரதிபாவுக்கு உலகம் முழுவதும் பிரேம மயமாய்த் தோன்றிற்று. வாழ்க்கை அலட்சியமே காதல் என்ற பிரமை உண்டாயிற்று. அந்தப் பிரபஞ்சத்தில் ஈடுபட்டுள்ள நங்கையர் அனைவருமே அகன்ற, காதளவோடும் கயற் கண்ணியர்; ஆடவர்கள் அனைவரும் நல்ல உறுதியான உடற்கட்டும், கம்பீரமான எழிலும் உள்ள காளைகள். காதலர் இருவரும் பரஸ்பரம் கைகோத்துக்கொண்டு பெருமூச்சு விடுவது தவிர்த்து இவர்களுக்கு வேறு வேலையே இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு தடவை பிரதிபா ஒரு சிறு கதை எழுதியிருந்தாள். அதன் பெயர்—'பிரேமபூஜாரிணி.'

அவர்கள் வகுப்புப் புரொபஸர் அந்தக் கதையைப் படித்திருந்தார்.

ஒருநாள் வகுப்பில் அவர் இதைப்பற்றி, பொதுவாகக் கிண்டல் செய்தார். "இரண்டு நாட்களுக்கு முன் தான் நம் காலேஜ் பத்திரிகை தீபாவளி மலரை முழுவதும் படித்து முடித்தேன். 'அவனும், அவளும்,' "அவன் இவள் கரத்தைப் பற்றினன்' இம்மாதிரி விஷயங்களைத் தவிர்த்து வேறு ஒன்றுமே கிடையாது, துருவித் துருவிப் பார்த்தாலும்! அந்நிய நாட்டான் யாராவது இந்த மலரைப் படித்துப் பார்த்தால் அவனுக்கு என்ன தோன்றும்? 'ஹிந்துஸ்தானத்தில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர்கள் காதல் களியாட்டங்களில் ஈடுபட்டிருப்பார்கள். மற்ற பத்துப்பேர்கள் அவர்களைப்பற்றி கவிதை புனைவதில் முனைந்திருப்பார்கள்,' என்றுதான் அவன் நினைப்பான்.

வகுப்பில் ஒரே சிரிப்பும் கொந்தளிப்பும் ஏற்பட்டது. படபடத்த நெஞ்சத்துடன் பிரதிபாவும் அந்த ஆரவாரத்தில் கலந்து கொண்டாள். தன்னுடைய கதையைக் குறித்து புரொபஸர் ஸாஹேப் ஏதாவது கிண்டல் செய்வார் என்று நினைத்து அவள் மனம் வியாகூலமுற்றது. ஆனல் நல்ல வேளையாக அப்படியொன்றும்

நேரவில்லை. பிரஸ்தாபச் சிறுகதை காலேஜ் பத்திரிகையில் பிரசுரமானதிலிருந்து, மாணவியர்களிடையே 'கதாசிரியை' என்ற கௌரவம் பிரதிபாவுக்கு கிடைத்தது.

ஒருநாள் அவள் வகுப்புச் சிநேகிதை ஒருத்தி அவளுடன் ரொம்பவும் மனஸ்தாபப் பட்டாள்.

காலை வகுப்புகள் முடிந்து இடை நேரம் வந்தது. காலேஜ் லேடீஸ் ரூம் — உண்மையை உரைக்குமிடத்து—ஒரு மீன் சந்தையாகக் காட்சியளித்தது. கவிதை நடையில் வர்ணிக்க வேண்டுமானால், பற்பல வண்ணமும் எழிலும் கொண்டு மிளிரும் விதவிதமான பக்ஷியினங்கள் செய்யும் சப்த ஜாலம் நிலவும் ஒரு பெரிய கூடுபோல தோற்றமளித்தது. தன் நாற்காலியை அறையின் ஒரு மூலையில் இழுத்துப் போட்டு உட்கார்ந்தபடி அவள் மற்ற அனைவரையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள். ஆனால் இதர மாணவிகளின் கவனம் இவள் பால் இருந்ததாகத் தெரியவில்லை.

லேடீஸ் ரூமில் அப்பொழுது ஒரு காலடி வைப்பதற்குக்கூட இடம் கிடையாது.

எவ்வளவு ரகரகமான முகபாவங்கள்! எத்தனை தினுசான நவநாகரிக மோஸ்தர்கள்! புடவைகளில்தான் எவ்வளவு புதுப்புது மாதிரிகள்! சில மாணவிகள் நோட்டீஸ் போர்டை அணுகி வாசித்துக்கொண்டிருந்தனர். மற்றும் சிலர் தினசரிப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் வாசிக்கும் சுவாரஸ்யத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இன்னும் சிலர் பாட புத்தகங்களில் உள்ள சந்தேகங்களைப் பற்றியும், லெச்சரர்கள் சம்பந்தமான புகார்களைப் பற்றியும் பரஸ்பரம் பரிமாறிப் பேசிக்கொண்டிருந்தனர். நீங்கள் ஏதாவது ஒரு காலேஜ் லேடீஸ் ரூமைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லை என்றால் அவசியம் ஒரு முறை பாருங்கள். ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கும். அதை நேரில்தான் கண்டு களிக்க வேண்டும். வர்ணித்துச் சாத்தியமில்லை!

பிரதிபா வெகு உன்னிப்புடன் அங்கு நடக்கும் சம்பவங்களைக் கவனித்து வந்தாள். சமீபத்தில் அவள் எழுதிய சிறு கதைகளின் கதா நாயகிகள் இந்த லேடீஸ் ரூம் சூழ் நிலையிலிருந்துதான் உருவானார்கள். இப்படிப் பிரதிபா அன்று அங்குள்ளவர்களை ஆழ்ந்து கவனிப்பதில் ஈடுபட்டிருக்கையில் குஸுமா பாடன்கர் காலேஜ் பத்திரிகையை கையிலெடுத்துக் கொண்டு பரபரப்புடன் உள்ளே நுழைந்தாள். இப்படி அப்படி யாரையோ தேடுவதைப்போல் பார்த்துவிட்டு ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த பிரதிபாவைப் பார்த்ததும் உற்சாகத்துடன் அவளை நோக்கி விரைந்தாள். அவளைப் பின்தொடர்ந்து குமுதா, கமலா, விமலா முதலியவர்கள் விரைந்து வந்தார்கள்.

“அசாத்ய மனுஷிடீ நீ பிரதிபா. மகா பொல்லாதவள். ஏண்டீ, நீ எழுதிய இந்தக் கதை யாரைப் பற்றியது? நிஜத்தைச் சொல்,” என்று கேட்டாள் குஸுமா, அவள் தோள் பட்டைகளைப் பிடித்து வாத்ஸல்யமாகக் குலுக்கி, கனிவு நிறைந்த குரலில்.

“யார்மீது எழுதி யிருப்பேன்? நினைவில்லையே?” என்று கூறினாள் பிரதிபா தன் புருவங்களை உயர்த்தி நெறித்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பதைப் போல.

"ஆஹா, ஹா, ஹா! ஒண்ணுமே தெரியாதடீ உனக்கு. 'இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா?' என்ற கதையாகச் செய்யர மாய்மாலத்தைப் பாரு, மாய்மாலத்தை. நானும் அந்தப் பார்கீயும் ஒரு பத்து நாளுக்கு முன்னல் டெனிஸ் ஆடிண்டிருந்தோம். ஆட்டத்தின் நடுவில் ஒரு முறை டென்னிஸ் கோர்ட்டில் சறுக்கி நான் கீழே விழுந்தேன். அருகில் நின்றிருந்த பார்கீ கைலாகு கொடுத்து என்னை எழுப்பி கோர்ட்டுக்கு வெளியே அழைத்துச் சென்றுன். இந்தச் சம்பவத்தை அப்படி அப்படி நடந்தது நடந்த படியே உன் கதையில் திணித்து விட்டு யாரைப் பற்றி நான் எழுதினேன்? என்று கேட்கிருயே! இது நேர்மையாடீ? அடியே குமுதா உன் ஜாக்கெட் முதுகுப் புறத்தில் கொஞ்சம் கிழிந்திருக்கிறது. ஜாக்கிரதையா புடவையின் தலைப்பை சரியாக இழுத்து அதை மறைத்துக்கொள். இல்லா விட்டால் அது பிரதிபாவின் கண்களில் பட்டால் அடுத்த மாசப் பத்திரிகையில் 'கிழிந்த ஜாக்கெட்' என்ற தலைப்பில் உன்னைப்பற்றியசிறுகதைவெளிவந்துவிடும். ஜாக்கிரதையம்மா!"

பிரதிபாவின் சிநேகிதைகளிடையே கொல்லென்று சிரிப்பொலி எழுந்து சூருவளியாக மாறிற்று. அது அடங்கியதும் குஸூமா இன்னெரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு பிரதிபாவின் கையிலுள்ள பொன் வளையல் களுடன் விளையாடிக்கொண்டே, "ஏண்டீ பிரதிபா, நான் கேட்கும் கேள்விக்கு நேருக்கு நேர் பதில் சொல்லு. நீ இதுவரைக்கும் யாரையாவது காதலித்திருக்கிருயா?"

பிரதிபா துணுக்குற்றுச் சரியாக நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

வைத்த விழி வாங்காமல் குஸூமாவைக் கூர்ந்து பார்த்த படியே அவள் பேசினள்; "என்னடீ இடம், பொருள், காலம் இதையெல்லாம் பார்க்காமல்தான் இப்படிப்பட்ட அந்தரங்கமான பிரச்னையைக் கேட்கிறதா? நல்ல கூத்துடீ!"

குஸூமா அவள் சொன்னதைப் பொருட் படுத்தவில்லை. "பின்னே எப்படித்தான் நீ இந்த காதல் கட்டங்களைவர்ணிக்கிருய்? 'அவன் அவள் கரத்தைப் பிடித்தான். அது நடுங்கிக் கொண்டிருந்தது, அவள் இதயம் படபடவென்று வேகமாக அடித்துக் கொண்டிருந்தது.' என்று இப்படியெல்லாம் எழுதுகிருயே. அந்தக் கதாநாயகன் என்ன ஸ்டெதாஸ்கோப் வைத்துப் பார்த்தானு என்ன அவள் இதயத் துடிப்பை?"

பிரதிபா ஓர் புன்முறுவல் பூத்தாள். குஸூமாவின் கேள்விகள் அவளுக்குப் பிடிக்க வில்லை; எனினும் தன் 'ஆட்ட மனப்பான்மை' நடத்தையை வெளியிடும் பொருட்டு அப்படி லேசாகச் சிரித்து வைத்தாள்.

குஸூமா தொடர்ந்து பேசினள். "நீ என்ன வேண்டுமானுலும் சொல்லிக் கொள்ளம்மா. என் மனசுக்குப் பட்டதை நான் சொல்லியே தீருவேன். சிற்சில சமயங்களில் நீ எழுதுவது கொஞ்சம் கூடப் புரிவதே இல்லை. உதாரணத்துக்கு இந்தக் கதையிலுள்ள ஒரு வாக்கியத்தைத்தான் பாரேன்.

"மாலைக் கதிரவனின் செக்கர் ஒளி பாய்ந்த முகில்களினுல் ஆன ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு

ஒய்யாரமாக ஆடி விஸ்ராந்தி எடுத்துக் கொள்ளுவது போல அவளுக்குத் தோன்றிற்று.'' ஏண்டீ, அவள் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்ச்சியைப் பற்றி உனக்கு எப்படித் தெரிந்தது? "முகில்களாலான ஊஞ்சல்" "மாலைக் கதிரவனின் செக்கர் ஒளி" இதெல்லாம் என்ன பிதற்றலடீ? இதெற்கெல்லாம் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?''

தன்னையும் மீறிப் பீறிட்டு வரும் சிரிப்பைத் தன் புடவையின் தலைப்பை உதட்டில் வைத்து அடக்கிச் சமாளித்துக் கொண்டு பிரதிபா பதிலிறுத்தாள்.

"போதுமடீ குஸுமா உன் குற்றச் சாட்டுகளும் கிண்டல் பேச்சும்! இன்று உன் உடம்பில் நம் புரொபஸரின் பைசாசம் புகுந்துகொண்டிருக்கிறது போல் தோன்றுகிறது. யாருக்குடீ தெரியும் பிரேமை என்றால், அது என்ன, கருப்பா, சிகப்பா என்று? நான் ஏதோ மனதில் தோன்றும் கற்பனையை—இனிய கனவை—அப்படியே எழுதித் தள்ளுகிறேன். அவ்வளவுதான் மனோரம்மியமான இனிய இலக்கியம், இங்கித இலக்கியம் என்பதுதான் என்ன? மனித சமுதாயத்தை மண்ணினின்று தூக்கி நிர்மலமான நீல விண்ணின் பால் மெல்ல மெல்ல அழைத்துச் செல்லும் ஒரு பட்டு நூலேணி தானே! உள்ளதை உள்ளபடியே—கவிதா நயமில்லாமல், கற்பனை மெருகில்லாமல்—வெளியிடும் வரட்டு இலக்கியத்தினால், முக்கியமாக வாழ்க்கை வாழ்வதற்காக என்ற தத்துவத்தின் அடிப்படையில் நம்பிக்கையுள்ள யௌவன சமுதாயத்திற்கு என்னடீ பயன்? அவள் மூக்கு கொடுக்காப்புளிப் பழம் போல வளைந்து சிவந்திருந்தது, என்று உள்ளதை உள்ளபடியே சொன்னால் யாராவது ரசிப்பார்களா? அதையே கொஞ்சம் அழகுபடுத்தி 'லேசாக வளைந்திருந்த அவள் நாசிகையில் அருணோதயத்தின் லேசான செந்நிறம் மிளிர்ந்தது' என்று சொல்வது எவ்வளவு நன்றாக, கவிதைப் பண்புக்கு ஒத்து இருக்கிறது.''

இதைக்கேட்டு குஸுமா விழுந்து, விழுந்து சிரித்து வயிறு புண்ணானாள். "பிரதிபா எவ்வளவு வேடிக்கையாகப் பேசரேடீ நீ"! என்று சொல்லி மிதமிஞ்சிய சிரிப்பினால் ஏற்பட்ட கண்ணீரைத் தன் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டாள்.

இதற்குள் இடை நேரம் முடிந்த மணியோசை காதில் விழுந்தது. தங்கள் சம்பாஷணைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு அவர்களிருவரும் புத்தகமும் கையுமாய் வகுப்பை நோக்கி விரைந்தோடினர்.

ஆனால் நெடு நேரம் பிரதிபாவின் உள்ளத்தில் குஸுமாவின் வார்த்தைகள் வட்டமிட்டு அவள் மனதைக் குழப்பின. "ஏண்டீ, நீ யாரையாவது இதுவரையில் காதலித்தது உண்டா? பின்னே எப்படித் தான் காதல் கட்டங்களை நீ வர்ணித்து எழுதுகிறாய்?" பிரதிபா வெகு நேரம் யோசித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய புரொபஸரின் அபிப்ராயமும் குஸுமாவின் அபிப்ராயங்களும் சரியானவை என்று அவள் உள்ளத்திற்குப் பட்டது.

* * *

அதற்கப்புறம் அனேக நாட்கள் அவள் எழுத்துக்கு ஓய்வு கிடைத்தது. இனி கொஞ்ச நாட்கள் காதலைப்பற்றி எழுதுவதை அறவே நிறுத்தி விட்டு, சமூகத்திலுள்ள இதர பிரச்னைகளைப்

பற்றிய கட்டுரை, ஆராய்ச்சி தோய்ந்த சீர்திருத்தச் சிறு கதைகளை எழுதவேண்டும் என்று அவள் தீர்மானித்துக் கொண்டாள். தங்கள் வீட்டுச் சமையல்காரியைப் பற்றிய ஒரு வாழ்க்கைச் சித்திரத்தைத் தயார் செய்து அவளுடைய புரொபஸரிடம் காட்டினுள். அவர் அதை ரசித்துப் பாராட்டி, "மிஸ் தேஷ்முக், நீங்கள் இதுவரையில் எழுதிய சிறு கதைகள் எல்லாவற்றையும் விட இதில் கலை அம்சமும், உண்மைப் படப்பிடிப்பும், உத்தேச உயர்வும், கற்பனைச் செறிவும் சரியான தாரதம்மியத்தில் கலந்திருக்கிறது. இதே மாதிரி இனியும் தொடர்ந்து எழுதினுல் நீங்கள் உண்மையிலேயே ஒரு சிறந்த சிறுகதை ஆசிரியை எனத் திகழலாம்" என்ருர்.

மகிழ்ச்சியால் மலர்ந்தன பிரதிபாவின் கயற்கண்கள். மெல்லிய, இனிய குரலில் "தாங்க் யூ ஸார்" என்று நன்றியறிதலுடன் சொல்லிவிட்டு விடைபெற்று வந்து விட்டாள்.

காலேஜின் இரண்டாம் டெர்ம் ஆரம்பமாகி காலக்கிரமத்தில் முடிவடையும் தறுவாயில் இருந்தது. ஒருநாள் காலேஜ் நோட்டீஸ் போர்டில் கீழ்க் கண்ட அறிக்கை ஒட்டப்பட்டிருந்தது.

"இம்முறை இரண்டாம் டெர்ம் முடிவு காலேஜ் சஞ்சிகையில் வெளிவரும் சிறந்த சிறு கதைக்கு ஒரு விசேஷப் பரிசு அளிக்கப்படும்."

அதைப் படித்த பிறகு பிரதிபாவின் உள்ளத்தில் அந்த விஷயத்தைத் தவிர்த்து வேறு எதுவும் குடியிருக்க முடியவில்லை. அல்லும் பகலும் அநவரதமும் அதே சிந்தனைதான். நிறை வசந்த ருதுவில் மலர்ந்துள்ள லட்சக்கணக்கான ஒளி மிக்க மலர்கள்மீது ஆனந்த நிருத்தியம் புரிந்துபறந்து செல்லும் கணக்கற்ற பட்டாம் பூச்சிகளைப் போன்று விதவிதமான சிறு கதைகளுக் கேற்ற விஷயங்கள் அவள் உள்ளப் பூங்காவில் திரிந்து வட்டமிட்டு மறைந்தன.

ஓர் இரவு அவளுக்குச் சிறு கதைக் கேற்ற ஒரு விஷயம் கிடைத்தது. கையிலிருந்த பாட புத்தகத்தை அப்படியே தூர எறிந்து விட்டு தன் சிறு கதை நோட் புத்தகத்தை எடுத்து அதைத் திறந்து அதிலுள்ள அழகிய நீல நிற வரிகளில் முத்து முத்தான, அழகிய கொட்டை எழுத்துகளில் கதையின் தலைப்பை மட்டும் முதன் முதலாக எழுதி வைத்தாள்:—

"தேவ தாசி!"

அதற்கு மேல் எழுத அவள் பேனு மறுத்தது. தொடர்ந்து என்ன எழுதவேண்டும் என்பது தெரிந்திருந்தும் அவள் தயங்கினுள்.

'விஷயம் நல்ல விஷயம்தான். ஆனுல் தேவதாசிகளின் வாழ்க்கையைப்பற்றி எனக்கு அனுபவ பூர்வமாக — நான் பிரத்யக்ஷமாகப் பார்த்து அறிந்தது—ஒன்றும் தெரியாதே! அவர்கள் வீட்டு வெளித் தோற்றம், மேன் மாடி, ஹால் இவற்றைப்பற்றி ஒருவாறு வர்ணித்து எழுத முடிந்தாலும் கூட, மற்ற விஷயங்களைப்பற்றி நான் எதுவும் சரியாக எழுத முடியாதே! என்ன செய்வது...?' என்று எண்ணமிட்டது அவள் உள்ளம்.

தான் எங்கேயோ ஒரு பிரபல ருஷ்யக் கதாசிரியைப் பற்றி படித்தது அவள் நினைவுக்கு வந்தது. அந்த ஆசிரியை சில காலம்

வேசிகளின் நடுவில் வசித்து அவர்கள் வாழ்க்கையைப் பல கோணங்களினின்றும் நேரில் பார்த்து, அலசி ஆராய்ந்து தன் அனுபவ பூர்வமான உண்மைகளை புள்ளி விவரத்துடன் எழுதி ஒரு அழகிய நூலாக வெளியிட்டாள் என்றும், அதனுல் அவருக்குப் பெயரும் புகழும், வருவாயும் கிடைத்தது என்றும் படித்தது அவள் நினைவுக்கு வந்தது. ஆனுல் அவள் மனத்தில் ஒரு அச்சமும் அதிர்ச்சியும் ஏற்பட்டது. இப்படிப்பட்ட பயங்கர, விபரீத எண்ணம்தான் தன் உள்ளத்தில் ஏற்பட்டது எப்படி? மகாராஷ்டிர பங்கிம் சந்த் என்ற பிராபல்யம் பெற்ற ஹரி நாராயண ஆப்டே தன் நாவல் ஒன்றில் வேசிகளின் அந்தப்புரத்து அந்தரங்கங்களை அப்படியப்படியே கற்பனு சக்தியால் வர்ணித்திருந்தார் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். ஆனுல் தன் கற்பனை? ஹூம், பிரயோசனம் இல்லை! அது அவ்வளவு தூரம் எட்டக்கூடிய தீக்ஷண்யம் பெற்றதன்று.

உள்ளங் கையில் நெற்றியை ஊன்றியபடி அவள் வெகு நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தாள். சுற்றிலும் நிசப்தம் நிலவிற்று. அந்த அமைதியில் சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தின் "டிக்டிக்" சப்தம் அதிகரித்துத் தோன்றிற்று. அவளுடைய நிழல் சித்திரம் வித விதமான உருவங்களில் எதிர்ப்புறத்துச் சுவரில் விழுந்து சலனித்தது. சாளரத்தின் ஒரு கதவு பாதி திறக்கப்பட்டு காற்றில் கல கலத்துச் சப்தித்தது. சாளரத்தின் வழியாக அறைக்குள் வீசும் காற்றினுல் விளக்கின் ஜ்வாலை ஆடி அசைந்து படபடத்தது.

இருந்தாற் போலிருந்து பிரதிபாவுக்கு குலாபின் ஞாபகம் வந்தது. குலாப் — அவளுடைய நடுத்தரப் பள்ளி நாட்களின் பால்ய சிநேகிதை!

அந்த நாட்களில் பள்ளியிலுள்ள அனைவரும் குலாபை ஏதோ ஒரு வித விசித்திர நோக்குடன் பார்த்து வந்தார்கள் என்பது அவளுக்கு இன்னும் நினைவிலிருந்தது. ஆனுல் பிரதிபாவுக்கு மட்டும் ஆதியிலிருந்தே குலாபிடம் ஒரு அலாதி அன்பு ஏற்பட்டிருந்தது. குலாபிடம் தனி ரகமான ஒருவித கவர்ச்சி தென்பட்டது பிரதிபாவின் கண்களுக்கு. மேலும் அவளுடைய அதிமாதுர்யமான, வீணு நாதத்தையும் திரஸ்கரிக்கக் கூடிய நயம் மிக்க இங்கிதக்,குரல் பிரதிபாவின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

"ஹூம்! மீன் குட்டிக்கு நீஞ்சக் கற்றுத்தர வேண்டுமா என்ன? எல்லாம் அதனதன் குலாசாரப்படி தானே அமையும்" என்று அவர்களுடன் படித்துவந்த இதர மாணவிகள் மிடுக்குடனும், அகங்காரத்துடனும் குலாபைப் பற்றி துச்சமாகப் பேசும்போதெல்லாம் பிரதிபாவுக்கு வருத்தமாக இருக்கும். குலாபை வழியில் சந்திக்கும்போதெல்லாம அவளுடன் ஒரு ஐந்து நிமிஷ நேரமாவது பிரதிபா பேசத் தவறுவதில்லை. பிரதிபா தன்பால் காட்டிய பரிவினுல் குலாப் அவளைத் தன் வெகு அந்தரங்கச் சிநேகிதையாகக் கருதி அவளிடம் தன் ரகசியங்களையெல்லாம் சொல்லி வருவது வழக்கம். பிரதிபாவும் அவள் சொல்வதையெல்லாம் பொறுமையாகக் கேட்டு வந்து இடையிடையே தன் அபிப்பிராயத்தைச் சொல்லுவதும், தன் அனு

தாபத்தைக் காட்டுவதும் வழக்கம். இதன் விளைவாகப் பிரதிபாவுக்கும் குலாபுக்கு மிடையில் பிரிக்கமுடியாத ஒரு அந்யோன்ய நட்பு பிறந்து வலுவடைந்தது.

குலாப், பிரதிபாவின் இல்லத்திற்கு இரண்டு மூன்று முறைகள் வந்திருந்தாள். ஆனல் பிரதிபாவுக்கு மட்டும் குலாபின் வீட்டுக்குச் செல்ல வீட்டில் தடை உத்தரவு விதிக்கப்பட்டிருந்தது.

மறு தினம் பிரதிபா காலேஜ் முடிந்ததும் நேரே குலாபின் வீட்டுக்குச் சென்று, மெத்தைப்படியேறி மெல்லக் கதவைத் தட்டினள்.

கன்னங்கரிய தோற்றமுள்ள ஒரு நடுத்தர வயது ஸ்திரீ கதவைத் திறந்தாள். அவளுடைய புடவை அழுக்குப் பிடித்திருந்தது. அவள் செவிகளில் நீண்ட தங்க லோலாக்குகள் ஊசலாடிக் கொண்டிருந்தன. அவளுடைய கருநிறச் சாயலின் காரணத்தால் அவற்றின் பிரகாசம் இன்னும் அதிகரித்து மிளிர்ந்தது. அவளுடைய உதடுகளில் செயற்கைச் செம்மை நிறம் தீட்டப்பட்டிருந்தது. பிரதிபாவைக் கண்டதும் அவளுக்கு முதலில் தூக்கி வாரிப் போட்டது. பிரதிபாவின் முகத் தோற்றத்திலிருந்தும் பொலிவிலிருந்தும் அவள் ஒரு குடும்பப் பெண் என்பதையும் நன்கு படித்துத் தேர்ச்சியுற்றவள் என்பதையும் அறிந்துகொண்ட அந்த ஸ்திரீயின் மனதில் ''இந்த மங்கை இங்கே வரக் காரணமென்ன ? '' என்ற சம்சயம் எழுந்தது. சந்தேகம் த்வனிக்கும் குரலிலேயே கேட்டாள் ''யார் நீங்கள் ?''

'' குலாப் இருக்கிருளா ? ''

''குலாப்? ஓஹோ ஸோனியைக் கேட்கிறீர்களா! இருக்காளே !''

'' என் பெயர் பிரதிபா. நான் அவளைப் பார்க்க வந்திருப்பதாகச் சொல்லுங்கள்.''

'' குலாபின் சிநேகிதையா நீங்கள்? உள்ளே வாருங்கள்.'' பிரதிபாவை அவள் உள்ளே அழைத்துச் சென்று ஒரு மக்மல் நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு கதவை தாளிட்டுத் திரும்பி வந்தாள். பிறகு ''ஸோனு; அடி ஸோனு'' என்று அழைத்தாள், அறையின் வாயிற்படியில் கட்டியிருந்த நீல நிறப் பட்டுத்திரையை விலக்கிக்கொண்டே.

திரை விலகினதும் அந்தரங்க ஹாலின் காட்சி பிரதிபாவின் திருஷ்டியில் பட்டது. சாளரங்களின் மீது திரைகள் விட்டிருந்ததால் மந்தமான பிரகாசம்தான் உள்ளே நிலவிற்று. சுவர்களில் அங்கங்கே அழகிய சித்திரங்கள் தீட்டப்பட் டிருந்தன. பெரும்பான்மைச் சித்திரங்கள், ராதா கிருஷ்ண ச்ருங்கார ரஸத்தையும் மற்றும் புராணத்திலுள்ள பற்பல சம்பவங்களைச் சித்தரிப்பனவாயும் இருந்தன. இவற்றைத் தவிர்த்து சில மேனட்டு அழகிகளின் படங்களும் வரையப்பட்டிருந்தன. அந்த ஹாலின் ஒரு மூலையில் ஒரு பெரிய பயோன வைக்கப்பட் டிருந்தது. அந்த பயோனவின் மீது மெருகு கொடுத்து சுடர்விட்டுப் பிரகாசிக்கும் புஷ்பப் பேலா ஒன்று வைக்கப்பட்டு, அதில் காகிதத்திலான புஷ்பக் குச்சொன்று காட்சியளித்தது. சுவரில் இரண்டொரு மகாராஜாக்களின் சித்திரங்களும் தொங்கிக்கொண்டிருந்தன.

இதற்குள் குலாப் திரையை நன்ருக விலக்கிவிட்டு பிரதிபா இருந்த முன்னறைக்குள் பிரவேசித்தாள். அவளும் ஒரு பழைய

பட்டுக்கரை புடவையைத்தான் உடுத்தியிருந்தாள். அவள் தன் கூந்தலை ஒழுங்காக வாரி இருக்க வில்லை. அவள் நெற்றியில் குங்கு மம் இட்ட அறிகுறி கூடக் கிடையாது?

"என்ன பிரதிபா இருந்தாற் போலிருந்து என் நினைவு எப்படி உண்டாயிற்று உனக்கு?"

"நல்ல பேச்சுடீ குலாப்! நான் இத்தனை நாளும் உன்னை மறந்து விட்டேன் என்று நினைக் கிருயா? அது எப்படி முடியும்?"

பேசும்போது பிரதிபா குலா வைக் கூர்ந்து கவனித்துக்கொண் டிருந்தாள். குலாப் முன்பெல் லாம் இருந்ததைவிட இப் பொழுது இன்னும் அதிக எழி லுடன் பொலிவுற்றுத் திகழ்ந் தாள். நல்ல உயரமும், உயரத்துக் குத் தகுந்த உறுதியான உடல் அமைப்பும் வாய்ந்த கட்டழகி யாகக் காட்சியளித்தாள். அவள் கண்களில் விவரிக்க வொண்ணுத ஒரு புது மாதிரி பிரகாசமும் கவர்ச்சியும் கலந்து பார்ப்பவர் களை வசீகரித்தது. அவர்களிரு வரும் பற்பல விஷயங்களைப் பற்றி வெகுநேரம் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

"நாளைக்கு என் பாட்டுக் கச்சேரி நடக்கிறது வருகிருயா பிரதிபா?"

"எங்கே நடக்கப்போகிறது கச்சேரி?"

"கச்சேரி என்ருல் நிஜமாக சதஸில் பாட்டுக் கச்சேரி என்று நினைத்துக்கொண்டாயா? இல்லை; இல்லை. அல்லாவுத்தீன் கான் இருக்கிருர் பார்—என் குரு, எனக்குச் சங்கீதம் சொல் லித் தருபவர்—அவர் என்னை முழு நேரக் கச்சேரி செய்ய நான் பூ ராவும் தகுதியடைந்து விட்டேனு என்பதைப் பரீட்சித்துப் பார்க்கப் போகிருர். அறையில் பாடித்தானே அம்பலத்தில் பாட வேண்டும்! உத்தியோகப் பூர்வ மற்ற அரங்கேற்றம் என்று வைத் துக்கொள்ளேன்."

"நீ வெகு நன்ருகப் பாடுகிருய் என்று கேள்விப் பட்டேன். எனக்கும் உன் பாட்டைக் கேட்கவேண்டும் என்றுரொம்ப ஆவல்தான்."

"பின்னே வாயேன்" என்று சொல்லிவிட்டு குலாப் சற்றுக் கலவரத்துடன் மேலே பேசாமல் தயங்கினுள். அவள் அப்படித் தயங்குவதன் காரணத்தை பிரதிபா ஊகித்து அறிந்து கொண்டாள். ஆனுல் அவள் கம்பீரமானத் தொனியில் தெளி வாகச் சொன்னுள், "அப் பொழுது கண்டிப்பாக நாளைக் கழித்து மறு நாள் வருகிறேன்," என்று.

குலாப் வியப்பு மேலிட்டு அர்த் தச் செறிவுடன் அவளை நோக்கி னுள்.

"பிரதிபா நிஜமாகவே உன்னுல் வர முடியுமா? உங்களுடைய வீட்டில்......"

பிரதிபா அவள் பேச்சை இடை மறித்து,

"அதெற்கென்னடி. சும்மா பாட்டுக் கேட்கத் தானே வரு கிறேன்! அதில் என்ன தப்பு?"

அதன் பிறகு குலாபிடம் விடைபெற்று அவசரமவசரமாக அவள் வெளியேறினுள். வழி யில் "நல்ல சந்தர்ப்பம் கிடைத் திருக்கிறது. நான் நேருக்கு நேர் பதிதையர்களின் வாழ்க்கையை நாளை கழிந்த மறுநாள், உன்னிப் பாகக் கவனித்துப் பார்க்க முடி யும். அதன் பிறகு என் கதையில் வர்ணனை உண்மையை அடிப்

படையாகக் கொண்டதாக இருக்கும்' என்ற எண்ணம் உதித்து அவள் உள்ளத்தில் மகிழ்ச்சி பெருகச் செய்தது.

இரண்டு நாள் கழித்து—அரங்கேற்ற தினத் தன்று—மாலை அவள் வெளியே புறப்பட்டுப் போக எல்லா ஆயத்தங்களும் செய்துமுடித்தாள். ஒரு லேசான தளிர்ப் பச்சைப் பட்டுப் புடவையை உடுத்திக் கொண்டாள். செவிகளில் நீண்ட பிரகாசம் பொருந்திய நீலக் கற்கள் உள்ளிட்ட தங்க லோலாக்குகள் அணிந்திருந்தாள். ஒரு முறை கண்ணுடியில் பார்த்துக் கொண்டாள். மனதுக்குச் சமாதானம் ஏற்பட்டது

"அம்மா நான் போய் வரேண்டி."

மறுபடியும் என்ன தோன்றிற்றோ என்னமோ. நேரே உள்ளே விரைந்து "நான் மனு விடம் போகிறேன். இன்று அவள் அக்கா ஊரிலிருந்து வந்திருக்கிறுளாம். அவள் நன்ருகப் பாடுகிறுள் என்று கேள்வி. நான் ராத்திரி வீடு திரும்பக் கொஞ்சம் நேரம் ஆகும். வரட்டுமா?" என்று சொல்லிவிட்டு வெளியே தாவிஞள்.

வாசலில் வந்து குலாப் வசிக்கும் தெருவை நோக்கி நடக்க ஆரம்பித்ததும் அவள் இப்படி அப்படி ஒரு முறைச் சுற்றிப் பார்த்துவிட்டு சட்டென்று தன் புடவையின் தலைப்பைத் தலைக்கு மேல் இழுத்து விட்டுக் கொண்டு சரசரவென்று விரைந்து நடக்க ஆரம்பித்தாள்.

மெத்தை ஏறி அவள் மேல் சென்ருள்.

வீட்டின் நடுக் கூடத்தில் ஜாஜ்வல்யமான ஒளி வெள்ளத்தால் அந்த மாடி முழுவதும் இந்திரலோகம் போல் காட்சியளித்தது. பிரதிபாவின் கண்கள் கூசின. அங்குள்ள ஆடம்பரமான ஏற்பாடுகளைக் கண்டு ஒரு கணம் அவளுக்கு மலைப்பு உண்டாகத்தான் செய்தது. அங்கு ஒரு சோபாவில் வீற்றிருந்த இரண்டு மூன்று ஆசாமிகள் அவளையே விழுங்கி விடுவதைப் போலக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். நல்லவேளையாக அந்த நடுவயது ஸ்திரீ பிரதிபாவை உள்ளே அழைத்துச் சென்று அந்த எக்கச்செக்கமான சந்தர்ப்பத்திலிருந்து காப்பாற்றினுள்.

குலாப் எடுப்பான ரோஜா நிற ஜார்ஜெட் புடவை ஒன்றை உடுத்தி யிருந்தாள். கூந்தலில் சிகப்பு ரோஜா மலர்கள் சூடியிருந்தாள். உதடுகளும் தாம்பூலச் சிகப்பு நிறம் ஏறி செக்கச் செவேலென்று இருந்தன. குலாப்! 'குலாப்' என்ருல் ரோஜா மலர்தானே. பெயருக் கேற்ப எழில் மிகு ரோஜாவாகவே திகழ்ந்தாள் அன்று குலாப்!

குலாப் அவளைத் தன் அருகில் உட்காரவைத்துக் கொண்டு பாட ஆரம்பித்தாள்.

பாட்டு ஆரம்பமாயிற்று. எல்லோரும் பாட்டில் கவனம் செலுத்தினுர்கள்; ஆனுல் பிரதிபாவுக்கு மட்டும் ஏனே இருப்புக் கொள்ளவில்லை. அவளுக்கு ஏதோ ஒரு வித விவரிக்க முடியாத பீதி உண்டாயிற்று. எதிரே சோபாவில் உட்கார்ந்திருந்த ரஸிகர்கள் தலையை ஆட்டிக்கொண்டு இடையிடையே "சபாஷ்" போட்டுக் கொண்டிருந்தார்கள்; தாம்பூலம் தரித்துக்கொண் டிருந்தவர்கள், பிரதிபாவை நோக்கி அடிக்கடி புன்முறுவல் புரிந்து, விசித்திர

மான கண்ணோட்டத்தை அவள் மீது செலுத்தினார்கள். அவளால் தலை நிமிர்ந்து உட்கார முடியவில்லை. எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகிவிட்டது. மெல்லவும் முடியாமல் தள்ளவும் முடியாமல் தவியாய்த் தவித்துத் தத்தளித்தாள்.

கொஞ்சநேரம் கழித்து குலாப் கையிலுள்ள தம்பூராவைக் கீழே வைத்துவிட்டு பிரதிபாவினருகில் நெருங்கி உட்கார்ந்தாள்.

"பிரதிபா! நீ கொஞ்சம் பாடேன் கேட்கலாம்."

வெட்கத்தால் பிரதிபாவின் கன்னங்கள் சிவந்தன. அங்கிருந்து எப்படியாவது சீக்கிரம் தப்பிச் சென்றால் போதும் என்றாகிவிட்டது அவள் மனநிலை. வலுக்கட்டாயமாகச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு "சே, எனக்கு எங்கே பாட வருகிறது? அதுவும் நீ இவ்வளவு அழகாகப் பாடிய பிறகு? சரி நான் வரட்டுமா குலாப். ரொம்ப நாழி ஆய்விட்டது."

"இதற்குள்ளாகவா?"

"ஆமாம். வீட்டில் அம்மா கோபித்துக் கொள்ளுவாள்."

சோபா மீது வீற்றிருந்த அந்த ஆசாமிகள் இவ்விருவரின் சம்பாஷணையை வெகு உன்னிப்புடன் காது கொடுத்துக் கேட்டு வந்தார்கள். இதைக் கண்ட பிரதிபாவின் உடம்பு முழுவதும் தீப் பட்டதுபோல எரிய ஆரம்பித்தது. தான் எதற்காக அங்கே வந்திருந்தோம், என்பதையே மறந்துவிட்டாள். அவளால் அவ்விடம் அதற்குமேல் ஒரு நிமிஷமும் இருக்க முடியவில்லை

"குலாப்! நான் அவசியம் இப்பொழுதே போக வேண்டும்."

பிரதிபாவின் கண்டிப்பு அவள் குரலில் தெளிவாகத் தெரிந்தது.

"சரி. கொஞ்சம் சர்பத்தாவது சாப்பிட்டுவிட்டுப் போகலாம். கொஞ்சம் பொறு,"- என்று சொல்லிவிட்டு அவள் உள்ளே சென்றாள். செய்வகை தோன்றாமல் பல்லைக் கடித்துக் கொண்டு உட்கார வேண்டியிருந்தது பிரதிபாவுக்கு. சோபா மீது இருந்த அந்த ரஸிக சிகாமணிகள் தாம்பூலம் தரிப்பதில் ஈடுபட்டிருந்தனர்.

பிரதிபாவின் உள்ளத்தில் பீதி ஏற்பட்டது. அந்த நான்கு ரஸிகர்களில் ஒருவன் எழுந்து மெதுவாக அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவனுடைய அப்பொழுதையவேஷம், நிலைமை, முக விகாரம் இவற்றைக் கண்ட பிரதிபாவுக்கு மூச்சே நின்று விடும்போல் இருந்தது. அவள் சப்த நாடியும் ஒய்ந்தது. கை கால் நடுக்கம் எடுத்தது. "குலாப்" என்று உரக்கக் கூவ வேண்டும் என்று அவளுக்குத் தோன்றிற்று. ஆனால் அவள் நாக்கு உலர்ந்து உச்சியில் ஒட்டிக்கொண்டுபேச மறுத்தது. அந்தக் கருத்த நடுத்தர வயது ஸ்திரீயையும் காணோம். அந்த ஷோக் ஆசாமி அவள் அருகில் வந்து உட்கார்ந்தான். ஏதோ ஒரு நாற்றம் அவள் நாசியைத் துளைத்தது. அவளால் சகிக்க முடியவில்லை. அவள் கண்கள் இருட்டின. அவளுக்குப் பூமி காலடியில் பிளந்து தன்னை அப்படியே கபளீகரிக்கக் கூடாதா என்று தோன்றிற்று. ஒன்றும் தோன்றாதவளாக பாம்பை மிதித்தவள் போல பிரமை கொண்டு சடக்கென்று எழுந்து தெரு வாயிலை நோக்கித் தாவி

நடந்தாள். அதற்குள் குலாப் உள்ளே நுழைந்தாள்.

"இதென்ன பிரதிபா எங்கே போகிருய்? இதோ இந்த சர்பத்தைச் சாப்பிட்டு விட்டுப் போ" என்ருள் குலாப்.

"சர்பத்தா......?

"ஆமாம்."

"சே, சே, இப்பொழுது வேண்டாம். இன்னெரு முறை எப்பொழுதாவது பார்த்துக் கொள்ளுவோம்" என்று சொல்லிவிட்டுப் பரபரப்புடன் செருப்பை மாட்டிக்கொண்டு விருவிறென்று மெத்தைப்படி இறங்கி எப்படியோ வெளியேறி ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டு, வீடு நோக்கி விரைந்தாள்.

ஆச்சரியத்தினுல் மின்சாரத் தாக்குதல் உற்றவள் போலானுள் குலாப். சாளரத்தைத் திறந்து அவள் வெளியே எட்டிப் பார்த்தாள். பிரதிபா எப்பொழுதோ மாயமாய் மறைந்து விட்டாள்.

"என்ன விசித்திரமான பெண்" என்று ஏளனமாகச் சொன்னுள் குலாப் திரஸ்காரம் மிக்கக் குரலில். பிரதிபாவின் நடத்தை அவளுக்குப் புரியவில்லை. அவளுக்கு அவளிடத்து கோபம்தான் ஏற்பட்டது.

எப்படியோ வீடடைந்த பிரதிபா தன் அறையில் சென்று கதவை உள்புறம் தாளிட்டுவிட்டு தன் கட்டிலில் தொப்பென்று குப்புற விழுந்து நெடுநேரம் பேயறைபட்டவள் போலப் படுத்திருந்தாள்.

கொஞ்ச நேரம் கழித்து எழுந்தாள். மேஜை மீது கதை நோட்புக் இருந்தது. ஒரு நிமிஷம் அந்தப் பக்கத்தைப் பார்த்து நின்ருள். பிறகு சடக்கென்று அந்த பக்கத்தைச் சுக்கு நூருய்க் கிழித்து காற்றில் தூவிவிட்டு அறையிலிருந்து வெளியேறினுள்.

அந்த வருஷம் நடந்த காலேஜ் பத்திரிகைச் சிறுகதை போட்டியில் அவளுக்குப் பரிசு கிடைக்கவில்லை. காரணம், அவள் போட்டிக்குச் சிறு கதையை எழுதவே இல்லை!

சூரியகாந்தி

மு. அருணாசலம்

சூரியகாந்தி என்றவுடன், கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் பாடிய பாடல் யாருக்கும் நினைவு வராமலிருக்க முடியாது.

" ஆகாய வீதி உலாவி வரும் இந்த
ஆதித்தனே உனது அன்பனடி
வேகாமல் வெந்துவெயிலில் உலர்ந்துநீ
விண்ணிலே கண்ணாக நிற்பதேனோ?
செங்கதிர் செல்லும் திசையது நோக்கி
உன் செல்லமுகமும் திரும்புவதேன்?"

என்றெல்லாம் அவர் பாடுகிறார். சூரியகாந்தி சம்பந்தமாயுள்ள ஒரு சாமானிய கருத்தை அவர் இவ் வரிகளில் குறிப்பிட்டிருக்கிறார். இப் பூவுக்குச் சூரியன் காந்தனாகையால், இதற்குச் சூரியகாந்தி என்று பெயர் வைத்தார்கள். வானத்தில் சூரியன் இருக்கும் திசையை நோக்கியே இது தலைசாய்ந்து நிற்குமென்று சொல்வார்கள். காலையில் கிழக்கு நோக்கிச் சாய்ந்தும், மத்தியானத்தில் நேரே செங்குத்தாய் நிமிர்ந்தும், மாலையில் மேற்கு நோக்கிச் சாய்ந்தும் இது நிற்குமென்று சொல்வார்கள். இக் கருத்துப் பற்றியே ஆங்கிலத்திலும் இதற்கு ஸன்-ப்ளவர் (சூரிய புஷ்பம்) என்பது பெயராயிருக்கிறது.

உண்மையில் சூரியகாந்தி என்பது ஒரு குடும்பம். அதில் பல வகைகள் உள்ளன. அவற்றுள் ஒரு வகைதான் மேற் குறிப்பிட்டவாறு சூரியனை நோக்கித் தலைசாய்ந்து நிற்கும்.

சூரியகாந்தி என்பது வருஷமொரு முறை விதை போட்டு உண்டாக்க வேண்டிய செடி. ஐப்பசி மாத மழைக்கு முன் விதை போட்டு, நாற்றுக்கள் முளைத்து, ஒரு சாண் உயரம் வளர்ந்தபின் பெயர்த்தெடுத்து, இரண்டடிக் கொன்றாக நட்டு வைக்கலாம். மழைக் காலத்தில் நன்றாக வளர்ந்து, மழை முடிந்த பின் பூக்க ஆரம்பிக்கும். பூக்கிற காலம் சுமார் இரண்டு மூன்று மாதம். பூ முடிந்ததும் காய்ந்து போகும்; பின்னர் செடியைப் பிடுங்கி எறிய வேண்டியதுதான்.

சாதாரணச் சூரியகாந்திச் செடி 6-8 அடி உயரம் வளரும். பெரும்பாலும் கிளைக்காமல் வளர்ந்து உச்சியில் ஒரே பெரிய பூவைத் தாங்கி நிற்கும். பூ அழகான மஞ்சள் அல்லது பொன் னிறம்; பெரிய சல்லடைபோல, சுமார் 2 அடி குறுக்களவுடைய தாய் ஓரத்தில் மட்டும் ஓரடுக்கு அல்லது இரண்டடுக்கு இதழ்களை உடையதாயிருக்கும். சல்லடை போலிருக்கும் கரு நிறமுடைய அல்லது பழுப்பு நிறமுடைய மத்திய பாகத்தில் ஏராளமான விதைகள் உண்டாகும். செடி முளைத்து $2\frac{1}{2}$, 3 மாதத்தில் பூக்கும்.

இச் செடி சலன மில்லாமலே நன்றாய்ச் செழித்து உறுதியாய் வளரக்கூடியது. அதிக வேர்ப் பிடிப்புடையதாகையால், சிறு குழி தோண்டி அதில் சத்துள்ள எருவாகிய மாட்டுச் சாணம், குதிரைச் சாணம் முதலான மட்கிய எருவிட்டு நாற்றை நட

வேண்டும். அடிக்கடி மேல் மண்ணைக் கிளறி, தாராளமாய் நீர் விடவும் தலைக் கனத்தால் செடி சாயக்கூடுமாதலால், பக்கத்தில் ஒரு கொம்பு நட்டுச் சேர்த்துக் கட்டவும். வருஷ முழுமையும் எந்த மாதத்திலுங்கூட இதைப் பயிரிட முடியும்.

இதன் தாயகம் மெக்ஸிகோ நாடு என்று சொல்வார்கள். ஜப்பானியச் சூரியகாந்தி (அட்டைப் படம்) இதில் ஒரு வகை. இது புதர்போல் பல கிளைகளோடு அடர்ந்து வளரக்கூடிய ஒரு சிறு செடி. பாத்தியாகப் பயிரிடவும் புல்வெளி, நடைபாதை ஓரங்களில் அலங்காரமாகப் பயிரிடுவதற்கு ஏற்றது. பூ ஏராளம்; கிளைதோறும் பூ. பூத்த பூ சில நாள் உதிராமல் அப்படியே இருக்கும். மேஜை அலங்காரத்துக்காகக் கத்தரித்து எடுத்து வைப்பதற்கு இதன் பூக்கள் பெரிதும் ஏற்றவை.

இந்தியா, சீனம் முதலான நாடுகளில் சூரியகாந்தியை விதைக்காகப் பயிரிடுகிறார்கள். உணவுப் பொருளான ஓர் எண்ணெய் எடுக்க விதை உபயோகமாகிறது. விதைத்து 4 மாதத்தில் விதை எடுக்கத் தயாராகும். ஏகராவுக்கு 8-10 பவுண்டு விதை பிடிக்கும், விதையில் 30 சதவீதம் எடைக்கெடை எண்ணெய் இருக்கும்; எண்ணெய் நறுமணமுடையது. சோள அறுவடை போலவே இதையும் அறுவடை செய்வார்கள். தலையை ஒடித்தெடுத்து உலர்த்தி அடித்து விதையை உதிர்ப்பார்கள். பின் விதையைத் தேய்த்து மேல் உமி அல்லது தோலைப் போக்கிச் சுத்தம் செய்து எண்ணெய் ஆட்டுவார்கள். ஏழை மக்கள் விதையை வறுத்தும் வேகவைத்தும் தின்பதுண்டு; மாட்டுக்கும் கோழிக்கும் இது நல்ல தீனியாகும். எண்ணெய் பிழிந்த பின், பிண்ணாக்கும்கூட நல்ல மாட்டுத் தீனியாகிறது.

✱

வாசனையின் ஆயுள்

நல்ல வாசனையைச் சுலபமாக அறிய முடியும், அவ்வாசனை இருக்கும் இடத்திலேயே நிலைத்து நிற்கும் குணமுடையது. ஆம் ப்ன்கோர்ட என்னும் இடத்தில் உள்ள ஒரு அறையில் கடந்த நூறு வருஷங்களாக ஓர் வாசனை நிலையத்துள்ளது. இதை உபயோகித்தவர் யாரென்று தெரியவில்லை. ஆனல் அவர் ஞாபகத்தை நிலை நிறுத்தி நிற்கிறது இந்த வாசனை!



யுத்தம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்று துருவித்துருவிப் பார்க்கும் ஆராய்ச்சிப் புலிகள் இங்கே ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குக் காரணம் அறிய சிரமப்படவே வேண்டாம்!

சின்ன விஷயந்தான்

ஸ்ரீமதி ரங்கதேவி சதாசிவம்

ரேஷன் அரிசியைப் பார்த்ததும் வயிறு 'பகீர்' என்றது. குதிரைக்காக வேக வைத்த கொள்ளைப்போல இருந்தது. நிறம். இடையில் கற்கள் விழித்துப் பார்த்தன. ஐந்து ஜீவன்கள் ஒரு வாரத்தை அந்த நான்கு படி அரிசியில் கழித்தாக வேண்டும்.

"அட கடவுளே—" என்று பெரு மூச்சு விட்டேன். அரிசியைக் கையில் அள்ளி இரண்டொரு கற்களைப் பொறுக்கி யெறிந்தேன். அரிசியைப் பொறுக்குவதா கற்களைப் பொறுக்குவதா என்று யோசிக்கும்போது அந்த அரிசியைத் தீட்டாமல் அப்படியே சமைத்தால் ஒருவராலும் சாப்பிட முடியாது என்னும் உண்மை புலனாயிற்று. முதல் நாள் அவர் (என் கணவர்) "அரிசியை மில்லில் தீட்டுவதற்காகக் கொண்டுபோனால் போலீஸ்காரர் பிடித்துக்கொள்வார்கள்" என்று பயமுறுத்தி இருந்தார். ஆகையால் உரலில் தான் தீட்ட வேண்டும். வீட்டில் உரல் இருந்தது. ஆனால் உலக்கை இல்லை. வீட்டுக்கார மாமி மாடியில் குடி யிருக்கிறார். அவரைக் கேட்டு உலக்கை வாங்கி வரும்படி வேலைக்காரியை ஏவினேன்.

"அவுங்க உலக்கை கொடுக்க மாட்டாங்களாம் அம்மா! அந்த அம்மா என்ன அப்படி எரிஞ்சு விழுது" என்றாள் வேலைக்காரி முனியம்மாள்.

அந்தச் சமயத்தில் "வீட்டுக்கார மாமி ஏதாவது அலுவலா யிருந்திருக்கக் கூடும். அல்லது அவர் மாப்பிள்ளை பணத்திற்காகக் கடிதம் எழுதி யிருக்கக் கூடும். அல்லது அவருக்கே தலை வலியா யிருக்கக் கூடும்" என்னும் ஞானோதயம் என் மனதில் உண்டாகவில்லை. "பார்த்தாயா, கேடுகெட்ட ஒரு உலக்கையைச் சற்று இரவல் கொடுக்க பிசுக்காரம் செய்கிறாளே. உலக்கையை நான் என்ன தின்றுவிடவா போகிறேன்? அல்லது இந்த நாலு படி அரிசியைத் தீட்டுவதால் உலக்கை தேய்ந்து போய் விடுமா?" என்றெல்லாம் எனக்குத் தோன்றியது. ஆத்திரத்தோடு அரிசிப் பானையைத் தூக்கிக் கொண்டுபோய் 'டங்' கென்று வைத்தேன். முனியம்மாள் மீது எரிந்து விழுந்தேன்.

"மாமி—" என்ற குரல்கேட்டு திரும்பினேன்.

மாடியிலிருந்து வீட்டுக்கார மாமியின் பெண் வந்து நின்று கொண்டிருந்தது.

"என்னடி வேணும்?" என்று அதட்டினேன்.

"அம்மா வந்து சல்லடை வாங்கிண்டு வரச்சொன்னாள்."

இங்கே "சல்லடையு மில்லை, கில்லடையு மில்லை போ" என்று கத்தினேன். இந்தக் காரணம் போதாதா?

யுத்தம் ஆரம்பமாய்விட்டது.

நேர் நடவடிக்கைகள் மறு நாள் காலை ஆரம்பம்!

நான் குளித்துக்கொண்டிருந்த பொழுது மேலிருந்து 'தபதப' வென்று சாக்கடை ஜலம் பாப ஞச அருவிபோல் வீழ்ந்தது.

நான் குழாயைத் திறந்துவிட்டு சமைய லறைக்குப் போனேன். மெத்தை மேலிருந்து குழாயை மூடச்சொல்லி தாக்கீது வந்தது. நான் இன்னும் நன்ருகத் திறந்து விட்டேன். மேலே பம்படிக்கும் சப்தமும் தொடர்ந்து 'புஸ்'புஸ்' என்று காற்றுவிடும் சப்தமும் கேட்டது.

"நன்ருய் வேணும்" என்று சொல்லிக்கொண்டேன்.

சற்று நேரத்திற்கெல்லாம் வீட்டுக்காரத் தாத்தா கீழே இறங்கி வந்தார்.

"ஸார்,—"

அவர் எழுந்து வெளியே போனர்.

"ஸார், எங்களுக்கு குளிக்கிற அறை வேணும். நீங்கள் இரண்டாவது குளிக்கிற அறையைக் காலி செய்து கொடுங்கள்" என்ருர் கிழவர்.

"அதெல்லாம் முடியாது ஸார். எனக்கு ஆபீசுக்கு நாழிகை ஆகிறது. இப்பொழுது பேசச் சாவகாசமில்லை" என்று சொல்லி விட்டு அவர் உள்ளே வந்தார். அவர் முகத்தில் வெற்றிக் குறி தோன்றிற்று. என் இருதயமும் சற்றுச் சந்தோஷத்தினல் விம்மிற்று.

இரண்டு மூன்று தினங்களில் எங்களுக்கு நோட்டீஸ் வந்தது. கிழவர் வீடு முழுதும் வேண்டு மென்றும் நாங்கள் முதல் தேதிக்குள் காலி செய்து தர வேண்டு மென்றும் எழுதி யிருந்தார். "அதெல்லாம் முடியாது. எனக்கு வீடு கிடைக்காது. என் மனைவி கர்ப்பமா யிருக்கிருள்" என்று இவர் பதில் நோட்டீஸ் விட்டார்.

இந்த நோட்டீஸ் யுத்தம் அவர்களுக்குள் நடந்துகொண் டிருக்கும்போது நாங்கள் சும்மா இருக்கவில்லை. நான் குளிக்கும் போது மெத்தை மேலிருந்து சாக்கடையை அலம்பி விடுவார்கள். அவர்கள் தண்ணீர் மேலே இழுக்கப் பம்படிக்க ஆரம்பித்தவுடன் நான் குழாயைத் திறந்து விடுவேன்.

இவ்வாறு சுமார் ஒரு மாதம் நடந்து வந்தது. ஒரு நாள் நான் பால்காரனைப் பார்த்துக்கொண்டு நின்றுகொண் டிருந்தேன். அப்பொழுது ஒருவன் ஒரு உலக்கையைப் பூண் போட்டுக் கொண்டு வந்தான். அவன் சொன்னதி லிருந்து உலக்கைப் பூண் நழுவி விட்டதால் புதுப் பூண் போடக் கொடுத்து ஒரு மாதமான செய்தி வெளிவந்தது!

கதையை வளர்த்துவானேன். வாடகை கட்டுப்பாடு அதிகாரி இடம் கிழவர் பிராது செய்தார். என் கணவர் அதிகாரியின் மாப்பிள்ளையையே வக்கிலாக வைத்து வாதாடினர். கிழவர் பக்கம் ஜயமாயிற்று. இவர் அப்பீல் செய்யப் போகிருராம். நாங்கள் அடுத்த மாதம் முதல் தேதிக்குள் காலி செய்ய வேண்டும். எல்லாம் ஒரு உலக்கைக்காக! உங்களுக்குத் தெரியுமா, எங்கே யாவது வீடு காலி இருக்கிறதா?



[சரோஜினி]

இப்போது எதை எடுத்தாலும் 'பஞ்சம்' தலைவிரித்தாடுகிறது. அல்லவா? ரேஷன் துணி போதவில்லை. இப்படியும் உண்டா? என்று ஏங்குகிறோம். குழந்தைக்கு இந்தக் குளிர் காலத்தில் ஒரு சின்ன சட்டையாவது வேண்டாமா? எப்படியோ சிரமப்பட்டு முயற்சித்ததில் ஒரு அரைகஜம் கிடைக்கிறதாக வைத்துக் கொள்ளுவோம்.

சுமார் ஆறு மாதக் குழந்தைக்கு அரை கஜத் துணியில் அழகான சட்டை தைக்கலாம். 'மாட்டி துணி' அல்லது வெள்ளை பாப்லின் துணியாயிருந்தால், சட்டை மிகநேர்த்தியாயிருக்கும். அரை கஜம் அகலமுள்ள துணியை எடுத்து, அதன் நீளத்தை இரண்டாக மடித்துக்கொண்டு, குழந்தைக்கு ஏற்ற அளவாய்க் கழுத்து வெட்ட வேண்டும். தோள்பட்டை சுமார் ஐந்தரை அங்குலம் விட்டு கையையும் கத்தரிக்க வேண்டும். பிறகு துணியை மேஜைமேல் விரித்து வைத்துக்கொண்டு தேன் கூட்டுத் தையல் தைக்கப் புள்ளிகள் வைக்க வேண்டும். தோள் பட்டை மடிப்பில் இரண்டு பக்கத்திலும் அரை, அங்குலம் வீதம் விட்டு நடுவில் சுமார் பத்துப் புள்ளிகள் வைக்கவேண்டும். அதாவது அரை அங்குலத்துக்கு ஒரு புள்ளி வீதம் வரும். இதே போல் சட்டையின் முன் புறத்திற்குப் பத்து வரிசைகளும், பின் பக்கத்திற்கு ஒன்பது வரிசைகளும், தோள்பட்டை வரிசை நீங்கலாகப் போட்டுக்கொண்டு தேன்கூடு மாதிரியில் தைக்க ஆரம்பிக்கலாம்.

துணியில் இரண்டு தோள் பட்டையிலும் இருபது வரிசைப் புள்ளிகள் வீதம் இருக்கின்றன அல்லவா? முதல் வரிசையில் முதல் இரண்டு புள்ளிகளை எடுத்துத் தைத்துக்கொண்டு மறுபடியும் அதன்மேல் ஒரு தையல் தைக்க வேண்டும். அப்பொழுது



சித்திரம் 1

ஒரு புள்ளி விட்டாற் போல் தையல் தெரியும். பிறகு ஊசியை முதல் துவாரத்தில் விட்டு அடிவழியாய் இரண்டாவது வரிசையின் இரண்டாவது புள்ளிக்கருகில் வெளியே எடுக்க வேண்டும். இப்பொழுது இந்த இரண்டாவது புள்ளியையும் மூன்றாவது புள்ளியையும் ஊசியில் எடுத்து முன் தைத்தாற் போல் இரண்டு முறை அதில் தைத்துவிட்டு, ஊசியை இந்தப் புள்ளியின் அடிவழியாய் விட்டு, முதல் வரிசையின் மூன்றாவது புள்ளிக்கருகே எடுத்து இந்தப் புள்ளியையும் இதற்கடுத்த புள்ளியையும் சேர்த்துத் தைக்க வேண்டும். இதேபோல் மேலும் கீழுமாக, முதல் இரண்டு வரிசைப் புள்ளிகளைத் தைத்துக் கொண்டு, அடுத்த 2 வரிசைகளைத் தைக்க வேண்டும். இவ்விதமே இரண்டு தோள்பட்டையிலும் புள்ளிகளைத் தைத்துக் கொண்டு, கழுத்தில் பின் பக்கத்தில் திறப்பு மடித்துத் தைக்க வேண்டும். கழுத்திற்கும் கைக்கும் தேன்கூட்டுத் தையலுக்கு நாம் உபயோகித்த நூலின் நிறத்தில் பைபிங் வைத்துத் தைக்க வேண்டும். தைத்து முடிந்த பின் சட்டை படத்தில் உள்ளபடி இருக்கும். அழகாக இருக்கிறதல்லவா?

குழந்தைகளின் frock தைக்கும்போது மேல் சட்டையுடன் இணைக்கும் பாவாடையைத் தேன்கூட்டுத் தையல் தைத்துச் சுருக்கலாம். இதற்குப் பாவாடையின் முழு நீளத்திற்கும் சுமார் அரை அங்குலத்திற்கு ஒரு புள்ளியாக ஆறு வரிசைப் புள்ளிகளோ எட்டு வரிசைப் புள்ளிகளோ வைத்துத் தைக்கலாம். இரண்டு அதிகத் துணி தேவை. புள்ளிகளை இன்னும் நெருக்கமாய் வைத்துக் கொண்டால் துணி குறைவாய்ப் பிடிக்கும்.

$1\frac{1}{2}$ கஜம் துணி இருந்தால் போதும். 36″ அகலமும் இருக்க வேண்டும். 5 கஜம் பைபிங் துண்டு தேவை.

காகிதத்தின்மேல் வரைந்திருக்கும் சித்திரத்தை வைத்துக் காப்பியெடுத்துக் கொள்ளவும். பின்பக்கத்தைப் போலவேதான் முன்பக்கமும். ஆனால் கழுத்து மாத்திரம்



சித்திரம் 2



சித்திரம் 3

பின் கழுத்தைவிட $2\frac{1}{4}$'' தாழ்மையாக வெட்ட வேண்டும்.

துணியின் ஓரங்களை ஒன்றாக வைத்து நான்காக மடித்து வைத்துக் கொள்ளவும். காப்பியடித்த காகிதத்தைத் துணியின் மேல் வைத்து வெட்டவும். இரண்டாகப் பிரித்து முன் கழுத்து $2\frac{1}{4}$'' இறக்கி வெட்டவும். 6'' அகலம் 9'' அகலம் உள்ள ஒரு துணியை இரண்டாக மடித்து வட்டமாக சித்திரத்தில் காட்டியுள்ளப்படி கத்தரித்து காலருக்கு உபயோகப் படுத்தவும்.

தோளின் மேல் வரும் பாகத்தை முதலில் தைத்துக் கொள்ளவும். முன் கழுத்துக்கு காலரை ஒட்டி பின் கழுத்தை சும்மா மடித்து தைக்கவும். பின் கழுத்தில் $4\frac{1}{2}$'' வெட்டி முதுகுப் பக்கம் திறந்து விடவும். காலர், கைச் சுற்றளவு, முதலியவைகளுக்கு பைபிங் உபயோகிக்கவும். இடுப்பு பாகத்தில் உள்பக்கமாக நீளத் துணியை வைத்து தைத்து விடவும். முன் பக்கத்தில் மார்பக்கமாக ஒரு ஓட்டை செய்து பொத்தான் தையல் தைத்து கலர் ரிப்பன் சொருகி விடவும். வட்டமாக இந்தத் துண்டுத் துணிகளை வெட்டி ஒன்றாகச் சேர்த்து பைகளாக படத்தில் காட்டியுள்ளதைப்போல் இரு பக்கங்களிலும் வைத்துத் தைக்கவும். பைகளின் வாய்களுக்குப் பைபிங் வைத்தால் அழகாயிருக்கும். கைக்கு கீழ்ப் பாகத்தையும், கீழ் ஓரத்தையும் வைத்துவிட்டால் குழந்தைகளுக்கு சாயந்திர வேளைகளில் போடுவதற்கு அழகாயிருக்கும். கொஞ்ச நேரத்தில் தைத்து விடலாம்.

நறுமணம்

ராதா சகி

பஞ்சேந்திரியங்களில் மிகவும் சக்தி வாய்ந்ததாகவும் எல்லப் பிராணிகளுக்கும் பொதுவான தாகவும் இருப்பது முகரும் உணர்வு. பகைவர்களேயும் சிநேகிதர்களேயும் கண்டறியவும் இந்த உணர்ச்சி உதவுவதாகப் பத்திரிகைகளில் படித்திருக்கிறேன். புருஷர்களே ஆகர்ஷிப்பதற்கும் வசீகரிப்பதற்கும் வாசனைத் திரவியங்கள் அதிக உபயோக மானவை என்பதை எல்லா சகோதரிகளும் ஒப்புக்கொள்ளு வார்கள்.

அத்தர்களில் மல்லிகையும் வெட்டிவேரும் மிகச் சிறந்தவை. மலர்களில் ஜாதியும் தாழம் பூவும், மேனுட்டு ஸெண்டுகள் இரசாயன முறையில் இயற்கை மலர்களில் சேர்க்கை யின்றித் தயாரிக்கப் படுவதால் அவற்றின் உபயோக மெல்லாம் விளம்பரத் தோடு சரி. அவற்றில் பல தலே வலி உண்டாக்கக் கூடியவை. ஒரு சில அல்லெர்ஜி என்னும் நரம்புக் கோளாறு உண்டாக்கி பல வித நோய்களின் குறிகளே உண்டாக்கக் கூடியவை.

சாயங்காலம் கூந்தலில் சூடிய மலர்களே இரவில் களேந்தெறியாமல் ஆடைகள் வைத்திருக்கும் பெட்டியிலோ அலமாரியிலோ போட்டு வைத்தால் ஆடைகளில் நறுமணம் வீசும். தாழைமடல்களே அகற்றிய பின் புஷ்பத்தை ஒரு பழந்துணியில் சுற்றி ஆடைகளுடன் வைப்பதும் ஒரு சிறந்த பழக்கம்.

ஏதாவது ஒரு வாசனைத் திரவியம் நமது மனதிற்குப் பிடித்து விட்டால் அதையே தொடர்ந்து உபயோகிக்கஅடிக்கடி வாசனைத் திரவியங்களே மாற்றக் கூடாது.

ஒரு சொட்டு சந்தனத் தைலத்தை கைகளில் தடவிக் கொண்டு உடம்பு முழுவதும் தேய்த்துக்கொள்வதால் சரீரத்திலிருந்து நறுமணம் வெகு நேரம் வீசிக்கொண்டிருக்கும்.

வெட்டிவேர் அத்தரை விரலில் தொட்டு காதுகளின் பின் புறம் தடவிக் கொண்டாலும் வெகு நேரம் சுற்றிலும் வாசனைச் கமழும்.

அரகஜா, அல்லது சவ்வாது பொட்டிட்டுக்கொள்வது தொன்றுதொட்டு பழக்கத்தில் இருந்துவரும் ஒரு சிறந்த முறை.

ஜாதி மல்லிகை அத்தரை ஆள் காட்டி விரலில் தொட்டு புருவங்களின் மேலும் கழுத்தின் பின் புறத்திலும் புஜங்களின் கீழும் தடவுவதால் மக்களின் மனதை ஆகர்ஷிப்பது எளிதாகும்.

எவ்வளவு ஏழையானுலும் வாசனைப்பொருள்களே உபயோகிக்காத பெண் மணி தன் வசீகர சக்தியில் ஒரு பகுதியை இழந்து விட்டதாகவே கருத வேண்டும்.

பெண்களும் யோக ஆசனமும்

●

சீதாலக்ஷ்மி குமாரஸ்வாமி

3

இடம்

பெண்கள் யோகாசனம் செய்வதற்கு கொஞ்சம் மறைவான இடமாய்த் தேவை. அப்பொழுது தான் கூச்சம் இல்லாமல் செய்ய முடியும். மறைவு வேண்டுமென்று ஜன்னல்களை யெல்லாம் மூடிவிட்டு இருட்டறையில் விளக்கு வைத்துக் கொண்டு செய்யக் கூடாது. நல்ல சுத்தமான காற்று தேவை. கொஞ்சம் ஜன்னல் கதவை திறந்து வைத்துக் கொள்ள சௌகரியமிருந்தால் திறந்து வைத்துக் கொள்ளலாம். அல்லது நின்ருல் மறையும்படி துணியினுல் திரை செய்து, மேல் பக்கம் மாத்திரம் காற்று வரும்படி விட்டுவிட்டு ஜன்னலை மறைக்கலாம். அல்லது நாலு கதவுடைய ஜன்னலாக இருந்தால், கீழ் இரண்டு ஜன்னல்களை மூடிவிடலாம்.

சிலருக்குத் தனியாய் அறை கிடைக்காது. உக்ராணத்திலாவது, சமையலறையிலாவது தான் செய்ய சௌகரியமிருக்கும். அவ்விடத்தில் கூடுமானவரை வாரத்திற்கு ஒரு தடவையாகிலும் சுத்தமாய், மூலை முடுக்குகளைச் சுத்தம் செய்து, ஒழுங்காய் அவசியமான சாமான்களை வைத்துக் கொண்டால், எலிகளின் வாசமும், அவைகளின் ஆர்ப்பாட்டங்களும் குறையும்; நல்ல காற்றும் கிடைக்கும். அடுப்பு எரியவிட்டுவிட்டு ஈர விறகிலிருந்து புகை, என்ஜின் வண்டிபோல் கிளம்ப, எரு முட்டையின் புகை, மூச்சைத் திணறடிக்க வைத்துவிட்டு செய்யக் கூடாது. அதனுல் நன்மை ஏற்படுவதற்குப் பதில் தீமை ஏற்படும். தீமை எற்படும் என்று சொல்வதற்குள்ளேயேசிலசோம்பல் சகோதரிகள் ஆசனத்திற்கு சீட்டுக்கொடுத்து விடுவார்கள். அவர்களுக்கு இன்னும் சோம்பேறிதனமும், டாக்டர் பில்லும் தான் அதிகம் ஆகும். கூடியவரை நம்முடைய அறிவை உபயோகப் படுத்தி, எப்படியெல்லாம் செய்து கொண்டால் ஆசனம் செய்ய சௌகரியமாய் இருக்கும் என்று அவரவர்களே யோசித்துச் செய்யவேண்டியது.

ஆடை

யோக ஆசனம் பயிலும்போது புடவை கட்டிக் கொண்டால் சௌகரியமிருக்காது. முடிச்சு ஒரு பக்கம் உறுத்தும். கொசுவம் ஒரு பக்கம் கனத்து, குனிய முடியாமல் தடுக்கும். சாதாரண அரைக்கால் நிஜார் போதுமானது. நீளமான நிஜாரும் இருக்கலாம். சௌகரியமுள்ளவர்கள் நீச்சல் அங்கிகளை வாங்கி உபயோகிக்கலாம். மேலுக்கு பாடியோ, ரவிக்கையோ போதுமானது. எதுவும் ரொம்ப இறுக்கமாய் கட்டலாகாது.

சாதனம்

ஜமக்காளமோ அல்லது பெட் ஷீட்டோ போதுமானது. கம்பளி, மெத்தை உபயோகிக்கக் கூடாது. கோரப்பாய் கூடாது.

பத்மாசனம்

உறுத்தும். வெறும் தரையில் செய்யக்கூடாது. ஆசனம் செய்யும்போது மூச்சுவிட்டு வாங்கும் போது தரையிலுள்ள தூசிகள் மூக்கின் வழியே உள்ளுக்குச் செல்லும். இதற்கென்று உபயோகிக்கும் ஜமக்காளமோ, துணிகளோ வாரத்திற்கு ஒரு தடவையாகிலும் சுத்தமாக துவைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

சிலருக்கு ஒரு சந்தேகம் உண்டாகலாம். அதாவது குளித்து விட்டு ஆசனம் செய்வதா? அல்லது ஆசனம் செய்து விட்டு குளிப்பதா என்று. நம் நாடு உஷ்ண தேசமாதலால் வியர்வை

அதிகம் வரும். ஆகையால் ஆச னம் செய்துவிட்டுக் குளிப்பது தான் நல்லது. அப்படிக் குளிக்க வேண்டுமானல் ஆசனங்கள் எல் லாம் செய்தபின் ½ மணி நேரம் பொறுத்துதான் குளிக்க வேண் டும். உடனே குளிக்கக் கூடாது. குளித்துவிட்டு செய்யப் பிரியப் படும் சகோதரிகள் அப்படியும் செய்யலாம். அவர்கள் குளித்த உடனேயே கூட செய்யலாம்.

வெறும் வயிற்றுடன் ஆசனம் செய்வதா? ஏதாவது கொஞ்சம் நீராகாரமாக காப்பியோ, டீயோ, பாலோ, மற்ற பானங்களோ குடித்து செய்யக் கூடாதா என்று கேட்பார்கள். வெறும் வயிற்றிடன் செய்வதுதான் நல் லது. அதுவும் இரைப்பை கலி யாக இருக்கும் போதுதான் செய்ய வேண்டும். ஒரு பக்கம் இரைப் பைக்குள் ஏதாவது தள்ளிவிட்டு, ஒரு பக்கம் ஆசனம் செய்தால், இரைப் பைக்கு ஜீர ணம் செய்வதற்குச் செல்லும் இரத்தம் மற்றப் பாகங்களுக்குச் சென்று விடுகிறது. ஆகையால் ஆகாரம் சரியாய் ஜிரணிக்காமல் இரைப் பை சிறு குடலுக்குள் ஆகாரத்தைத் தள்ளி விடுகிறது. இப்படிச் செய்வதனல் நாளா வட்டத்தில் வாந்தியும், பசியின் மையும், அஜீரணம் உண்டாக ஏதுவாகும். ஆசனம் பயின்றும் பலனில்லாமல் போகும். ஆகை யால் சகோதரிகள் கட்டாயம் காலி வயிற்றுடன் இருக்கும் போதுதான் பழக வேண்டும். காபி, டீ, பால் இவைகள் நீராய் இருந்தாலும், அதுவும் ஆகாரம் தான். வேண்டுமானல் எழுந்த தும் சுத்த ஜலம் சாப்பிடலாம். அல்லது பித்த சரீரமுடையவர் களாய் இருந்தால் கொஞ்சம் எலு மிச்சம்பழ ரசம், சர்க்கரையுடன் கலந்து சாப்பிடலாம். அதற்கும் ½ மணி நேரம் பொறுத்துத்தான் ஆசனம் ஆரம்பிக்க வேண்டும். ஒன்றும் சாப்பிடாமல் ஆசனம் ஆரம்பிப்பதே ரொம்ப நல்லது.

காலையில் எழுந்திருந்ததும், காலைக்கடனை முடித்து விட்டுச் செய்யலாம். காலையில் எழுந் திருந்ததும் உடம்பு கொஞ்சம் பிடிப்பாய் இருக்கும். கொஞ்சம் இப் பக்கம், அப்பக்கமாய் நட மாடி காலைக்கடன் முடிக்கும் போது உடம்பு சரியாய்விடும். மாலையில் செய்தால் ஆசனங்கள் ரொம்ப லாகவமாய் வரும். காலை யில் செய்வதுதான் நல்லது. காலை யில் செய்ய அவகாசம் இல்லாத வர்கள் மாலையில் செய்யலாம். அப்படி மாலையில் செய்ய வேண்டுமானல் டிபனைக் கட்டா யம் நிறுத்தித்தான் ஆக வேண் டும். விருந்தாளிகளினலோ, மற்ற காரணங்களிலோ காலையில் செய் யத் தடைப்பட்டால், அதை மாலையில் செய்யலாம். மாலையில் தடை யேற்பட்டால் காலையில் செய்யலாம். இதற்கென்று செய் யாமலே இருந்துவிடக் கூடாது. பெண்களுக்கு குடும்பத்தில் நிறைய பொறுப்புகள் இருக்கின் றன. அவைகளையெல்லாம் சரி வர செய்யும்போது சில சமயங் களில் செய்ய முடியாமலும் போகலாம். ஆனல் அதை அப் படியே விட்டுவிடலாகாது. ஓரி ரண்டு நாளோ, அல்லது எத்தனை நாள் தடையேற்பட்டாலும் மறு படியும் நாம் தொடர்ந்து செய்ய வேண்டும். எவ்வளவுக் கெவ்வ ளவு ஆர்வத்துடன் நாம் செய் கிறோமோ அவ்வளவுக்கும் பலன் இருக்கிறது.

சில தடைகள்

பெண்களுக்கு இயற்கையாக ஏற்படும் மாதவிடாய் காலத்தில்



புஜங்காசனம் I

செய்யக் கூடாது. சிலருக்கு 2, 3 நாளோ இன்னும் அதிக நாளோ இருக்கும். அவர்கள் அந் நாட்களில் செய்யாமல், மற்ற நாட்களில் செய்யலாம். கர்ப்ப ஸ்திரீகள் புதிதாய் ஆரம்பித்துச் செய்யக்கூடாது. ஆசனங்களை பழக்கமாய் செய்யும் பெண்ணுக்கு, கர்ப்பமுண்டானால் சில ஆசனங்களை ஒதுக்கியும் சில ஆசனங்களை செய்தும் வரலாம். அவைகளை எல்லாம் அந்த அந்த ஆசனங்களைப் பற்றி எழுதும்போது, எந்த மாதம் வரைக்கும், எந்த ஆசனம் பழகலாம் என்பதைப் பற்றி எழுதுவோம்.

புஜங்காசனம்

செய்யும் முறை: மேடுபள்ளமற்ற சமதளத்தில், விரிப்பில் குப்புறப் படுத்து கைகளை பக்கத்தில் நீட்டி வைத்துக் கொள்ளவும். சரீரம் இளக்கமாய் இருக்க வேண்டும். இரண்டு உள்ளங் கைகளை அக்குளுக்கு நேராய் வைத்துக் கொள்ளவும். குதிகால்கள் ஒட்டியிருக்க வேண்டும். முகம் விரிப்பில் இருக்க வேண்டும். கைகளை ஊன்றி, தலையைத் தூக்கி, பின் பக்கமாய் வளைக்கவும். தலையை தூக்கிவளைக்கும்போது மூச்சுவிட வேண்டும். சித்திரத்தில் காட்டிய நிலையில் 2, 3 விநாடி இருந்து, மூச்சை இழுத்துக் கொண்டு, முன் நிலைக்கு வரும்போது மூச்சு விட்டுக் கொண்டே வரவேண்டும். இதில் கழுத்தின்கீழுள்ள முதுகெலும்பின் மேல் பாகத்தை வளைக்க முயற்சிக்கவேண்டும்.

மற்றொரு முறை: இடுப்பு வரைக்கும் தரையில் ஒட்ட, மற்ற மேல் பாகத்தை நன்றாய்ன் பின் பக்கம் வளைக்கவும். கைகளை நேராய் ஊன்றி நிமித்தவும்.

இந்த இரண்டும் மும்மூன்று தடவைகளாகச் செய்யலாம்.

இவைகள் அநேகருக்கு வெகு சுலபமாய் வரும். சிலருக்கு முதுகு எலும்பு வளையாமல் காலிலிருந்து விறைத்து எழும்பும். சிலருக்குத் தலையை பின்னால் வளைக்கும்போது ஒட்டின குதிகால்கள் விரியும். சிலருக்கு கைகள் நடுங்கும். சிலருக்கு முதுகு நோக ஆரம்பிக்கும். இவைகளெல்லாம் கடவுளால் கொடுக்கப்பட்ட இச் சரீரத்தை சரியாய் கவனிக்காமல் துருப்பிடிக்கும்படி போட்டு வைத்ததினால்தான். நோகின்றதே என்று விட்டுவிடக்கூடாது. தொடர்ந்து செய்தால் இரண்டு மூன்று நாளில் நோய் விலகிவிடும். சுகம் ஏற்படும். மற்ற குறைகள் நாளாவட்டத்தில்தான் மறையும். பழக பழக மூச்சு தானாக விடவும், வாங்கவும் பழக்கப்பட்டுப் போகும்.

பலன்

நாள் முழுதும் அடுப்பங்கரையில் குனிந்து வேலை செய்யும் சகோதரிகளின் கழுத்துக்குச் சிரமபரிகாரமாகும். நாள் முழுதும் ஆபீஸில் பேனாவினால் உழைத்துவிட்டு வரும் ஆபீஸர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் ஓய்வு உண்டாகும். கழுத்து வலி, கழுத்துச் சுளுக்கு, முதுகு வலி முதலியவைகளுக்கு மருந்து புஜங்காசனமே. முதுகின் மேல் பாகத்தையும் நடுப் பாகத்தையும் வளைத்துப் பழகுவதால் இளமை ஏற்படுகிறது.

முதுகெலும்பை இளமைப் படுத்துவதே யோகாசனத்தின் முக்கிய நோக்கம். யௌவனமும் அதனால்தான் காப்பாற்றப் படுகிறது. அதிக வயதானாலும், முதுகெலும்பை எல்லா பக்கங்களிலும் வளைக்கக்கூடிய தன்மை உள்ளவர்களானால், அவர்கள் இளைஞர்களைப்போல, சுறுசுறுப்பாய் இருப்பார்கள். இளைஞர்களின் முதுகெலும்பு வளையாமல் கட்டையாய் இருந்தால் அவர்

புஜங்காசனம் II

கள் வயதானவர்களைப் போல சோம்பலாய் இருப்பார்கள். நோய்க்கும் இருப்பிடமாக இருப்பார்கள்.

சாதாரணமாக நம் வீட்டில் வளரும் நாய், பூனைகளைப் பார்த்தால் நாம் இயற்கையை அறிந்து கொள்ளலாம். இவைகள் கொஞ்ச நேரம் படுத்து எழுந்திருந்தால், கழுத்தை முன்னுக்கு நீட்டிமுதுகைக் கீழுக்குவளைத்து, காலை பின்னால் வைத்து நெளிந்து, நன்றாய் முறுக்குகிறது. பூனையோ முதுகெலும்பை வில்போல மேலுக்கு வளைத்து சோம்பலை முறிக்கிறது. கடவுள் இயற்கையாக அவைகளுக்கு அந்த அறிவு கொடுத்திருக்கிறார். அதிகாலையில், பறவைகள் சூரிய வெளிச்சம் கொஞ்சம் வந்ததும் கூண்டில் இருந்து சிறகை அடித்துக் கொண்டு பறந்து, இன்னிசை பாடி வட்டமிடுகின்றன.

சிருஷ்டியில் மேன்மையானவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நாம் இயற்கையை மறந்தோம். உண்ணல், உறங்கல் எப்படி யாரையும் கேட்காமல் செய்கின்றோமோ, அதைப் போல் தேகப் பயிற்சியும் செய்ய வேண்டும். நம் சகோதரிகள் சரீர ஆரோக்கியமின்றி எத்துறையில் முன்னேறினாலும் என்ன பிரயோசனம்? வாலிபப் பெண்கள் தலைச்சன் பிரசவத்திற்கே, பலமின்றி ரத்த மின்றி, டானிக்கையே நம்பி, பிரசவத்தை பயங்கரத்துடன் எதிர் பார்க்கிறார்கள். இவர்களால் தேசத்திற்கு யாது பயன்? அல்லது இவர்களால் உண்டாக்கப்படும் குழந்தைகளினால்தான் என்ன பிரயோஜனம்? இவர்களால் டாக்டர்களுக்கு வருமானம் ஆவதுடன், குடும்பத்தில் வறுமையும் சதா கவலையும் உண்டாவதுதான் கண்ட பலன்.

ஆகையினால் சகோதரிகளே எழுங்கள்! இத்தனை நாள் உறங்கிக் கிடந்தது போதும். சுதந்திர சூரியன் உதயமாய் விட்டான். நம் கடமை மலைபோல் இருக்கிறது. முதலில் ஆரோக்கிய அஸ்திவாரம் அமைத்துக் கொண்டால் தான் கிடைத்த சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியும். மருந்து வகையில் மேல் நாட்டிற்கு போகும் ஏராளமான பணமும் நம் வறுமை நாட்டிற்கு மிஞ்சும். வீரக் குழந்தைகளை ஈன்று தேசத்திற்கு அர்ப்பணம் செய்ய முடியும்.

கர்ப்ப ஸ்திரீகள் இதை மூன்று மாதம் வரைக்கும் செய்யலாம்.

(தொடரும்)

✲

சிரிப்பு

"நாம் எத்தனைக்கெத்தனை சிரிக்கிறோமோ அத்தனைக்கத்தனைதான் நமக்குத் தேகாரோக்கியமும் இருக்கிறது. இது அனேக ஜனங்களுக்குத் தெரியவில்லை. நாம் சிரிப்பதற் கேற்றபடியே நம் வியாதிகளும் குணமாகின்றன. சிரிக்காதவர்களைவிட சிரிப்பவர்களே அதிக ஆயுள் பெற்று வாழ்கிறார்கள். இக் காலத்தின் சிறந்த வைத்தியன் 'மிக்கிமௌஸ்' (சிரிப்பூட்டும் ஹாஸ்ய சினிமா) படந்தான் என்றுகூட சொல்லலாம்."

—டாக்டர் வால்ஷ்.

ஸ்ரீமதி டாக்டர் திருபுரசுந்தரி அவர்கள் இக் கட்டுரையில் வரைந்துள்ள விஷயம் பெண்மணிகளுக்கு எவ்வளவு அவசியமானது என்று நாம் கூறவேண்டியதில்லை. இக் கட்டுரையில் கர்ப்ப காலத்தில் பெண்கள் உட்கொள்ள வேண்டிய ஆகாரமுறைகளைப் பற்றி மட்டும் இன்றி, பெண்களின் கர்ப்ப கால நிலைமை, நடந்துகொள்ள வேண்டிய முறைகள் பற்றியும் விவரிக்கிறார்.

உடலோம்புதல்

டாக்டர் திருபுரசுந்தரி, எம். பி. பி. எஸ்.

கர்ப்பிணிகளின் ஆகாரம்

கர்ப்ப காலத்தில் பெண்கள் சாப்பிடவேண்டிய ஆகாரம் மிகவும் சத்துள்ளதாக இருக்க வேண் வேண்டும். கருப் பையில் வளரும் குழந்தைக்கும் தாய்க்கும் சக்தியைக் கொடுக்க வேண்டிய அளவிற்குப் போதிய ஆகாரம் சாப்பிட வேண்டும். தாய் கர்ப்ப காலத்தில் போதிய அளவு சாப்பிடாது இருந்துவிட்டால் அதற்காக உள்ளே வளரும் கரு பட்டினியாக இருந்துவிடாது! சுய நலமிக்க குழந்தைதாயை அலட்சியம் செய்துவிட்டு அவளுக்குக் கொடுக்க வேண்டிய ஆகாரத்தையும் சேர்த்து தானே சாப்பிட்டு விடும்!

தாய் எலும்புந் தோலுமாக இருந்தாலும் குழந்தையின் போஷணை கெட்டுவிடாது என்பதை கிரீஸ், போலந்து முதலிய நாட்டில் பஞ்சகாலத்தில் பெண்களிடம் அனுபவத்தில் வைத்தியர்கள் கண்டார்கள். மெலிந்து வறண்ட தோற்றங்கொண்ட அப் பெண்கள் அழகிய ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்றார்களாம்!

சாப்பிடும் ஆகாரத்தின் அளவைவிட முக்கியமானது அதனுள்ளிருக்கும் சத்துப் பொருள்களின் அளவு. ஏன் எனில் குழந்தையின் எலும்பு வளர்ச்சிக்கு வேண்டிய சத்துப் பொருள்கள் ஆகாரத்தில் இல்லாவிடில், வேண்டிய சத்துப் பொருள்களை குழந்தை தாயினுடைய எலும்பு, பல் முதலியவைகளிலிருந்து திருடிக் கொண்டுவிடும்.

தேவையான வஸ்துக்கள் கொண்ட, வேண்டிய அளவு ஆகாரம் உட்கொண்டால் மட்டும் போதாது. அதை ஜீரணித்து உபயோகித்துக்கொள்ளும் சக்தியும் கர்ப்பிணிகளுக்குத் தேவை. சுத்தமான காற்று, தேகாப்பியாசம், ஓய்வு, நல்ல தூக்கம், நிம்மதியான மனம் இவைகள் ஜீரண சக்தியை அதிகரிக்கச் செய்கின்றன. மலச் சிக்கலையும் அஜீரணத்தையும் உண்டுபண்ணும் ஆகாரங்களைக் கர்ப்பிணிகள் சாப்பிடக்கூடாது.

கர்ப்ப காலத்தில், பின் மாதங்களில் கருப் பை வளர்ந்து மேலே எழும்பி நெருக்குவதனால் இரைப் பையில் இடம் குறுகிவிடுகின்றது.

ஆகவே வயிறு நிறைய சாப்பிட முடியாது திணறுவார்கள் பெண்கள். இந்தச் சமயத்தில் அடிக்கொரு தடவையாகக் கொஞ்சமாக ஆகாரத்தைச் சாப்பிட்டுச் சரிக் கட்டிக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

கர்ப்பிணிகள் உட்கொள்ளும் ஆகாரத்தில் பால்,பழம், பச்சைக் காய் கறிகள் இவைகள் அதிகம் இருக்க வேண்டும். சாப்பிடும் வேளை தவறுவதே கூடாது. அவசரமாகச் சாப்பிடாமல் மெதுவாகச் சுவைத்து நன்ருக மென்று உண்ண வேண்டும். மசக்கை காரணமாக அஜீரணப்படுத்தும் ஆகாரங்களை கைகளினுலும் தொடக்கூடாது.

வளரும் குழந்தைக்கு என்று மூக்கைப் பிடிக்கும் அளவு ஆகாரத்தைச் சாப்பிடுதல் கூடாது. அதிகச் சத்துள்ள ஆகாரம், வேளை தவறியபோஜனம்,அதிகப் புரத வஸ்துக்கள் நிறைந்த சிற்றுண்டி இவைகள் கர்ப்பிணிப் பெண்களின் தேக நலத்தைக் கெடுத்துவிடுகின்றன.

ஆகாரம் போதுமானதா? என்பதைக் கண்டுபிடிக்கும் ஓர் சுலபமான வழி என்னவெனில் அடிக்கடி தேக எடையை எடுத்துப் பார்த்தலே ஆகும். மாதம் ஐந்து பவுண்டுகளுக்கு மேல் எடை அதிகரித்துக் கொண்டுபோதல் கூடாது.

தேவையான சத்துப் பொருள்கள்

தண்ணீர்: தேகத்திலுள்ள சகல உறுப்புகளும் இயங்குவதற்கும், ஆகாரத்தைக் கரைப்பதற்கும் தண்ணீர் மிகவும் தேவையான பொருள்.

மேலும் கழிவுப் பொருள்களை, மூத்திரக் கோளங்கள் குடல், சருமம் இவைகள் வழியே வெளிப்படுத்தவும் தண்ணீர் அவசியம். கர்ப்பிணிகள் சாதாரணமாக, பால், தண்ணீர், காப்பி, பழரசம் இவைகளைச் சேர்த்து இருபத்திநான்கு மணி நேரத்திற்கு எட்டு கண்ணுடி டம்ளர் அளவுக்குச் சாப்பிட வேண்டும்.

புரதம்: உடலில் அழிந்து போகும் அணுக்களைப் பாதுகாக்கவும் சக்தியை ஊட்டவும் புரதம் என்னும் பொருள் தேவையாகின்றது. புரதச் சத்து பால், முட்டை, மாமிசம், பட்டாணி முதலிய பொருள்களில் அதிகம் இருக்கின்றது. மூத்திரக் கோளங்களுக்குத் தொந்திரவு ஒன்றும் இல்லையெனத் தெரிந்து கொண்டால், முட்டை, பால், மாமிசம் முதலிய புரதச் சத்துப் பொருள்களைப் பெண்கள் வேண்டிய அளவு சாப்பிடலாம். புரதச் சத்து குறைந்த ஆகாரத்தை உட்கொண்டால் தசையில் பலக் குறைவும் உடல் பலஹீனமும் ஏற்படும். பிரசவத்திற்குப் பின் ஸ்தனங்களில் பால் சுரப்பது குறைந்துவிடும்.

கொழுப்புப் பொருள்: இது தேகத்திற்கு உஷ்ணத்தைக் கொடுக்கிறது. வெண்ணெய், பாலேட்டுக் கட்டி, எண்ணெய், மாமிசம் முதலிய பொருள்களில் கொழுப்பு வஸ்து மலிந்து கிடக்கின்றது. தாயின் ஆகாரத்தில் ஓரளவு கொழுப்புச் சத்தும் வேண்டியதே. கர்ப்பிணிக்கு அதிக வாந்தி தொந்திரவு இல்லாமல் இருந்தால் நெய், எண்ணெய் முதலியவைகளை மிதமாக ஆகாரத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

சர்க்கரைப் பொருள்: "கார்போஹைடிரேட்" எனச் சொல்லப்படும் சர்க்கரைப் பொருள், உடலுக்குத் தேவையான

சக்தியை சீக்கிரத்தில் உற்பத்தி செய்து தருகின்றது. அரிசி, உருளைக்கிழங்கு, தானியங்கள் இவைகளில் சர்க்கரைப் பொருள் அபரிமிதமாகஇருக்கின்றது. ஆகவே அரிசிச் சாதம் உண்ணும் நம் பெண்களுடைய ஆகாரத்தில் இப் பொருளும் சேர்ந்திருக்க வேண்டும் என்று சொல்லவே தேவையில்லை.

உப்புகள் : கால்ஷியம், பாஸ்பரஸ், முதலிய உப்புக்களும், இரும்பு, செம்பு முதலிய உலோகங்களும் ஓர் அளவு ஆகாரத்தில் தேவையாக இருக்கின்றன. கால்ஷியம் உப்பு கர்ப்பிணிகளுக்கு மிகவும் தேவையானது. ஆகாரத்தில் இது போதிய அளவு இல்லாவிடில் தசைகளுக்குச் சக்திக் குறைவு ஏற்பட்டுவிடும். இரத்தத்திற்கு கட்டித் தட்டிக்கொள்ளும் சுபாவம் மங்கிவிடும். எலும்பு, பல் முதலியன உறுதியாக இருப்பதற்கு கால்ஷியம் உப்பும் பாஸ்பரஸ் உப்பும் மிகவும் வேண்டிய சத்துப் பொருள்கள்.

இரும்பு, செம்பு முதலிய உலோகப் பொருள்கள் இரத்த உற்பத்திக்கு அவசியம். அயோடின் சத்து தைராய்ட் என்னும் கிரந்தியை வீங்காது பாதுகாக்க தேவையாகின்றது. பால், ஆரஞ்சு, ஆப்பிள் முதலிய பழங்களிலும், அவரைக்காய், காலிபிளவர், கீரைகள் இவைகளிலும் உப்புச் சத்துப்பொருள்கள் அதிகமிருக்கின்றன.

இவைகளில் கால்ஷியம் என்னும் உப்பு பால், பாலேட்டுக் கட்டி, காலிபிளவர், அவரைக்காய் முதலியவைகளில் அதிகம். பாஸ்பரஸ் உப்பு மாமிசத்தில் மிருகங்களின் கல்லீரலிலும், கோழி, மீன், பால், பாலேட்டுக் கட்டி இவைகளிலும் அதிகம் இருக்கின்றது. இரும்புச் சத்து கீரை, இறைச்சியில் கல்லீரல், இருதயம், அவரைக்காய், பட்டாணி, கோழியின் மாமிசம் முதலியவைகளில் அதிகம் காணப்படுகின்றது. செம்பு, முத்துச் சிப்பி மீன்களிடமும் கல்லீரலிலும் அதிகம். அயோடின் கடல் மீன்களிடம் அதிகம் உள்ளது.

ஜீவசத்துக்கள்: தாயின் தேக வளர்ச்சிக்கும், குழந்தையின் பூர்ண வளர்ச்சிக்கும் முக்கியமான பொருள்கள் வைடமின்கள். இவைகள் பால், முட்டை, இறைச்சி, பழங்கள், மீன்களின் கல்லீரலிலிருந்து எடுத்த எண்ணெய் முதலியவைகளில் அதிகம் இருக்கின்றன. கர்ப்பிணிகளுக்கு வைடமின்கள் தேவையான பொருள்கள்.

முடிவாகக் கூறுகையில் கர்ப்பிணியின் ஆகாரம் கீழ்க்கண்டவாறு இருக்கவேண்டும்.

அரிசி 10 அவுன்ஸ்.
கம்பு, கேழ்வரகு, சோளம்போன்ற தானியங்களில் ஏதேனும் } 5 அவுன்ஸ்.
பால் குறைந்தது 15 அவுன்ஸ்,
பருப்பு 3 அவுன்ஸ்,
பச்சைக்காய்கறிகள் 6 அவுன்ஸ்,
கீரைகள் 4 அவுன்ஸ்,
எண்ணெய் நெய் முதலியன 2 அவுன்ஸ்,
காய்ந்த பழங்கள் கொட்டைகள் 2 அவுன்ஸ்

இது இருபத்து நான்கு மணி நேரத்திற்கு வேண்டிய ஆகாரம். இதைத் தவிர கர்ப்பிணிகள் நாளைக்கு இரண்டு ஆரஞ்சு பழமாவது சாப்பிடவேண்டும். மாமிசம் உட்கொள்ளும் பெண்கள் காய்கறிகளுக்குப் பதில்

மூன்று அவுன்ஸ் மாமிசமும் இரண்டு முட்டைகளையும் மேற் கண்ட அட்டவணையில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

கர்ப்ப காலத்தில் வேண்டிய பொருள்களைப் பற்றி இன்னும் சில கீழே தரப்பட்டிருக்கும் அட்டவணையில் உள்ளன.

வேண்டிய பொருள்கள்	கர்ப்ப காலத்தில்	பால் கொடுக்கும் காலத்தில்
காலெரி உஷ்ணம்	2100	2500
புரதம்	65 கிராம்	80 கிராம்
கால்ஷியம்	1. 5 கிராம்	2 கிராம்
இரும்பு	15 மிலிகிராம்	15 மிலிகிராம்
வைடமின் ஏ	6000 ஐ. யு.	8000 ஐ. யு.
,, பி	1. 8 மிலிகிராம்	2. 3 மிலிகிராம்
வைடமின் பி 2	2. 5 மிலிகிராம்	3 மிலிகிராம்
நிக்கடோனிக் ஆசிட்	18 மிலிகிராம்	23 மிலிகிராம்
வைடமின் சி	100 மிலிகிராம்	150 மிலிகிராம்
வைடமின் டி	400-800 ஐ. யு.	400-800 ஐ. யு.

✲

பெர்னார்ட்ஷா ஒரு வீட்டுக்கு விருந்தாளியாய்ச் சென்றார். அப்போது வீட்டுக்காரரின் மகள் பியானோயில் பாடிக்கொண்டே ஷாவைப் பார்த்து 'உங்களுக்குச் சங்கீதம் ரொம்பப் பிடிக்குமே' என்று கேட்டாள்.

ஷா சட்டென்று' ஆமாம் பிடிக்கும். நீ அதைப்பற்றிக் கவலைப் படாதே. நீபாட்டுக்கு உன் வேலையை நடத்து,' என்று பதில் அளித்தார்.

ஸீமாவின் தமாஷ்

"ஸ்வாதி"

பாத்திரங்கள்

ஜயராம் (ஜாமா)	ஒரு கதாசிரியன்	வயது	25
ஸீமா	ஜயராம் தம்பி	,,	10
ஸுதீர்	ஜயராம் சிநேகிதன்	,,	26
ஸுகுணா	ஜயராம் தங்கை	,,	18
ஸுதா	ஸுகுணாவின் வகுப்புத் தோழி	,,	19
சீதாப் பாட்டி	ஜயராம் பாட்டி	,,	60
சீனுச் சித்தப்பா,	யக்ஞுமாமா,		
அம்பு அத்தை,	வேலைக்காரக் குப்பன்)		

காலம்: 1947

இடம்: சென்னை ராயப்பேட்டையில் ஒரு சிறு பங்களா.

I காட்சி ஆகஸ்ட் 14ந் தேதி பிற்பகல்.

II காட்சி 15ந் தேதி பகல்.

காட்சி I [ஜயராமின் படிப்பறை. அறை நடுவில் ஒரு பெரிய மேஜை. அதன் மேல் பத்துப் பதினைந்து சிறு சிறு பார்சல்களும், வர்ணக் காகிதங்கள், கயிறு, ஒட்டுப் பிசின், கத்தரிக்கோல், மெழுகுவர்த்தி, அரக்கு, வெள்ளி ஸீல் இவைகளும், ஒரு அடுக்கு கடிதங்கள், பேபர், பேனா, பேன்சில்களும் காணப்படுகின்றன. ஜயராம் ஏதோ எழுத முயற்சித்தவனாய் சில வரிகள் எழுதுவதும் கிழித்தெறிவதுமாக இருக்கிறான்.]

ஜயராம்: இதென்ன, ஒரு நாவல்கூட எழுதிவிடலாம் போலிருக்கிறது. ஒரு கடிதம் எழுத வரவில்லையே! (ஸுகுணா "ஆடுவோமே" என்று பாடிக்கொண்டே உள்ளே வருகிறாள். அவள் கையில் வெள்ளை நிற உடல், பச்சை நிறக் "காலர்" மஞ்சள் கோடுகளில் வேலை செய்த ஸ்வெட்டர் ஒன்று தொங்குகிறது)

ஸுகுணா: ஜாமா! பார்த்தாயா? (ஸ்வெட்டரைக் காண்பிக்கிறாள்.)

ஜயராம்: பலே ஜோராயிருக்கிறது. ஸுதீர் கொடுத்து வைத்தவன்.

ஸுகுணா: நீயும் கொஞ்சம் சமர்த்தாயிருந்தால் கொடுத்து வைத்தவனாகி விடலாம். ஆமாம் இதெல்லாம் நீ வாங்கி வந்த "ப்ரஸண்டு"களா? ரொம்பப் பேருக்கு வாங்கி இருக்கிறாய் போலிருக்கிறதே! (ஒவ்வொன்றாய்ப் பிரிக்கிறாள்.) என்ன அண்ணா, சிலதை இன்னும் ஸீல் செய்யவில்லையே?

ஜயராம்: ஸீல் செய்தவை தபாலில் அனுப்ப வேண்டியவை. மற்றவை இவ்வூரிலேயே பட்டுவாடா ஆகவேண்டும்.

197643

ஸுகுணா: அதெல்லாம் உன் பரிசு நாவல் காப்பிகள்தானே. சரி உள்ளூர் "ப்ரஸண்டு"களைப் பார்க்கலாம். ஒரு கதர்ச்சால்வை, வெள்ளிப் பொடி டப்பி, மூவர்ண "ஹாண்ட் பாக்" "மௌத் ஆர்கன்" "வெள்ளி ஸிகரெட் லைட்டர்" "கிராமபோன் ரிகார்டு" அண்ணா! நான் இதெல்லாம் யாராருக்கென்று "கெஸ்" பண்ணுகிறேன், சரிதானா என்று பார். சால்வை சீனுச் சித்தப்பாவிற்கு—பொடி டப்பி—யங்கு மாமாவிற்கு—மூவர்ண ஹாண்ட் பாக் அம்பு அத்தைக்கு—?

ஜயராம்: இல்லை. பிறகு?

ஸுகுணா: இல்லையா? "மௌத் ஆர்கன்" இந்த வாண்டு சீமாவிற்கு—வெள்ளி ஸிகரெட் லைட்டர்—வந்து—வந்து—ஸுதீருக்கு சரிதானே! ரிகார்டு அத்தங்காளுக்கு. ஏன் அண்ணா ஸுதாவையும் பாட்டியையும் விட்டு விட்டாய்?

ஜயராம்: "ஹாண்ட் பாக்" தான் ஸுதாவிற்கென்று—

ஸுகுணா: (சந்தோஷக் கூச்சலிட்டு ஒரு நகைப் பெட்டியைத் திறக்கிறாள்) ஜாமா! என்ன அழகான கங்கணம்! பச்சைக் கல் ஒரு வரிசை முத்தும் கோமேதகமும் அதற்கு மேலே இழைத்திருக்கிறது. இது யாருக்கண்ணா?

ஜயராம்: (அவள் கன்னத்தை லேசாகக் கிள்ளுகிறான்) அடுத்த மாதம் கல்யாணமாகிறதே அந்தப் பெண்ணுக்கு.

ஸுகுணா: (பேச்சை மாற்றி உனக்குப் போட்டிப் பரிசு வந்த பணமெல்லாம் இந்த "ப்ரஸண்டுகளில்" தீர்ந்து விட்டதுபோல் காண்கிறதே! எனக்கென்னமோ நீ ஸுதாவிற்கு இன்னும் நல்லதாய் அனுப்ப வேண்டுமென்று தோன்றுகிறது...என்ன எழுதுகிறாய்? இன்று ஒரு நாளாவது கதை எழுதுவதை நிறுத்தி வைக்கக் கூடாதா?

ஜயராம்: இது சொந்தக் கதை. அதனால்தான் ஒன்றும் ஓடவில்லை. (எழுதியதை அதிருப்தியுடன் கசக்கி யெறிகிறான்.)

ஸுகுணா: (அதைப் பிரித்துப் படிக்கிறாள்) "அன்புள்ள ஸுதாகுமாரி. இம் மகத்தான சுதந்திர நன்னாளில் என் ஞாபகார்த்தமாக......" என்ன ஜாமா இது? உன் அன்பின் ஓட்டத்தைத் துளியும் வெளியிடாமல் வெகு மரியாதையாய் எழுதுகிறாயே? அவள் கேலி செய்வதற்கேற்றாற் போல நீ 'துணிச்சலில்லாத ஆண் பிள்ளைகளில்' ஒருத்தன் தான்.

ஜயராம்: அதை என்னிடம் சொல்லிக் காட்டியதற்காக வந்தனம்.

ஸுகுணா: ஐயோ! ஜாமா! கோபமா எக்ஸ்யூஸ்மீ! நீ இவ்வளவு புகழ்பெற்ற கதாசிரியனாயிருக்கிறாய். நாவல் போட்டியில் முதல் பரிசு வாங்கியிருக்கிறாய். துணிவுடனும் வேகத்துடனும் எழுதுகிறாய். ஒரு பதினெட்டு வயதுப் பெண்ணிடம் போய் உன் மனதில் பொங்கிவரும் காதலை வெளியிட என்ன தயக்கம் தயங்குகிறாய்! அதுவும் அவள் உன் பேரைக் கேட்டாலும் பூரித்துப் போகிறாள்!......

ஜயராம்: போதும் உன் வர்ணனை. எனக்குத்தான் "புஷ்" இல்லையே! மேலும் அவளோ பெரிய பணக்காரன் பெண், அழகி. நான் யார்? பெற்றோருமில்லை, பதவி பொருள் எதுவுமில்லாத அகதி. ஏதோ பாட்டனார்

வைத்த சொத்திற்கும் பாட்டி குறுக்கே நிற்கிறாள். எனக்கும் அவளுக்கும் என்ன ஈடு? முட வனுக்குக் கொம்புத் தேன் மீது ஆசைதான். கொம்புத்தேனுக்கு முடவன் மேல் இச்சையிருக்கும் மென்று நினைப்பது மதியீனம் அல்லவா?

ஸுகுணா: அண்ணா! அண்ணா! நீ இப்படிப் பேசப் பேச எனக்குக் கோபம்தான் வருகிறது. ஸுதா என்ன நம் விஷயமெல்லாம் அறியாதவளா? என்னோடு போன ஐந்து வருஷமாய்ப் பழகுகிறாள். என்னைப் பாட்டி மனஸு போல் பதினைந்தாம் வயதே கல்யாணம் செய்து கொடுக்கவில்லை, காலேஜில் படிக்க விட்டிருக்கிறாய் என்று பாட்டிக்கு உன் மேல் கோபம். போதாததற்கு நீ உத்தியோக வேட்டையாடாமல், எழுத்தாளனானதும், தம்பி சீமாவைப் பாட்டில் "டேஸ்ட்" என்று சங்கீதத்தில் விட்டதும் அவளுக்குச் சகிக்கவில்லை. அதனால் பேச்சு வார்த்தை இல்லை. அவள் மனதுபோல் மாமா, அத்தை எல்லாம் பின் பாட்டுப் பாடுகிறார்கள். இதெல்லாம் ஸுதாவிற்கு நன்றாய்த் தெரியும். உன் துணிச்சலை எப்படிக் கொண்டாடுகிறாள் என்ன சமாசாரம்! அதிலெல்லாம் உனக்கு ஏக "புஷ்" உண்டு என்று எத்தனையோதரம் சொல்லியிருக்கிறாள். உன் மேல் அவளுக்கு ஒரே மதிப்பாச்சே!

ஜயராமன்: அப்படியா?

ஸுகுணா: அண்ணா! உனக்கு உன் சொந்தத்தில் காதற் கடிதம் எழுத வராவிட்டால் (சீமா ஒரு தையல் இலைப்பார்சலைத் தூக்கிக் கொண்டு உள்ளே வருகிறான்) உன் நாவலில் இருந்து "காபி" யடிக்கிறதுதானே?......சீமா, "காங்கிரஸ் கேக்" கிடைத்து விட்டதா? அப்பா! நல்ல வேளை, நாளை விருந்துக்கு பக்ஷணம் அமைந்து விட்டது. (அந்தப் பார்சலை வாங்குகிறாள். கையிலிருந்து ஸ்வெட்டர் கீழே விழுகிறது. சீமா அதை எடுக்கிறாள்.)

சீமா: அக்கா! "நேஷனல்" கலர்களில் என்ன அழகாய்ப் பின்னியிருக்கிறாய்! எனக்கா அக்கா?

ஸுகுணா: (சிரித்துக் கொண்டே) ஊம். இருக்கும், இருக்கும். இது வேறு ஒருத்தருக்கு — உனக்கில்லை. அழுக்காக்கி விடாதே. பத்திரம். (ஜயராமிடம்) அண்ணா! நான் கடைக்குப் போக வேண்டும். இந்தச் சீமாவை "ஹெல்ப்" பண்ணச் சொல்லேன். சும்மா ஊரைச் சுற்றிக்கொண்டு வருகிறான்...சீமா! இந்தப் பார்சல்களைக் குப்பன் மூலமாய் அனுப்ப வேண்டும். அண்ணாவுக்கு உதவி செய் (போகிறாள்)

சீமா: ஏன் அண்ணா காதற் கடிதம் எழுதுவது கஷ்டமா? (ஜயராம் மௌனம்) அண்ணா; நான் எக்ஸிபிஷனுக்குப் போகலாமா? ஏன் அண்ணா?

ஜயராம்: (கடியாரத்தைப் பார்த்து) அடடா, மணி நான் கடித்து விட்டதே! நான் வெளியே போக வேண்டுமே! சீமா! என்ன சொன்னாய்? "எக்ஸிபிஷனுக்கா" போக வேண்டும். சரி இதோ இந்த "லிஸ்டி"ன்படி இந்தப் பார்சல்களை ஒழுங்காக விலாசம் ஒட்டிக் குப்பனிடம் கொடு. சைகிளில் போய் எல்லாரிடமும் கொடுத்து விட்டு வந்து விடுவான். இதை ஒழுங்காகச் செய்தாயானால் நாளைக்கு எக்ஸிபிஷனுக்குப் போகலாம். என்ன?

சீமா: (உத்சாகத்துடன்) சரி அண்ணா, அப்படியே ஆகட்டும்.

ஜயராம்: (அவள் முதுகில் தட்டி) சரி நல்ல பையன்,...... இதோ பார் "லிஸ்ட்".

சீமா: (படித்துக் கொண்டே) பாட்டிக்கு "ப்ரஸண்ட்" ஒன்று மில்லையா? ஏன்?

ஜயராம்: ஓஹோ! நீ பாட்டி செல்லமாச்சே. பாட்டிதான் என்னோடு சண்டை போட்டுக் கொண்டு பேசுவதேயில்லை. எல்லாம் உன்னால்தான். அவளுக்கு நான் ஒன்றும் அனுப்பப் போவதில்லை. அத்தைக்கும் ஒன்றும் கிடையாது.

சீமா: அண்ணா! சுதந்திர நாள் முதலாவது நமது விரோதங்களை மறந்து சமாதானமாயிருக்க வேண்டாமா? அத்தைக்கு வேண்டுமானால் ஒன்றும் அனுப்ப வேண்டாம்.

ஜயராம்: ஓஹோஹோ! நீ பாட்டிக்கு வக்கீலா? சரிதான், எனக்கு நேரமாகி விட்டது. இதை யெல்லாம் சரியாக அனுப்பி விடு. விட்டுப்போனதை சாயங்காலம் சரிப்படுத்தி விடலாம். (மேல் வேஷ்டியை எடுத்துக் கொண்டு விரைந்து போகிறான்).

சீமா: (தனியே) சரி, அண்ணாவும் அக்காவும் ஏழு மணிக்குத் தான் வருவார்கள். எனக்கு இன்னும் கொடிகள் செய்தாக வேண்டும். அலங்காரமெல்லாம் செய்து முடிக்க வேண்டும். ஒரு வேலையைச் செய்ய விட்டால் தானே! இங்கே போ, அதை வாங்கி வா, இதைக் கட்டு, அதைச் சுருட்டு என்று இவர்கள் இடும் வேலைகளுக்கே பொழுது சரியாகி விடுகிறது. இந்தப் பெரியவர்களே இப்படித் தான். எல்லாவற்றையும் சின்னவர்கள் தலையில் போட்டு விடுகிறத. போகிறது. (பொட்டலத்திலிருந்து ஒரு துண்டு "கேக்"கை வாயில் போட்டுக் கொள்கிறாள்) "கேக்" பேஷாயிருக்கிறது. (லிஸ்டைத் திரும்பப் படிக்கிறான்). இந்த மாமா சித்தப்பாவிற்கெல்லாம் தண்டத்திற்கு வெள்ளிச் சாமானும் சால்வையும் அனுப்புவானேன். எங்களைக் கண்டால்கூடப் பிடிக்காதே! பாட்டியை நல்லதனம் செய்து கொள்ள, ஸுதாவைச் சந்தோஷப் படுத்த...இதெல்லாம் அண்ணாவிற்குத் தெரிவதில்லை... எனக்கு ஒரு "ப்ரஸண்டை"யும் காணோமே? அக்காவிற்கு மட்டும் இந்தக் கல்லிழைத்த வளையல்...ஸுதீருக்கு வெள்ளி சிகரட் லைட்டர்...ஏயப்பா! ஸ்வெட்டர் வேறேயா? ஒன்று செய்கிறேன். இந்த ஸ்வெட்டரை நான் எடுத்துக் கொண்டு விடுகிறேன். அதுதான் சரி.

(குப்பன் உள்ளே வருகிறான்).

குப்பன்: என்ன இன்னும் சும்மா இருக்கிறாய்? மணி நாலரை யாச்சு, எல்லாம் ஒரு வழியா கட்டி முடிக்காமே, இந்தப் பக்ஷணத்தை தீர்த்துக்கொண்டிருக்கையே?

சீமா: (ஒரு குதி குதிக்கிறான்) சும்மா இரடா, இங்கே நம்ம வேலைத்தனத்தைக் காட்டலாம். இது தான் நல்ல யோசனை! (விசிலடித்துப் பாடுகிறான்.)

குப்பன்: என்ன குறும்பு செய்யப்போகிறாய்?

சீமா: குப்பா! குப்பா! நாளைக்கு இவர்களெல்லாம் விருந்துக்கு வரும்போது பெரிய வேடிக்கை நடக்கப்போகிறது பார். ஒரு குஷியான நாடகம்! நீ வாயை மூடிக் கொண்டிருந்தால்

நீயும் எக்சிபிஷனுக்கு வரலாம். கப் சிப். வெளியே விட்டையோ பார்...கேள், இந்த "லீஸ்டின்" படிக்கில்லாமல், "ப்ரஸண்டு" களை மாற்றி மாற்றி அனுப்பி விடுகிறேன். அடடா! "ப்ரஸண்டுகளை" அவர்கள் வெளியே எடுக்கும் போது என்ன நேர்த்தியாயிருக்கும்! பார்க்கத்தான் முடியாது. (நகைக்கிறுன்)

குப்பன்: ஏதாவது வம்புச் சண்டை இழுத்து விடாதே நல்ல நாளும் அதுவுமாய்! உனக்கென்ன, அண்ணன் பாடு திண்டாடிப்போகும்.

சீமா: நான் அண்ணனுக்கு நல்லதைத்தான் செய்யப் போகிறேன். அவனுகத் துணிந்து ஒரு நாளும் செய்ய மாட்டான். (ஜயராம படித்துவிட்டு அடையாளம் வைத்திருத்த பக்கத்தைப் படித்துப் பார்த்து விட்டு) இதுதான் சரியான வழி. இந்த "புக் மார்க்" குடன் புத்தகம் இந்த வளையல் இரண்டும் ஒரு பார்சல். (சுறுசுறுப்பாய் விலாசங்களை மாற்றி ஒட்டி விடுகிறுன்) குப்பா! குப்பா!

குப்பன்: ஐயோ, என்னைத் திட்டுவாங்களே உன் வேலைத்தனத்தால்! என்ன குறும்பு உனக்கு, போ!

சீமா: உனக்கொன்றுமில்லை. இது சும்மா தமாஷ் அப்பா! சீக்கிரம் போய் விட்டுவா! நான் கொடிகள் செய்ய வேண்டும்! வீட்டை அலங்கரிக்க வேண்டும்!

(திரை)

காட்சி II [பகல் பனிரண்டு மணி. சுதந்திரத் திருநாள். ஜயராம் வீட்டுக் கூடத்தில் செம்மண், மாக்கோலம் முதலிய அலங்காரத்துடன் குத்துவிளக்குகள் எரிகின்றன. சுகுணு, சீமா இருவரும் "ஆடுவோமே" என்று பாடிக் கொடியை வணங்குகிறுர்கள். ஜயராம் உள்ளே வருகிறுன்.]

ஜயராம்: ஸுகுணு! சாப்பாடு தயாராகிவிட்டதா? எல்லாரும் வந்தவுடன் இலை போட்டுக் கூப்பிட்டுவிடு. இல்லாவிட்டால் ஏதோ பேச்சில் தொடங்கி வம்புச் சண்டையில் முடியும். சீமா எங்கே? இருக்குமிடம் தெரியவில்லையே? ஏன்?

(கார் வருகிற ஓசை கேட்கிறது. குப்பன் வருகிறுன்.)

குப்பன்: ஸுதா அம்மா வருது. (ஸுதா மிக அழகாக 'நேஷனல்' கலர்களில் புடவை உடுத்திச் சிரித்த முகத்துடன் நுழைகிறுள்)

ஸுதா: எல்லாருக்கும் ஜெய்ஹிந்த்! (ஜயராமிடம் வந்து கைகளை நீட்டி மெல்லிய குரலில்) ஜாமா, உங்கள் அன்பான "ப்ரஸண்ட்". நீங்கள் உங்கள் பரிசு நாவலில் குறித்தனுப்பிய வாக்கியங்கள் இரண்டும் உங்கள் மனதைச் சித்தரித்துக் காட்டி விட்டன. உங்களையடைய நான் அதிருஷ்டம் படைத்தவள்தான்.

ஜயராம்: (திகைப்புடன் விழிக்கிறுன்) ஸுதா!...ரொம்ப சந்தோஷம். ஏதோ என் சிறு பரிசை ஏற்று...(கைக் கங்கணத்தைப் பார்க்கிறுள். ஸுகுணு வேலை யென்று ஒருவாறு விஷயத்தை ஊகித்து) ஸுகுணு! எல்லாம் உன்னுல்தான். ஸுதா இனி என்னுடைய......

ஸுதா: உன் சிநேகமும், உன் அண்ணுவின் மேன்மையும் என்னை ஆட்கொண்டு விட்டன.

ஸுகுணு: (அவளைத் தழுவிக் கொண்டு) இதற்காகத்தானே காத்துக் கொண்டிருந்தேன். இன்றே நல்ல நாள்! (ஜயராமைக்

குறும்பாகப் பார்த்து) ஜாமா, ரொம்பக் கபடு கற்றிருக்கிருயே! (ஸுதாவின் கங்கணத்தை இருவரும் திருப்பித் திருப்பிப் பார்த்து மகிழ்கின்றனர். வெகு பரபரப்புடன், மாமா, சித்தப்பா அத்தை மூன்று பேரும் உள்ளே நுழைகிருர்கள்)

மாமா: (கோபத்துடன்) ஜாமா, வயதாக ஆக உன் நடவடிக்கை கொஞ்சமும் நன்ருயில்லை போ! இந்த "மௌத் ஆர்கனை" எனக்கு வெகுமதி அனுப்பியதற்கு என்ன அர்த்தம் என்று தெரிந்து போகத்தான் வந்தேன். (மேஜைமீது அதை வீசி எறிகிருர்).

ஜயராம் - ஸுகுணு: (ஆச்சரியத்துடன்) மாமா, இது உங்களிடம் எப்படி வந்து சேர்ந்தது?

சித்தப்பா: (மண்டையை ஆட்டிக் கொண்டு கோணப் பார்வையுடன்) உங்களுக்கெல்லாம் நாங்கள் கேலியாப் போய் விட்டோம். நான் என்ன சிகரட் குடிக்கிறவனென்று இதை அன்புடன் அனுப்பினுய். (சிகரெட் லைட்டரை ஜாமா முகத்திற்கு நேரே தூக்கிக் காட்டுகிருர்).

ஜயராம்: (திகைத்து) சித்தப்பா, நடந்ததென்ன வென்றே எனக்குப் புரியவில்லை. நான் இதை ஸுதீருக்காக வாங்கினேன். (சீமா வாயிற் புறமாய் நழுவப் பார்க்கிருன். ஸுதீர் அவனை உள்ளே தள்ளிக் கொண்டே வருகிருன்).

ஸுதீர்: ஹல்லோ, ஜாமா, ஹல்லோ ஸுகுண்! என்ன விசேஷம்? ஒரு மாதிரியா யிருக்கிறீர்கள்!

அத்தை: உங்கள் காரியம் ஒன்றும் எனக்குக் கட்டோடு பிடிக்க வில்லை. ஒரு கிழவியுடன் என்ன விளையாட்டு உங்களுக்கு? சொட்டிப் பறக்கிறது புத்தி? எனக்குக் காது செவிடு என்று பரிகாசமாய்த்தானே இந்த கிராமபோன் ரிகார்டை எனக்கு அவசரமாய் அனுப்பினீர்கள்?

ஸுதீர்: ஓஹோ, உங்களுக்கும் அப்படித்தானு? என்னிடம் தான் ஏதோ குறும்புக்காக...

ஸுகுணு: ஏன், உங்கள் "ப்ரெஸெண்டு"ம் மாறிவிட்டதா? (ஸுதீர் பொடி டப்பியைக் காட்டுகிருன்).

ஸுகுணு: (கண்ணீர் ததும்ப) இதென்ன வேடிக்கை? நான் ஆறு மாதமாய், இராப்பகலாய்ப் போட்ட ஸ்வெட்டர் வரவில்லையா? (ஸுதீர் நகைத்துத் தலையசைக்கிருன்).

ஜயராம்: அத்தை, ஸுதீர்! என்னவோ, மாருட்டம் நடந்து இப்படி எல்லாம் தாறுமாருக வந்திருக்கின்றன. (கோபத்துடன்) எங்கே அந்த சீமாப் பயல்? (சீமா மறுபடி நழுவுகிருன்).

ஸுதா: (கலங்கிய முகத்துடன்) இப்பொழுது எனக்கும் தெரிகிறது. இதுகூடத் தவருன பரிசு என்பதில் சந்தேகமில்லை. (கங்கணத்தைக் கழற்ற முயற்சிக்கிருள். ஜயராம் அவளைக் கெஞ்சும் பார்வையுடன் பார்க்கிருன்)

ஜயராம்: இல்லை. உன் விஷயத்தில் தவறு இல்லவே யில்லை. சற்றுப் பொறு. எனக்கு இப்பொழுதுதான் விளங்குகிறது. சற்று நான் சொல்லுவதைக் கவனியுங்கள் (கையமர்த்துகிருன். எல்லாரும் ஒன்ருய்ப் பேசுவது நிற்கிறது. வாயிற்படியைத் தாண்டித் தள்ளாடிக் கொண்டு சீதாப் பாட்டி கையில் தையலிலைப் பார்சலும் தோளில் கதர்ச் சால்வையுமாய் உள்ளே வர

சீமா அவனைத் தாங்கிக்கொண்டு வருகிறான்).

அநேக குரல்கள்: பாட்டி, அக்கா, மாமி!

பாட்டி: (சீமாவைத் தழுவி முத்த மிடுகிறாள். ஜயராமையும், ஸுகுணாவையும் முகத்தைத் தடவி திருஷ்டி கழிக்கிறாள்) என் கண்ணே சீமா! என் செல்வங்களா! இந்தக் கோபக்காரக் கிழவியிடம் உங்களுக்கு என்ன அன்பு! உங்கள் மனசு தாராளமும் பெருந் தன்மையும் என்னை உருக்கி விட்டதப்பா! இந்தச் சீமாவிற்கு நான் வளர்த்த அபிமானம் விடவில்லையே! ஒரு நூறு மைசூர்ப்பாகு தன் "ப்ரஸெண்டா" தனியே அனுப்பியிருக்கிறானே குழந்தை! அப்பா ஜாமா, குழந்தே ஸுகுணா, இந்த நல்ல நாளில் என் துர்க்குணத்தை யெல்லாம் மன்னித்து இத்தனை அழகான சால்வையை அனுப்பினீர்களே! (மற்றவர்களிடம் காண்பிக்கிறாள்) நான் ஒரு பைத்தியக்காரி. வாயால் என்ன கடிந்தாலும் பாசம் விடுமா? உங்கள் பாட்டனார் சொத்தை உங்களுக்காகத்தான் பூதம் மாதிரி காக்கிறேனே தவிர தம்படி ஒருத்தருக்குக் கொடுக்கச் சகிப்பேனா? ஜாமா! ஏன் இப்படி திகைத்து நிற்கிறாய்?

சீமா: இதுதான் சமயம். அண்ணா, பாட்டியிடம் நான்... (ஜயராம் அவனை வாயடக்கிவிட்டுச் ஸுதாவைக் கையைப் பிடித்து அழைத்துவந்து நிறுத்துகிறான்)

ஜயராம்: பாட்டி! என்னுடைய மற்ற உறவினர்களே! கேளுங்கள் உங்கள் எல்லாருடைய மன்னிப்பையும் கோருகிறேன். நடந்த கலவரமெல்லாம் என்னால்தான். ஆனால் உண்மை விஷயத்தை யறிந்தால் நீங்களெல்லாம் கோபத்தை விட்டுச் சந்தோஷ மடைந்து இதைச் சுதந்திரத் திருநாளன்று நடந்த "தமாஷ்" என்றுதான் சொல்வீர்கள். (சீமா வாயைத்திறந்து மறுபடி மூடிக் கொள்கிறான்) நேற்று சாயங்காலம், நான் வெகு நாளாய் என் மனதிலிருந்த விருப்பத்தை வெளியிட்டு, ஸுதாவிற்கு ஒரு ஜதை கங்கணமும்...

சீமா: நீ அதை......

ஜயராம்: என் பரிசு நாவலில் வெளிவந்துள்ள ஒரு காதல் கட்டத்தில் சில வரிகளையும்......

ஸுகுணா: ஜாமா......நான் சொன்னபோது......!

ஜயராம்: சற்றுப் பொறுமையாய்க் கேளுங்கள். அவற்றுடன் என்னை ஏற்கும்படி எழுதியனுப்பினேன். அதற்கு என்ன பதில் வருமோ, என் அதிருஷ்டமும் காதலும் என்ன ஆகுமோ என்ற குழப்பத்தில் இந்த "ப்ரெஸண்டு"களை விலாசம் மாற்றி ஒட்டி அனுப்பிவிட்டிருக்கிறேன். இப்பொழுதுதான் என் கனவு நினைவாயிற்று. ஸுதா என்னை மணம் புரிய சம்மதித்து விட்டாள்.

எல்லோரும்: ரொம்ப சந்தோஷம். கங்ராசுலேஷன்ஸ்!

ஸுதீர்: (பாட்டியிடம் வந்து) பேரன் கலியாணத்திற்குள் பேத்தியையும் சற்றுக் கவனிக்க வேண்டும். மாப்பிள்ளை நான் "ரெடி".

பாட்டி: (கலகல வென்று சிரித்து) இரட்டைச் சந்தோஷம்! இரண்டு கல்யாணங்களும் ஒரே முகூர்த்தத்தில் (எல்லோரையும் பார்த்து) என்ன சொல்லுகிறீர்கள்?

உறவினர்கள்: அப்படியே நடக்கட்டும். எங்களுக்கும் சந்தோஷம்.

மாமா: ஜயராம்! நீ இவ்வளவு புத்திசாலி, அதிருஷ்டசாலி என்று நான் நினைக்கவேயில்லை.

சித்தப்பா: அம்மா ஸுதா! உன்னை நினைத்துக் கொண்டு பையன் எத்தனை கோளாறுகள் செய்துவிட்டான் பார்!

ஸுதீர்: ஆனாலும் என்ன, அதற்காக இப்படி ஒரே கேலிக் கூத்தாக அடித்து விடலாமா ஜாமா? நான் ஏதோ வேண்டுமென்று கிண்டல் செய்தவிட்டாயோ என்றுகூட நினைத்தேன்.

ஸுதா: நானும் அதே சந்தேகமடைந்தேன். ஆனால் அவருடைய சுபாவம் அப்படிப்பட்டதல்ல. இந்தத் தவறுகளுக்கு நான்தான் காரணமாயிருப்பதனால் இதை எல்லோரும் மறந்து நடந்ததை ஒரு 'தமாஷா'க எடுத்துக் கொள்ளக் கோருகிறேன்.

ஸுதீர்: அதுதான் சரி. என்ன ஜாமா, சுதந்திரத் திருநாளன்று நாமிருவரும் சுயேச்சையை இழக்கிறோமே!

(எல்லோரும் நகைக்கிறார்கள்.)

ஸுகுணா: மணி ஒன்றாகிவிட்டது. எல்லோரும் சாப்பிடலாம் வாருங்கள்· வா, மன்னி! (ஸுதாவுடன் உள்ளே போகிறாள். ஜயராம், சீமா, குப்பன் தவிர மற்றவர்களும் போகிறார்கள்.)

ஜயராம்: (பத்து ரூபாய் நோட்டைச் சீமாவிடம் கொடுக்கிறான்) ஏ வாண்டுப் பயலே! நீதானே இத்தனைக்கும் காரணம். உன் 'தமாஷ்' நல்லபடியாகிவிட்டது. எக்ஸிபிஷனே எங்கேயோ போய்க்கொள். கல்யாணம் ஆகிறவரை உன் திருவாயைக் கெட்டியாய் மூடிக்கொண்டு இரு. தெரிகிறதா? [சீமா தலையை ஆட்டுகிறான். ஜயராம் உள்ளே போகிறான்.]

சீமா: என்ன குப்பா! பார்த்துக் கொண்டாயா! எனக்கு ரூபாய்! பாட்டிக்குச் சந்தோஷம், அக்காவிற்கும் அண்ணாவிற்கும் கலியாணம்! எப்படி என் தமாஷ்?

குப்பன்: எல்லாம் "சீமாவின் தமாஷ்' பலே பேஷ்தான். வா, போகலாம். பசி வயிற்றைக் கிள்ளுகிறது.

(போகிறார்கள். திரை)

ஓமம்

[டாக்டர்]

அடுத்த வீட்டுச் சுப்பிப் பாட்டிக்கும் எனக்கும் கடந்த நாலைந்து தினங்களாக பிரமாதமான தர்க்கப் போர் நடக்கிறது! விஷயம் என்னமோ சின்னதுதான். ஆனால் படித்த நாகரீகப் பெண்ணாகிய என்னை, பாட்டி, ஒன்றுமே தெரியாதவளாக நினைத்துவிடுகிறாள். நான் அப்படி என்ன லேசாகவிட்டுக்கொடுத்துவிடக்கூடியவளா? என்றாலும் பாட்டிதான் முடிவிலே வெற்றி பெறுகிறாள்! இப்போதைய தர்க்கத்துக்குக் காரணம் யார் தெரியுமா? என்னுடைய தலைச்சன் சுண்டுப்பயல்தான்! எப்படியோ அவன் கண்டதையும் கேட்டதையும் தின்றுவிட்டு 'வயத்தை வலிக்கிறது-வலிக்கிறது!' என்று கத்த ஆரம்பித்தான். போதாக் குறைக்கு வயிறும் கொஞ்சம் உப்பியிருந்தது. டாக்டர்கிட்டே ஓடினேன். ஆனால் பாட்டி 'நன்னாருக்குடி நீ சிறிசு! ஒண்ணும் தெரியல்லை. நாலு ஓமத்தையும் ஒரு உப்பையும் வச்சுப் பொடிச்சுக் கொடுத்தால் போராதா? அந்த டாக்டர் கொடுக்கிற தண்ணிக்குக் காசு தரது ஒரு பெருமையாகும். நான் சொல்றேனென்று பாக்காதே. ஓமம் எப்படிப்பட்ட மருந்துப் பொருள் தெரியுமா? என்று ஓம மகாத்மியத்தை சொல்ல ஆரம்பித்து விட்டாள். அவள் சொன்னதை அப்படியே இங்கு எழுதியிருக்கிறேன். படித்துப் பாருங்கள். பயன் உண்டு.

ஓமத்தில் தைமால் என்னும் மருந்தச்சத்து இருக்கிறது. வயற்றில் ஆகாரம் புளித்து கெட்ட வாயுக்கள் ஏற்பட்டு உப்பிசம் ஏற்பட்டிருக்கும் போதும், அஜீர்ணம் வயிற்றுவலி இருக்கும் போதும், ஓமத்தையும் சோற்றுப்பையும் சமமாகக் கலந்து பொடித்து ஷை உபத்ரவங்களுக்குக் கொடுக்கலாம். சோற்று உப்புக்குப் பதில் சோட உப்பை உபயோகிக்கலாம்.

காலராவுக்கு ஓமம் ஒரு பாகமும், கற்பூரம் 16-ல் 1 பாகமும், ஜலம் நூறுபாகமும் சேர்த்து அர்க்கமாக வடித்துக் கொடுப்பதால், உடனே குணம் உண்டாகும். இதையே கொக்கிப்புழு முதலிய குடல் பூச்சிகளை ஒழிக்க ஒன்றுக்கு 4 பாகம் ஜலம் சேர்த்துக் கொடுக்கலாம். சிறு குழந்தைகளுக்கு அஜீரண உபத்திரவம் நேராதிருக்க ஓமத்தை நெய்யில் வறுத்து உப்போடு சேர்த்துப் பொடித்து சாதத்தில் பிசைந்து கொடுக்கலாம்.

ஒரு வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு ஒரு சிட்டிகை ஓமத்தை சுத்த ஜலத்திலாவது இழைத்து 16-மடங்கு ஜலமோ பாலோ கலந்து புகட்டினால் வயிற்றுப்பிசமும், மற்ற கோளாறுகளும் நீங்கும். தினசரி காலை வேளைகளில் வெறும் வயிற்றில் கொடுத்து வரலாம்.

மார்ச்சளியாக பிடித்துக் கொண்டு இருமும் போது, ஓமத்தை வெடிக்கவிட்டு, ஜலம்

விட்டு கொதிக்கும்போது மிளகைத் தட்டிப்போட்டு இறக்கி வெல்லம் சேர்த்துக் கொடுப்பதால் உடனே குணம் உண்டாகும். இந்தக் கஷாயத்துடன் பாலும்கூட சேர்த்துக் கொடுக்கலாம்.

ஓமத்தை அரைத்து மஞ்சள் பொடி கலந்து ஆமணக்கெண்ணெய் சேர்த்துக் கொதிக்க வைத்துக் கட்டுவதால் காலில் தைத்த முள் முதலியவை வெளி வந்துவிடும்.

இதையே கீல்பிடிப்புகளுக்குக்கூட பொறுக்க முடியுமான சூட்டில் வைத்து கட்டுவதால் குணமாகும்.

ஓமத்தை வறுத்து மார்ச்சளிக்கும ஆஸ்துமாவுக்கும் ஒத்தடம் கொடுக்கலாம்.

மூர்ச்சைபோட்டு விழுந்தவர்களுக்கு கால்களுக்கும் கைகளுக்கும் ஓமத்தை வறுத்து ஒத்தலாம்.

ஜலதோஷத்திற்கு கஸ்தூரி பஞ்சள் சாம்பிராணி இவற்றோடு ஓமத்தையும் சேர்த்து நெருப்பில் போட்டு புகை பிடிக்கலாம்.

இப்படியெல்லாம் ஓமத்தைப் பற்றி பாட்டி சொல்லும்போது நான் பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கிறேன். கடைசியிலே பாட்டியும் என் அறியாமைக்கிரங்கி எட்டுப் படிப்பு எதுக்குடி பிரயோசனம்? அனுபவம் தாண்டி வேணும், என்பாள். நானும் வேறு வழியின்றி ஆமாம் பாட்டி ஆமாம் என்று ஒப்புக் கொள்வேன். உண்மையை ஒப்புக்கொள்வதில் என்ன அகௌரவம்?

மிளகு மகத்துவம்!

இந்தியாவிலேயே மிளகு அதிகம். ஐரோப்பியர்கள் நெடுங்காலமாக இதை உணவில் கலந்து சாப்பிடுகிறார்கள். ஐரோப்பாவைச் சேர்ந்த ஒரு அரசன் சுமார் 1500 வருஷங்களுக்கு முன், தன்னிடம் தோற்ற அரசனிடமிருந்து நஷ்ட ஈடாக ஆயிரம் வீசை மிளகு கேட்டானும்.

பானங்கள்

'செல்லம்'

'ரொம்ப பேஷ் செல்லம் நீங்கள் சொல்றது! பால் படி ஒரு ரூபாயும் ஒண்ணரை ரூபாயும் விக்கறச்சே, அதிகமாகப் பால் குடியுங்களாம். காபிக்கே பால் கிடைக்கல்லே'' என்று என் சகோதரியின் குரல் என் காதுகளில் ஒலிக்கிறது. ஆனல் நான் மகாத்மா காந்தியவர்கள், 'அதிகமாக நூற்கப் பழகுங்கள். துணிப்பஞ்சம் ஒழியும்' என்று சொல்வது போலவே, "அதிகமாகப் பால் குடியுங்கள். மருந்துப் பஞ்சம் ஒழியும்'' என்று சொல்லுகிறேன்.

பால் விலை ஏறிவிட்டதால் நாம் பால் வாங்குவது நிற்கவில்லை. ஏனென்ருல் பால் குடிக்காமல் இருக்கத் தயார். ஆனல் காபி குடிக்காமல் இருக்க முடியாதே! பாலில்லாமல் காபி குடிக்க நாம் எல்லோரும் பழகிக் கொள்ளவில்லையே!

காபி கலக்காத பால்

நான் சொல்வதென்னவென்ருல், பாலில் காபியைக் கலந்து குடிக்க வேண்டாம். வெறும் பாலை மாத்திரம் குடியுங்கள். உடம்புக்கு நல்லது என்றுதான். இதற்குப் பல ஆட்சேபணைகள் இருக்கின்றன. முதலாவதாக காபி குடித்துப் பழகியவர்களால் அதில்லாமல் இருக்க முடியவில்லை. பால் அதிகமாகவும், காபிக் கஷாயம் (டிகாக்ஷன்) குறைவாகவும் சேர்த்துக் கொண்டுவந்து, கிரமமாக அதை ஒழிக்க முயற்சிக்கலாம். அல்லது என் தங்கை செய்வது போல, கால் வீசை காபிக் கொட்டையோடு ஒரு படி கோதுமையை வறுத்துச் சேர்த்துப் பொடித்து உபயோகித்து வந்தால் சீக்கிரத்தில் 'காபிவெறி' மறந்துவிடும். காபிக்குப் பதிலாக ஏதாவது கிடைத்தாலும் திருப்தியாய்விடும்.

காபிக்கு பதில் மால்ட்

இரண்டாவது, வீட்டிலுள்ளவர்கள் எல்லோருக்கும் காபிக்கு பதிலாக பால் கொடுப்பதென்ருல் தினசரி நான்கு படி பால் கூடப் போதாதே!

பால் குடிக்க வேண்டுமென்ருல் அப்பட்டம் பாலைக் குடிக்கச் சொல்லி யார் சொன்னர்கள்? அம்ருதமாகிய பாலில் காபீன் விஷத்தை ஒரு சொட்டு சேர்த்துப் பருக வேண்டாமென்றுதானே சொன்னேன். கேழ்வரகு அல்லது சோளத்தை மால்ட்' செய்து வைத்துக் கொண்டு அதைக் கொதிக்கிற ஜலத்தில் கலந்து பால் கலந்து குடித்தால், உற்சாகத்திற்கு உற்சாகம்; ஆகாரத்திற்கு ஆகாரம்; புஷ்டிக்கு புஷ்டி.

'மால்ட் செய்வதெப்படி ?

'ஆமாம், 'மால்ட் செய்ய யாருக்குத் தெரியும்? அதற்காக வேறு யந்திரங்கள் வாங்கவேண்டுமே' என்கிறீர்களா? மால்ட் செய்வது வெகு சுலபம். சோளத்தையோ, கேழ்வரகையோ, கல்லை அரித்து, ஒரு

ஈரத் துணியில் கட்டி ஜலம் தெளித்து, இரண்டு மூன்று நாட்கள் வைத்தால் சிறு முளைகள் வரும். உடனே நிழலில் உலர்த்தி, பொன் வறுவலாக வறுத்து, இயந்திரத்தில் அரைத்து, (மிஷினில் அரைப்பதை விட, கையந்திரத்தில் அரைப்பது மேல். வாசனை கெடாது.) சலித்து, ஒரு புட்டியிலாவது, டப்பியிலாவது, அடைத்து விட்டால், அது தான் மால்ட். இதனுடன் பால் பொடியும் கலந்துதான் 'ஹார்லிக்ஸ்' செய்கிறார்கள். அந்த சீமைச் சரக்குக்காக பணத்தைக் கொட்டுவதுடன், பலரைக் கெஞ்சிக் கூத்தாடி ஒரு மாதத்திற்கு முன் ரிஜிஸ்தர் செய்து, தினசரி கடைக்கு நடந்து, பல்லைக் காட்டி கெஞ்ச வேண்டாமே. ஒரு புட்டி ஹார்லிக்ஸ் விலைக்கு ஒரு குடும்பத்திற்கெல்லாம், ஒரு மாதத்திற்குப் போதுமான 'மால்டை' வீட்டிலேயே தயார் செய்து கொள்ளலாமே. சிறிது பழகி விட்டால் வீட்டு 'மால்டு'க்கும் 'ஹார்லிக்'ஸுக்கும் குணத்திலாவது மணத்திலாவது பேதமே தெரியாது.

'ஆமாம்! இந்த அவதியெல்லாம் யாரால் பட முடியும்' என்கிறீர்களா? வாஸ்தவம்தான். சோம்பலை ஒழித்துத் தன் முயற்சியிலீடு பட விரும்புவர்களுக்குத்தான் இதுவெல்லாம் எழுதப் படுகிறது. தற்காலத்தில் காபிக் கொட்டையை வாங்கிவந்து வறுத்துப் பொடிக்கும் சிரமத்தை நமக்குக் கொடுக்காமல் பொடியாய்க் கொடுத்து விடுகிறான் கடைக்காரன். 'அதை விட்டு விட்டு, இந்தப் பாடெல்லாம் யாருக்கு வேண்டு மென்கிறவர்கள், பேஷாக காபியே குடித்துக் கொண்டிருக்கட்டும். மாதந்தவறாமல் டாக்டர்களுக்கும் அள்ளிக் கொடுக்கட்டும். ஆனால் விஷயந் தெரியாமல் சில சகோதரிகள் தாங்கள் காபி குடித்துப் பழகிக் கொண்டது போதாதென்று குழந்தைகளுக்கும் கொடுத்துப் பழக்குகிறார்களல்லவா? அவர்களை எச்சரிக்கிறேன்.

மூன்றாவது ஆட்சேபனை, ஸ்ரீமதி நிர்மலா விடமிருந்து வருகிறது. "என் மருமான் விசுவத்திற்குப் பாலைக் கண்டால் ஒக்காளம் வருகிறது" என்கிறார். ரொம்பசரி. பாலை விரும்பாத குழந்தைகள் தென்னாலி ராமன் வளர்த்த பூனைக் குட்டியைப் போன்றவர்கள். ஒரு வேளை பாலில் ஆமணக் கெண்ணையைக் கலந்து கொடுத்திருப்பார்கள் குழந்தைப் பருவத்தில். அப்பொழுது பாலின் மேல் (இல்லை—ஆமணக் கெண்ணை காரணமாக) ஏற்பட்ட துவேஷம் இன்னும் மாறவில்லை. அதை மாற்றுவதற்காக அவஸ்தைப்படவேண்டாம். பின் வரும் பானங்களைக் கொடுத்துப் பாருங்கள்.

(1) தேவ பானம்

பால் 1 ஆழாக்கு தேன் 8 ஸ்பூன் எலுமிச்சம்பழ ரஸம் சில துளிகள். இவற்றை ஒன்றாகச் சேர்த்து நன்றாகக் குலுக்கி பனிக்கட்டி யவ்வளவு குளிர்ச்சியாக குடிக்கக் கொடுங்கள்.

குறிப்பு:—பாலில் பனிக்கட்டி (ஐஸ்)யைப் போடக் கூடாது. பால் பாத்திரத்தைச் சுற்றி பனிக்கட்டியை வைத்துக் குளிர்ச்சியாக்கலாம். அல்லது ரிப்ரிஜரேட்டரில் வைத்துக் குளிர்ச்சி யாக்கலாம்.

(2) சிங்கப்பூர் பாயசம்

புதிதாய்ச் செய்யப்பட்ட ஆரஞ்சு ரஸம் ஒரு கோப்பை

ஒரு உடைத்த முட்டை பால் 1 கோப்பை. சர்க்கரை 4 ஸ்பூன். ஆரஞ்சுப் பழத்தோல் மெல்லியதாய் சீவப்பட்டது ஒரு ஸ்பூன்.

எல்லா வற்றையும் ஒன்றாகச் சேர்த்து கரண்டியால் அடிக்கவும். மேலே மெல்லிய ஆரஞ்சுத் தோல் பொடியைத் தூவி ஐஸில் குளிரச் செய்து பரிமாரவும்.

(3) வாழைப் பழ சர்பத் பால்

நன்றாகப் பழுத்த வாழைப் பழங்கள் 6, முட்டை 4, பால் 4 ஆழாக்கு, வெலா எஸ்ஸென்ஸ் 2 ஸ்பூன். பழங்களை நன்றாகப் பிசைந்து ஒரு சல்லடையில் வடிகட்டவும். பாலையும் எஸ்ஸென்ஸையும் உடைத்த முட்டைகளையும் சேர்த்து நுரை கிளம்பக் கடையவும். தித்திப்பில்லாமையால் இஞ்சி ஊறுகாயோடு பரிமாறலாம். அல்லது சிறிது சர்க்கரை சேர்த்து உடனே சாப்பிடலாம். இது நல்ல புஷ்டியுள்ள ஆகாரம்.

காபி, டீ செய்வதை விட மேற்படி பானங்களைச் செய்வது சிரமம்தான் என்று ஒப்புக் கொள்கிறேன். ஆனால் குழந்தைகளுடையவும் தங்களுடையவும் க்ஷேமத்தில் கருத்துள்ள வர்கள் சிரமத்தைப் பாராட்டலாமா?

டி. டி. டி.

முதல் மகா யுத்த காலத்திலே தேசங்கள் எங்கும் பரவிய நோய்கள் பல. அவற்றிலே 'டைபஸ்' என்னும் நோய்தான் பிரசித்தம். ருஷ்யாவிலே இந்த நோய் பரவி 50 லக்ஷம் பேரைக் கொள்ளைகொண்டது. இந்த நோயின் உற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் காரணம் என்னவென்று பார்த்தால் விந்தையிலும் விந்தையான பதில் கிடைக்கும். 'பேன்' என்ற சிறு ஜந்துதான்! இந்தப் 'பேன்' பரப்பிய வியாதியை ஒழிப்பது சுலபமாயிருந்ததா? டி. டி. டி. (D. D. T.) என்னும் மருந்துதான் கடைசியிலே இந்த நோயைத் தீர்க்க பயன் பட்டதாம். பர்மா, இத்தாலி, ருஷ்யா முதலிய இடங்களில் மிகக் கொடுமையாய்ப் பரவிய 'டைபஸ்' டி. டி. டியால் தொலைந்ததால்தானோ என்னவோ இக் காலத்திய விஞ்ஞானிகள் 'பெனிஸிலினை'ப் போல, டி.டி.டி.யையும் ஒரு மகா 'சஞ்சீவி' என்று புகழ்கின்றனர். தவிரவும் இப்பொழுது மாதம் ஒன்றுக்குச் சுமார் 600 டன் டி. டி. டி. பொடி தயாரிக்கப் பெறுகிறது என்றால் பயனைப் பற்றித் தெரிந்துகொள்ள இது போதாதா?

அரசியல் வாதி

உலகம் நான் இல்லாவிட்டால் பிழைக்காது என்று எண்ணுபவன் அரசியல்வாதி! உண்மை, ஒழுக்கம், பெருமை எல்லாம் அரசியல் வாதிகளிடம் நெருங்குவது எதிர்பார்க்கக் கூடாததே! ஆயினும் அரசியல் கட்சிப் பிரதி கட்சிகள் அவசியம் இருக்கத்தான் வேண்டும், அப்பொழுது தானே உலகத்திலே செத்துக்கொண்டிருக்கும் பொய், போட்டாபோட்டி எல்லாவற்றிற்கும் புத்துயிர் ஏற்படும்?

—மார்டின்

வெளியாகிவிட்டது!

ஆங்கிலம் - தமிழ் அகராதி

ENGLISH - ENGLISH & TAMIL

DICTIONARY

●

தொகுத்தவர்:

தி. நா. சுப்பிரமணியன்

●

500க்கு மேற்பட்ட பக்கங்கள். வெள்ளைக் காகிதம். கலிகோ பைண்டு. அருமையான பதிப்பு.

●

ரூபாய் ஐந்து

தபால் செலவுடன் ரூ. 5-8

வியாபாரிகளுக்கு 15% கமிஷன்

●

சக்தி காரியாலயம்

சென்னை - 14.

கமலாதேவி சட்டோபாத்தியாயா

பெண்மணி

நம் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய வீரர்களிலே இடது சாரிகளான சோஷலிஸ்ட்கள்தான் முதல் ஸ்தானம் வகிப்பார்கள் என்பது சரித்திரத்தில் பிரசித்தமான உண்மை. தியாகத்துக்கும், வீரத்துக்கும், செயலாற்றும் திறனுக்கும் இந்தியசோஷலிஸ்ட்கள் பேர்போனவர்கள். சுயநலங் கருதாத தேசபக்தர்கள். வீரர்கள் மட்டுமல்ல, வீராங்கனைகளும் அக் கட்சியிலே பலர் இருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக இருப்பவர்கள் கமலாதேவி சட்டோபாத்தியாயா, அருணா அஸப் அலி, போன்றவர்கள் ஆவர்.

அவர்களிலே கடந்த பல ஆண்டுகளாக, தேசியப் போராட்டத்தின் முன் வரிசையிலே இருக்கும், ஸ்ரீமதி கமலாதேவியை இவ் விதழில் அறிமுகம் செய்விக்கிறோம். இந்தியர் மட்டும் அல்ல, உலகம் முழுமையும் கொண்டாடும் இந்தியப் பெண்களில் கமலாதேவியும் ஒருவர் என்றால் மிகையாகாது. இப்போது தனக்குள்ள பேரையும், புகழையும் கமலாதேவி பெற்றுள்ளதற்கு மூல காரணம் என்ன தெரியுமா? அவருடைய சொந்த முயற்சி தான். ஆமாம், எவருடைய கைத் தாங்கலுமின்றி தமக்குத்தாமாகவே தடைகளை அவர் எதிர்த்துப் போராடினதால் தான் இன்றைய 'ஸ்தானத்தை'ப் பெற முடிந்தது.

கமலாதேவி ஒரு புரட்சிக்காரர். தேசிய விஷயங்களில் மட்டும் அல்ல. சொந்த வாழ்க்கையிலும் தான்! சுமார் நாற்பத்திநான்காண்டுகளுக்கு முன்னர் மங்களூரிலே ஒரு ஜில்லா கலெக்டரின் பெண்ணாகப் பிறந்த கமலாதேவி,

பின்னால் எத்தனையோ கலெக்டர்களின் நெஞ்சங் கலங்கும்படியான புரட்சிக்காரராக மாறி விடுவார் என்று யார்தான் எதிர்பார்க்க முடியும்? பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிக்க விரும்பாத முரட்டுச் சிறுமியாக இருந்த கமலாவைப் பெற்றோர்கள் சும்மா விடுவார்களா? ஆனால் கற்பனைக் கதைகளைக் கேட்பதிலும், விதவிதமான கனவுகளைக் காண்பதிலும் அவள் ஒரு பொழுதும் சளைத்ததில்லை. அழகே உருவெடுத்த அவ் விளஞ் சிறுமியின் மனம் உரம் பெற்று வளர்ந்தது. திடீரென்று 1910ம் வருஷம் அவளுடைய தந்தை காலமாய் விட்டார். அப்போது கமலாவுக்கு வயது ஏழுதான். அவள் தந்தை 'உயில்' எழுதிவைக்காமல் இறந்ததால் அவருடைய சொத்துக்கள் இளைய தாயாருக்குக் கிடைத்தது. கமலாவின் தாயாருக்கு ஜீவனாம்சம் தருவதாக இளையாள் சொன்னாள். ஆனால் சுய மரியாதையும், தன்னம்பிக்கையும் உள்ள அவர் மறுத்துவிட்டார். பிற்பாடு ஏதோ ஓரளவு சொத்து கமலாவின் தாயாருக்குக் கிடைத்தது. ஆனால் செல்வச் செழிப்பில் வளர்ந்த கமலாவுக்கும் அவள் தாயாருக்கும் இது எப்படிப் போதும்? கமலாவின் மனதிலே அன்று ஏற்பட்ட முதல் புரட்சி 'ஏன் பெண்களுக்கும் சொத்துரிமை இல்லை?' என்ற கேள்வி மூண்டதுதான்.

1911-ம் வருஷம் மங்களூரிலே ஒரு பெண்கள் ஸ்தாபனம ஏற்பட்டது. அந்த ஸ்தாபனத்தின் தலைமை ஸ்தலம் அவள் இல்லம் தான். முக்கிய பொறுப்பேற்றவரும் அவள் தாயார். அன்னைக்குப் பேருதவி செய்தவள் சிறுமி கமலாதேவி. 1919-ம் வருஷம் கமலாதேவியின் வாழ்க்கையில் மற்றோர் புரட்சியை உண்டாக்கிவிட்டது. இது அவருடைய சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட புரட்சியிலே உன்னதமானது. மங்களூரிலே சீனியர் கேம்பிரிட்ஜ் படித்து முடித்த கமலாதேவி மேல் படிப்புக்குச் சென்னை வந்து சேர்ந்தாள். இங்குதான் கவிஞர் ஹரிந்திரநாத சட்டோபாத்தியாயாவை முதன் முதலாகச் சந்தித்தாள். அவர்கள் முதல் சந்திப்பு பற்றி கவிஞர் கூறுவதையே கேளுங்கள்: "நான் அவளை முதன் முதலாகச் சந்தித்த இடம் ஒரு மாதர் சங்கீத சபையில். அவளுடைய முக அழகே அலாதி......அப்போது கமலா க்வீன் மேரி காலேஜில் படித்துக் கொண்டிருந்தாள். கவர்ச்சியும் அபார அழகும், அகன்ற கயல் விழிகளும் கொண்ட அவளை நான் முதன் முதலாகச் சந்தித்தேன். பிறகு என் சகோதரியின் (கவியரசி சரோஜினிதேவி) அழைப்பின் பேரில் அவள் எங்கள் வீடு வந்திருந்தாள். அன்றுதான் நான் என் வாழ்க்கையிலே முக்கிய பொறுப்பேற்று இன்பத்தை அளிக்கப்போகும் அற்புத அழகியைக் கண்டு அளவளாவி இன்புற்றேன்.

ஹரீந்திரருக்கும், கமலாதேவிக்கும் இலக்கியம், கலை, நாடகம் ஆகிய துறைகளில் இருந்த ஒருமைப் பாடும் கருத்துமே, அவர்கள் காதல் வளர்வதற்குக் காரணமாக விருந்தது எனலாம். இரு மேதைகளும் மணம் செய்துகொண்டு இல்லற வாழ்வு நடத்தலானார்கள்.

காதல் கடிமணம் புரிந்த தம்பதிகள் இங்கிலாந்து சென்றனர். அங்கே பெட்போர்டு கல்லூரியில்

கமலாதேவி சேர்ந்து,விட்டபடிப் பைத் தொடர்ந்தாள். இதே சமயம் சமூகசேவையில் கமலாதேவியின் மனம் ஈடுபட்டது. புரட்சிக்காரரான கமலாதேவியின் குடும்ப வாழ்க்கையிலும் ஒரு முக்கிய மாறுதல் ஏற்படும் காலம் நெருங்கியது.

1924-ம் வருஷம் அவர்கள் இந்த நாட்டுக்குத் திரும்பும் போது இங்கே ஒத்துழையாமை இயக்கம் தலையெடுத்திருந்தது.

அப்போதுதான் கமலாதேவி ஒரு ஆண்குழந்தைக்குத் தாயாராயிருந்தாள். ஆகையால் காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட கமலாதேவி இயக்கத்தில் தீவிரமாகக் கலந்து கொள்ள இயலவில்லை. ஆயினும் 1927-ல் அ. இ. கா. மெம்பராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். கஸின்ஸ் அம்மையார் தூண்டுதலின் பேரில் சென்னை அசெம்பிளிக்கு ஒரு அபேட்சகராக நின்றார். ஒரு ஸ்திரீ இப்படிப் பொது வாழ்வில் பங்கெடுத்துக் கொண்டது அதுதான் முதல் தடவை. ஆயினும் எதிர்த்து நின்றவர் ஐம்பதே வோட்டுகள் அதிகம் பெற்று கமலாதேவியைத் தோற்கடித்து விட்டார்.

இதனால் அவர் மனங் கலங்கி விடவில்லை. இதே சமயம் தம்பதிகளிருவரும் நாடகத் துறையில் நிறையப் பங்கெடுத்துக் கொண்டு கலா சேவை செய்ததிலும் குறைவில்லை. உப்பு சத்தியாக்கிரகப் போரிலே ஈடுபட்டுக் கைது செய்யப்பட்டார். பிறகு காங்கிரஸ் தொண்டர்கள் ஸ்தாபனத்தை அமைப்பதில் பங்கெடுத்துழைத்தார்.

1934-ல் கமலாதேவி சிறையிலிருந்து வெளி வந்ததும் அப்போதுதான் ஆரம்பிக்கப் பட்டிருந்த காங்கிரஸ் அபேத வாதக் கட்சியிலே சேர்ந்துகொண்டார். ஹரீந்திரர் மேநாட்டிலிருந்து திரும்பி வந்ததும், அரசியல் விஷயங்களிலேயே அதிகமாக ஈடுபட்டிருந்த கமலாதேவி, மன வேறுபாடு காரணமாய்த் தன் கணவரிட மிருந்து பிரிந்தார்.

1939-ல் தன் மகனுடன் அவர் வெளிநாட்டுக்குப் புறப்பட்டார். இரண்டு வருஷங்கள் வரை வெளிநாடுகளில் பிரயாணம் செய்து விட்டு, தாய்நாடு திரும்பியதும் இங்கே கைது செய்யப்பட்டார்! 1944-லே அகில இந்திய மாதர் மகாநாட்டின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். தவிரவும், அ. இ. காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கத்தினராகவும், அபேத வாதக் கட்சியின் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினராகவும் நியமிக்கப்பட்டார்.

இன்றைய இந்தியாவின் தேச சேவிகைகளிலே கமலாதேவி முதன்மையானவர். சிறந்த அரசியல் ஞானமும், அநுபவமும், செயலாற்றுந் திறமையும் கொண்ட அபேதவாதி. இந்தியப் பெண்மையின் உயர்வுக்கு ஸ்ரீமதி கமலாதேவியைப் போன்றவர்கள் உதாரணம் மட்டும் அல்ல. உலகம் போற்றும் தன்மையும் உயர்வும் கொண்ட கமலாதேவியைப் போன்றவர்கள் இந்தியப் பெண்களின் எதிர்காலத்துக்கு வழிகாட்டிகளும் ஆவர். சுதந்திர இந்தியாவுக்கு ஸ்ரீமதி கமலாதேவியைப் போன்ற தேச சேவிகைகள் இன்னும் எத்தனையோ பேர் தேவை. இந்தியப் பெண்மணிகள் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வார்களாக.

சக்தி வாய்ந்த நூல்கள்

லெனின் பிறந்தார் : ஆர். ராமநாதன் எழுதியது

லெனின் பிறந்தார் என்றால் கூடவே புரட்சி இயக்கமும் பிறந்தது என்றுதான் பொருள். இந் நூலில் லெனின் வரலாறு சொல்லும் வகையில் புரட்சி இயக்கம் வளர்ந்த வகையையும் ஆசிரியர் விளக்கி யிருக்கிறார். படங்களுடன்

விலை ரூ. மூன்றரை — தபால் செலவு தனி

இனி நாம் செய்யவேண்டுவது யாது?

டால்ஸ்டாய் எழுதியது ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு

காந்தியடிகளின் கருத்தைக் கவர்ந்தது இந் நூல். "உழைப்பவனுக்குத்தான் உணவு; உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்" எனும் அரிய சித்தாந்தம்தான் இந் நூலில் அடங்கி யிருக்கிறது. இப்போது தமிழில் மூன்றாம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. அழகிய மொழிபெயர்ப்பு

விலை ரூ. மூன்று — தபால் செலவு தனி

உலோகமும் நாமும் : மு. அருணாசலம் எழுதியது

உலோகங்களைப் பற்றிய விரிவான முறையில் தெளிவாய் விளக்குவது இந் நூல். தமிழ் உலகுக்குப் புதிது.

விலை ரூ. ஐந்து — தபால் செலவு தனி

ஹிந்து பத பாதுஷாஹி

வீர சாவர்க்கர் எழுதியது 'அபிநவம்' மொழி பெயர்ப்பு

இந்து சாம்ராஜ்ய வீழ்ச்சியை விவரிக்கும் சிறந்த நூல்.

விலை ரூ. 3-12-0 — தபால் செலவு தனி

தயாராகின்றன

ஆசிய நாடுகள் — கு. அழகிரிசாமி எழுதியது.

ஆசியாவிலுள்ள முப்பத்து நான்கு நாடுகளைப் பற்றிய சரித்திர, பூகோள, இலக்கிய, அரசியல் விவரங்களைத் தெரிவிப்பது இந் நூல். ஆசிய உறவு மகா நாட்டு நிகழ்ச்சி முறையும், சொற்பொழிவுகளும் அடங்கியது. பல படங்களோடு வெளிவரும்,

முத்திரா ராக்ஷஸம்

வடமொழியில் விசாக தத்தர் எழுதிய சிறந்த அரசியல் நாடகத்தின் அழகான மொழிபெயர்ப்பு.

சக்தி காரியாலயம் சென்னை 14.

மனைவி

[ஒரு வியாக்கியானம்]

●

ஸ்ரீமதி மங்களாத்திரி மணி

[ஸ்ரீமதி மங்களாத்திரி பலதரப் பட்ட மனைவிகளை விவரித் திருக்கிறார். உங்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கொண்டால் நீங்கள் எந்த வகுப்பில் வருகிறீர்கள் என்பது தெரியும். இவர்கள் அனைவரும் மனை வாழ்க்கை கலப்பற்ற இன்ப மளிப்பது என்று ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆனால் சரிபாதி மனைவிகள் இல்லறத்தை இன்பமாகவே நடத்துகிறார்கள் எனத் தெரிகிறது. அவர்களுடைய சூட்சுமத்தை அறிந்து நீங்களும் இன்ப மடையலாம். கன்னிகைகளுக்கு இந்தக் கட்டுரை மிக உபயோகமாக இருக்கும். கட்டின வீட்டைச் சீர்படுத்துவதை விட சொந்த திட்டத்தில் கட்டிக் கொள்வது சுலபம் என்று வீடுகளைக் குறித்துச் சொல்லுவார்கள். வாழ்க்கையும் அப்படிப் பட்டது தானே? ஆசிரியை]

ஜானகி

நான் உப்பரிக்கை மீது நின்று கொண் டிருந்தேன். அப்பொழுது ஒரு தாடிக்கார சந்நியாசியுடன் நீலமேக சியாமள ரூபத்தோடு வந்தார். நான் பார்த்தேன். அவரும் பார்த்தார். இவர்தான் நமக்குகந்த கணவன் என்று நினைத்தேன். என் மனோபீஷ்டமும் நிறைவேறிற்று. அவரே தான் சிவதனுசை முறித்து வெற்றிக் கொடி நாட்டி என்னைப் பரிசாகப் பெற்றார்.

எங்கள் மண வாழ்க்கையில் காதல் நாடகம் அதிகமில்லை. எப்படி யிருக்க முடியும்? அவர் தான் பித்ருவாக்கிய பரிபாலனம் செய்யக் காட்டுக்குப் புறப்பட்டு விட்டாரே. நானும் அவருடன் கிளம்பியது உங்களுக் கெல்லாம் வியப்பா யிருக்கலாம். ஆனால் எனக்கு, அந்த ஒரே வழிதான் தோன்றிற்று.

காட்டிலாவது அவரோடு சுகமாக வாழ முடிந்ததா? ‘பெண் புத்தி பின் புத்தி’ என்பார்கள். மாய மானைப் பிடித்துத் தரச் சொன்னேன். அவர் போயிருக்கும் போது இராவணன் வந்து என்னைத் தூக்கிக் கொண்டு போய் விட்டான். அவருடன் இருக்க வேண்டுமென்று தானே அயோத்தியை விட்டு வந்தேன். ஆனால் அவரைப் பிரிந்து இலங்கையில் அசோக விருட்சத்தின் கீழ் திருசடை தேற்றிவிட மீண்டும் அவரைக் காண்போமா என்று கண்ணீர் விட்டுக் கதறுவதைத்தான் கண்டேன்.

இராவணனை வதைத்துச் சீதையைச் சிறை மீட்டுக் கொண்டு வந்து அயோத்தியில் பட்டாபிஷேகம் செய்து கொண்டார் என்று நீங்கள் எல்லாம் பிரமாதமாகச் சொல்கிறீர்கள். கர்ப்பவதியாயிற்றே என்றாவது பார்த்தாரா? யாரோ வீண்பழி சொன்னார்களாம். உடனே என்னை காட்டிற்கு விரட்டி விட்டார்.

வால்மீகி இருந்தார்; ஏதோ ஒரு வாறு ஆறுதல் கூறி எனக்கு அடைக்கல மளித்தார். ஒரு குழந்தைக்கு இரண்டாகப் பெற்றெடுத்தேன். அப்பொழுதும் நான் கண்டதும் கொண்ட காதல் தீரவில்லை. என் கணவர் என்னை தீக் குளிக்கச் சொன்னர். ஆனல் என் அன்னை என்னைத் தன்னிடம் சேர்த்துக் கொண்டு விட்டார்.

இப்படி இல்லறத்தில் ஒரு சுகத்தையும் காணாத என்னைப் பஞ்ச கன்னிகைகளுள் ஒருத்தியாகச் சேர்த்து என் பெயரை நினைத்த மாத்திரத்தில் இல்லறத்திலுள்ள இடுக்கண்கள் ஒழியும் என்று எந்தப் பிரகஸ்பதி தான் நினைத்தாரோ தெரியாது. ஆனல் இவ்வளவு கஷ்டப்பட்டும் நான் என் கணவரைப் பிராணபதியாக வணங்குகிறேனென்றால் அதற்குக் காரணம் இருக்க வேண்டு மல்லவா? காந்தம் விரும்பினலும் விரும்பா விட்டாலும் ஊசி காந்தத்தினிடம் போகிறது. அது காந்தத்தின் குணம். அந்த அயோத்தியா நாதனுடைய குணம் என்னை ஆகர்ஷிக்கிறது. "இவ்வளவு கஷ்டப் பட்டாயே சீதா, உனக்கு இல்லறம் கசக்க வில்லையா?" என்று கேட்கிறீர்களா? பித்த ஜுரக்காரனுக் கல்லவா கற்கண்டு கசக்கும்; எனக்குத்தான் இலங்கையில் கூட மலேரியா ஜுரம் வர வில்லையே! இல்லறம் எப்பொழுதும் இனிக்கத்தான் இனிக்கும். ஏதோ அவரைப் பிரிந்திருந்த பொழுது அழுதுகொண்டுதான் இருந்தேன். ஆனல் அந்த அழுகையின் போதும் அவர் நினைவு வரும் போது நெஞ்சில் அமுதூறும். அப்பொழுது கண்ணீர் ஆனந்த பாஷ்பமாகத்தான் பொழியும்.

"இந்த சீதைக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது" என்கிறீர்களா? அது சியாம சுந்தரன் மீது கொண்ட மோகம். பைத்திய மென்றாலும் பொருந்தும்.

அகல்யை

வஞ்சனையால் மோசம் போனேன். தவ சிரேஷ்டரின் பத்தினியாகும் பாக்கியம் கிடைத்தும் அதை அனுபவிக்கும் சுகத்தை என் அசிரத்தையால் ஒரு யுகாந்தரத்துக்கு இழந்து விட்டேன். முனிச் சிரேஷ்டர் கருணாமூர்த்தி யாகையால் என் தவறை மன்னித்துத் தம் சாபத்திற்கு விமோசனம் விதித்தார்.

சக்கரவர்த்தி திருக் குமாரன் பாத தூளி பட்டுப் புனிதவதியானேன். மீண்டும் பதி சேவை செய்யும் பாக்கியம் கிட்டிற்று...

["சும்மா புராணக் கதையையே சொல்கிறீர்களே: ஏதாவது தற்காலப் பெண்மணிகளின் வாழ்க்கைக் குறிப்பை எடுத்துக் கொள்ளக் கூடாதா? (அசரீரி)]

ரேவதி

ரேவதி கலாசாலையில் என் தோழி. அவளுக்கும் எனக்கு மிடையே ரகஸ்யங்களே கிடையாது. அவள் ஒரு நவ நாகரீக யுவதி. பல ஆடவர்களோடு சேர்ந்து புழங்குவதில் அதிக ஆர்வ முள்ளவள். ஆனல் தூய உள்ளமும் நேர்மையான நடத்தையும் உள்ளவள்.

"மண வாழ்க்கை ஒரு சமூக ஏற்பாடு" என்று அவள் என்னிடம் அடிக்கடி கூறியதுண்டு. மற்ற அலுவல்களைப் போல ஒரு புருஷனின் சொந்தத் தேவைகளைக் கவனித்துக் கொண்டு அவன் வர்க்கம் அழிந்து விடா வண்ணம் அவனுக்குப் புத்திரப் பேறளிப்பதும் ஒரு பிழைப்புதான்.

இந்த அலுவலைச் சரிவர நடத்தி வந்தால் மற்ற எனைய துறைகளில் இன்பம் கிடைப்பதுபோல இதிலும் சுகம் பெறலாம். இது ஒரு சமூக ஏற்பாடு என்பதுதான் சரி. ஆகையால் இதற்கும் இரண்டு நபர்கள் உண்டு. இருவரும் அவரவரது பொறுப்பை நிறைவேற்றினல்தான் ஏற்பாடு திருப்திகரமாக நடைபெறும்.

ஒவ்வொரு வியாபாரத்திற்கும் சில விதிகள் உண்டு. ஒவ்வொரு விளையாட்டிற்கும்கூட விதிகள் உண்டு. இந்த விதிகள் கட்டாயம் மதிக்கப்படவேண்டும், அதனல் என்ன நேர்ந்தாலும் சரி. இல்லாவிட்டால் மற்ற துறைகளில்போலவே அனர்த்தம்தான். மனேதத்துவ சாஸ்திர ரீதியாகவும், சமூக சட்ட திட்டங்களின்படியும், மதக் கோட்பாடுகளுக்கிணங்கவும் பல திட்டங்கள் மணவாழ்க்கையின் தத்துவத்தை வரையறுத்துக் கூற ஏற்பட்டுள்ளன.

அம்மாவும் அப்பாவும் தாத்தாவும் பாட்டியும் எவ்வளவோ அழகாக இல்லறம் நடத்தி இன்பமாக வாழ்ந்திருக்கிருர்கள். என் இல்வாழ்க்கையும் அவர்களுடையதைப்போலவே இருந்தால் போதும். என் கணவன் வார்த்தைதான் வீட்டில் சட்டமாக இருக்கவேண்டும். அவருடைய மனதை யறிந்து அதன்படி நடப்பதே முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும். அவர் ஏதாவது காரணம் கூறினல் அவற்றை 'நொண்டிச் சாக்குகள்' என்று உதறித் தள்ளாமல் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

[இதுதான் ரேவதியின் மணவாழ்க்கை முறிச்சீட்டு. புராணக் கதையில் வரும் சீதைக்கும் அகலியைக்கும் இப்பொழுது உயிர் வாழ்ந்துவரும் ரேவதிக்கும் மனேதத்துவத்தில் அதிக வேற்றுமை யிருப்பதாகத் தோன்றவில்லை!]

சரோஜினி

சரோஜினி ஒரு 'ரொமான்டிக்' (மன்னிக்கவும்) பெண். பெண்மையை மிக மிக உயர்ந்த இடத்தில் வைத்துவிட்ட நம் நாட்டில் இந்த ஆங்கிலப் பதத்திற்குச் சரியான தமிழ்ச் சொல் கிடைக்காதென நினைக்கிறேன். இதிலிருந்து நான் சரோஜியை இழிவுபடுத்திவிட்டதாக எண்ணிவிடாதீர்கள். அவள் ஒரு அழகிய பட்டுப்பூச்சி. இந்திய மனைவிகளும் அவர்களது சீன சகோதரிகளும் உழவு மாடுகள். உழவு மாட்டிற்கு வாழ எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு பட்டுப்பூச்சிக்கும் உண்டு. இயற்கையில் அனுவசியமென்பதே கிடையாதல்லவா?

சரோஜி சொல்கிருள்: "ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படக்கூடிய மிக மிக 'ரொமான்டிக்' [மன்னிக்கவும்] சம்பந்தம் கல்யாணம்தான். அது எப்படி அழகாகவும் ஆனந்தமாகவும் நம்பிக்கையுடனும் புனிதமாகவும் ஆரம்பிக்கிறதோ அவ்வாறே அதிலிருந்து ஆரம்பிக்கும் தாம்பத்ய வாழ்க்கையும் தொடர்ந்து நடக்க எல்லா முயற்சிகளும் செய்யப்படவேண்டும்.

"இல் வாழ்க்கை இல்லத்தோடு நின்றுவிடுவதுண்டு. மனித வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் இதன் பரிமளம் வீசவேண்டும்.

"காதல் மனையாளும் காதலனும் தீ தின்றிப்பட்டதே இன்பம்." என்று ஔவையார் வர்ணித்தாளல்லவா?

"நானும் அவரும் [அவள் அவரும் என்னும்போதே அவள் கன்னங்கள் சிவக்கின்றன.] முதல் முதலில் சந்தித்தபொழுது எத்தகைய உணர்ச்சி வேகத்தால் பாதிக்கப்பட்டோமோ அதே உணர்ச்சிகள் எங்கள் வாழ்நாள் முழுதும் எங்கள் ஜீவியத்தை இன்புறச் செய்யுமாக!"

மனோரமா

மனோரமா சொல்கிறாள்: "தாம்பத்ய வாழ்வு சந்தோஷமாக இருக்கச் சதிபதிகள் மிகவும் நாணயமாக நடந்து கொள்ள வேண்டும். சந்தேகத்துக்கோ சச்சரவுக்கோ இடமே யிருக்கக் கூடாது. ஒளிவு மறைவு, வஞ்சனை, தந்திரம், பொய், புனை சுருட்டு இவைதான் அபிப்பிராய பேதம் என்கிற விதையை ஊன்றி மனஸ்தாபம் என்கிற பழம் பழுக்க ஏதுவாகின்றன.

"புருஷன் பொருமைப் படட்டுமே" என்றாவது "அவர் பல பெண்களைப் பார்த்து இளிக்கவில்லையா? நாமும்தான் சில ஆண் பிள்ளைகளோடு சரி நிகராகவாவது பழகினால் என்ன மோசம்" என்றாவது எண்ணவே மாட்டேன்.

"வலையில் சிக்கிய மீன் வெளியேறிவிடக் கூடாதென்று சதா ஏதாவது யுக்திகளையே கையாண்டுகொண்டிருக்க மாட்டேன்.

'பன்னிப் பன்னி' வேண்டாத கேள்விகளை எல்லாம் கேட்டு நச்சரித்து "எண்டா வீட்டுக்குள் நுழைகிறோம்" என்று எண்ணும்படி செய்யவேமாட்டேன். அதுவும் முக்கியமாக இருவருக்கும் மன வருத்தத்தை உண்டாக்கக் கூடிய விஷயங்களைக் குறித்து கேட்கவே மாட்டேன். அவருடைய பந்துக்கள் விஷயத்தில் அவர் கொள்கையை விமரிசனம் செய்யும் கைங்கரியத்தைக் கனவிலும் நினைக்கமாட்டேன். அவரும் என் பந்துக்களைக் குறித்துப் பேசச் சந்தர்ப்பம் அளிக்க மாட்டேன்.

"எந்த விஷயத்திலும் ஒளிவு மறைவே வைத்துக்கொள்ளாததால் எங்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்படவே ஏது உண்டாகாது."

ஸ்ரீமா

ஸ்ரீமாவும் ரேவதியைப்போல மணவாழ்க்கை ஒரு சமூக ஏற்பாடு என்ற கொள்கைக்குக் கைதூக்கிய போதிலும் அவள் பெண்களின் முதல் கடமை மணவாழ்க்கைதான் என்கிற தத்துவத்தைத் தீவிரமாகப் பிரசாரம் செய்கிறாள்.

ஸ்ரீமா சமையல், நளபாகம் என்று சொல்வார்களே அப்படி இருக்கும். இப்பொழுது நமது நாட்டின் வருங் காலத்திற்குத் திட்டம் வகுப்பதில் நமது தலைவர்கள் எத்தனை ஆர்வமும் அக்கறையும் காட்டுகிறார்களோ அவ்வளவு ஆர்வத்தோடு அவள் சமையல் திட்டம் போடுவாள். ஒரு வேளைக்கு அளிக்கப்பட்ட உணவே மீண்டும் பரிமாறப்பட்டாலும் அது ஒரு புது தினுசாகப் பரிமளிக்கும்படி ஏதாவது செய்துவிடுவாள்.

வீட்டைக் கவனிப்பதில் அவளுக்கினை அவளேதான். குழந்தைகளைக் கவனிப்பதிலும் அவளை யாரும் மிஞ்சிவிட முடியாது. அவளைக் குறைகூற எந்த மாமியாராலும் முடியாது. அவள் கணவனுக்குக் குடும்பக் கவலையே கிடையாது. ரேஷன் கடைகளுக்கு அலைவதிலிருந்து

குழந்தைகளின் தேக செளக்கியத்தைக் க்வனிப்பது வரை எல்லாவற்றையும் அவளே கவனித்துக் கொள்வாள்.

ஆனால் அவர் மாத்திரம் வேளை தவறி சாப்பிட வந்துவிட்டாலோ 'உர்' என்று கடுவன் பூனைமாதிரி முகத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுவாள்.

அவளுக்குப் புஸ்தகங்களைக் கண்டால் அருவருப்பு ஏதாவது சங்கீதம், நாட்டியம் என்று அவள் கணவன் அழைத்துக் கொண்டு போவதாகச் சொன்னாலும் ஏதாவது சாக்கு சொல்லி தப்பித்துக்கொண்டு விடுவாள். "கடபையே கைலாசம், வாகிலே வைகுண்டம்" என்று தெலுங்கில் ஒரு பழமொழி. அதாவது வாசற்படிதான் கைலாசமும் வைகுண்டமும். படி தாண்டாப் பத்தினி என்பார்களே அந்த ரகம். அவள்மேல் குற்றம் கண்டு பிடிக்க யாருக்குமே இயலாது. அவள் கணவன் அவளோடு திருப்தியாய் இல்லறம் நடத்துவது அதிசயமில்லையே! ஸ்ரீமா சொல்கிறாள்: "இந்த மனித ஜந்து இருக்கிறதே அதற்கு வேண்டியதை வேளைக்குக் கொடுத்து வந்தால் எளிதில் திருப்தியாய்விடும். நாம் ஆட்டும் படி யெல்லாம் ஆடும்." ஒவ்வொரு சமயத்தில் அவள் குரலில் ஓரளவு அவமதிப்பு கூட தொனிப்பதுண்டு.

சரஸ்வதி

சரஸ்வதி, விவாகமே ஒரு துணிச்சலான செய்கை என்கிறாள். அதாவது முன் பின் தெரியாமல் ஒரு காரியத்தில் ஈடுபடுகிறோமே அது போன்றது என்கிறாள். வாஸ்தவம்தானே. எங்கிருந்தோ வருகிறான். அவனுக்கு உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்து விடுகிறோமல்லவா?

ஆனால் இந்த யத்தனத்தில் வெற்றி யடைவதும் தோற்பதும் அதற்குள்ளேயே அடங்கியிருக்கிறது. 'பத்துப் பேருடன் செத்தால் அது கல்யாணம்' என்று ஆந்திர சகோதரிகள் சொல்லுவார்கள். சரஸ்வதியும் தெலுங்கு பேசுகிறவள்தான். தொன்று தொட்டு கோடிக் கணக்கில் பெண்மக்கள் இப்படி முன்பின் தெரியாதவர்களிடம் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். அதே போலத் தானே நாமும் செய்கிறோம். அதன் லாப நஷ்டங்களைக் குறித்து யோசிப்பானேன் என்று கேட்கிறாள் சரஸ்வதி. அவள் "விதி விதி" என்று விதியின்மேல் பாரத்தைப் போட்டு வாளாயிருக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவளல்ல. மனை வாழ்க்கையில் பல சிக்கலான பிரச்னைகள் எழும். அவைகளை அந்தந்த சந்தர்ப்பத்தில் தீர்த்துக் கொள்ளலாம் என்பதேதான் அவள் வாதம்.

அவள் திட்டம்போட்டு காரியங்களை நடத்துவதே யில்லை. ஒருவரின் யோசனைகளையும் கேட்பதில்லை. ஏதோ ஒருவனைக் கட்டிக் கொண்டாய்விட்டது. அவனோடு வாழ்வது எப்படி யிருக்கிறது என்று பார்ப்போமே என்கிறாள்.

கல்யாணி

"புருஷர்கள் குழந்தைகளைப் போன்றவர்கள். அவர்களைச் சரியாக அடக்கி ஆளாவிட்டால் அபாயம் வந்து விடும். பெண்களுக்கு மண வாழ்க்கை இயற்கையாக நேரும் ஒரு சம்பவம். ஆண்களுக்கு அப்படி யில்லை. ஆகையால் புருஷனை ஒரு நல்ல

கணவனுகப் பழக்குவது மிக மிக எளிது.

“மனைவிதான் தன் வாழ்க்கையை சந்தோஷமுள்ளதாகவோ துன்பம் நிறைந்ததாகவோ செய்து கொள்ளுகிறவள். கணவன் அதில் அவளுக்கு ஒத்தாசையாகத்தான் இருப்பான். எனவே இல்லாள் அதிக மனோ பலமுள்ளவளாக இருந்தால், தன் கணவனை உத்தம பதியாகச் செய்து கொள்ளலாம்” என்கிருள் கல்யாணி.

பாகீரதி

பெயர் புராதனமாக இருக்கிறதே என்று மயங்கிவிடாதீர்கள். பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே அவள் தன் பெயரை ஆர். பி. ரதி என்று நவீனமாக சுருக்கிக் கொண்டுவிட்டாள்!

ரதி பிரதி வாரம் தவருமல் ஆங்கில, அமெரிக்க ‘பாஷன்’ பத்திரிகைகளை வரவழைத்து அவைகளை இந்தியத் தேவைகளுக்குகந்தவாறு மாற்றி யமைத்துக் கொள்வதில் மகா சாமர்த்திய சாலி. புருஷர்களை (தன் கணவனையும் சேர்த்துத் தான்) குறித்து அவளுக்குக் கவலையே யில்லை. மற்ற சகோதரிகள் தன்னழகைக் கண்டு பொருமைப்பட வேண்டுமென்பது ஒன்றே அவள் முதல் நோக்கம். நகங்களுக்கும் உதடுகளுக்கும் சாயம் கொடுப்பதிலும் கன்னங்களை ரோஜா இதழ்களுக்கு நிகராக்குவதிலும் மயிரைச் சுருட்டையாகவும் பளபளப்பாகவும் செய்வதிலும், பற்களை முத்துப்போல வெளுக்க வைப்பதிலும் அவள் ஜீவியத்தின் பெரும் பகுதி செலவாய் விடுகிறது; ஏன் அவள் கணவன் வருமானத்திலும் பெரும் பகுதிதான்.

அவனுக்கும் தன் மனைவி அதிக நாகரீகமாகத் தோற்றமளிப்பது திருப்தியாகத்தா னிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவள் அவ்வளவு பணத்தையும் காலத்தையும் தன்னை அழகு படுத்திக் கொள்வதில் செலவழிப்பது சச்சரவில்லாமல் நடக்குமா?

ரதியை அவளுடைய மண வாழ்க்கையைக் குறித்துக் கேட்டால் தன் முத்துப் பற்கள் தெரிய ஒரு மெல்லிய சிரிப்புச் சிரித்துவிட்டு மை தீட்டிய கண்களைச் சிமிட்டுகிருள். அதன் அர்த்தம் ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொன்ருக எனக்கு விளங்குகிறது!

குறிப்பு:—இக் கட்டுரையில் வரும் பெயர்கள் எல்லாம் கற்பனைகள். ஒருவரையும் குறிப்பிடுபவை அல்ல.

சிருஷ்டியில் உன்னத பதவியை வகிக்கும் மனிதன் மனித வர்க்கத்தை அழிக்கப் பல சாதனங்களைக் கண்டுபிடித்திருக்கிறான். ஆனால் அவனை நமன் வசமாக்க மிக மிக நுணுக்கமான ஸ்டேபிலோ காக்ஸ் கிருமிகளை ஆண்டவன் உண்டாக்கி யிருக்கிறான். இந்த விரோதிக் கெதிராக லூயி பாஸ்டர் காலத்திலிருந் தாரம்பித்து ஒரு போரை உடற் கூற்று நிபுணர்கள் நடத்தி வந்திருக்கின்றனர். அவைகளின் பயனாக வெளிவந்த நவீன ‘சஞ்சீவி’

பெனிஸிலின்

•

[குமாரி மீனா சதாசிவம்]

ஸ்டேபிலோகாக்கஸ்* என்றொரு சிறிய கிருமி ஆயிரக் கணக்கில் மனித உயிரைக் குடித்து வந்தது. பிரசவ அறையில் மருத்துவப் பெண்ணின் கைகளிலிருந்து தாயின் சரீரத்திற்குள் புகுந்து சிசுவைத் தாயில்லாக் குழந்தை யாக்கும். குழந்தை தவழ்ந்துகொண்டே போய் வாசற்படியில் தடுக்கி விழும். அங்கு தூசியில் ஒளிந்திருக்கும் ஸ்டேபிலோகாக்ஸ் குழந்தையின் காயத்தினூடே உட் சென்று சில தினங்களில் எல்லா வைத்தியர்களுடைய முயற்சிகளையும் வீணாக்கிப் பச்சைப் பாலனைக் குழியில் கிடத்தி விடும். பலத்த முன்னெச்சரிக்கைகளுடன் வைத்தியர் சத்திர சிகிச்சை செய்கிறார். அகஸ்மாத்தாக ஒரு ஊசி முனைபட்டு அவர் தரித்திருக்கும் இரப்பர் கையுறைகள் கிழிந்து அதன் மூலம் சில ஸ்டேபிலோகாக்கி காயத்துள் பிரவேகித்து “சத்திர சிகிச்சை வெற்றிகரமாகத் தான் நடந்தது. ஆனால் வியாதியஸ்தர் உயிர் துறந்தார்” என்று சிலர் எளனப் பேச்சுப் பேச இடமுண்டாக்கி விடும்.

இந்தக் கிருமியால் மனித வர்க்கம் அடைந்துள்ள நஷ்டத்தைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. முகத்தில் ஒரு சிறு பருக்கட்டி வெடிக்கிறது. நல்ல தேக சுகத்தில் இருக்கும் இளைஞன். மிரட்டும் காளையை ஓடிப் பிடித்தடக்கும் வயதினன். சிறிது அஜாக்கிரதையாக முகத்தைத் துடைக்கும் போது பரு உடைந்து சில கிருமிகள் உள்ளடைகின்றன. இரண்டு தினங்களில் முகம் பெரிதாக வீங்குகிறது. பெரிய வைத்திய நிபுணர்கள் வர வழைக்கப்படுகிறார்கள். பரிசோதித்து விட்டு “நம்மால் செய்யக் கூடியதொன்று மில்லை. பூரண ஓய்வெடுத்துக் கொள்ளட்டும். இயற்கை தன் போராட்டத்தில் வெற்றியடைந்தால் உயிர் பிழைக்கலாம்” என்று சொல்கிறார்கள். நூறில் தொண்ணூற்றெட்டு பேர் இந்தச் சிறு கிருமியை எதிர்த்துப் போராட முடியாமல் நமனுலகடையவும் நேர்ந்து விடுகிறது.

* Staphylococcus.

சிவப்புச் சாயத்திலிருந்து ஜெர்மானியர் முதன் முதலில் தயாரித்த பிரோன்டோஸில் இரத்தப் பிரவாகத்தில் சேர்ந்த கிருமிகளை ஒன்று, பத்து, நூறு பதினுபிரமாகப் பெருகி விடாமல் தடுப்பதோடு அவற்றை அழிக்கவும் உதவியது. மேயும் பேக்கரும் என்னும் ஆங்கில மருந்துக் கம்பெனியார் 693 என்னும் நெம்பர் கொடுத்து ஒரு ஸப்பானமைட் மருந்து தயாரித்தார்கள். அது ஜன்னி பாதஜுரத்தின் போது நியூமோ ஹாக்கி என்னும் கிருமிகளை அழித்து பிராண பிச்சை அளித்தது. பிறகு ஸிபேஸால் மாத்திரைகள் வந்தன. [அப்பெண்டிஸைடிஸ்] குடல் அனுபந்த சத்திர சிகிச்சையின் போது ஏற்கனவே கட்டி உடைந்து சீழ் வயிற்றிற்குள் ஒழுகி யிருந்தால் வியாதிஸ்தரை மீட்க வேறு வழியில்லாம லிருந்தது. பெரிடொனைடிஸ் ஏற்பட்டதின் காரணமாக வியாதிஸ்தர் விண்ணுலகெய்தினர். ஆனால் ஸல்போனமைட் எனப்படும் தூளைக் காயத்தில் தெளிப்பதால் வியாதிஸ்தரை யமனிட மிருந்து இப்பொழுது மீட்டுவிடுகிறார்கள்.

1929ம் ஆண்டில் லண்டன் ஸெயின்ட் மேரி ஆஸ்பத்திரியில் ஒரு வைத்தியர் கிருமிகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார். ஏதோ அவசர காரியமாக வெளியே செல்லும்போது அவர் பரிசோதித்துக் கொண்டிருந்த கண்ணாடித் தட்டை வெளியே வைத்துவிட்டுப் போனார். அந்தத் தட்டிலிருந்த கிருமிகள்தான் மிக மிக அபாயகரமான ஸ்டெபிலோ காக்கஸ். திரும்பிவந்த டாக்டர் கண்ணாடித் தட்டைப் பார்த்த பொழுது பிரமித்துப் போனார். அவர் விட்டுப் போயிருந்த தட்டில் ஒரு சிறு பூஞ்சாக்காளான் முளைத்திருந்தது. அதை அவர் வெகுவாகக் கவனித்திருக்கமாட்டார். ஆனால் அதைச் சுற்றி கிருமிகள் மாண்டு போயிருந்தன. உடனே அவர் அந்தப் பூஞ்சாங்காளானைப் பரிசோதிக்க ஆரம்பித்தார். ஸர். அலெக்ஸாண்டர் பிளமிங் எனப் பெயர் படைத்த அந்த வைத்தியர்தான் தமது பொறுமையான உழைப்பினால் பெனிஸிலினைக் கண்டுபிடித்து ஸ்டெபிலோ காக்கஸ் அரக்கனைக்கண்டு அஞ்சிநடுங்கும் மனித வர்க்கத்திற்கு அபயஸ்தம் அளித்தவர். அன்னை கஸ்தூரிபாய் அவர்கள் ஆகாகான் அரண்மனையில் நோய் வாய்ப்பட்டு நமனுடன் போராடிக் கொண்டிருக்கையில் இதே மருந்துதான் ஆகாய விமானத்தின் மூலம் விரைந்தனுப்பப்பட்டது. மருந்து மாத்திரம் சமயத்தில் கிடைத்திருந்தால் இன்று நாம் அடைந்திருக்கும் சுதந்தரத்திற்காக அவர் செய்துள்ள தியாகங்களின் பலனைக் கண்டு களித்திருப்பார். ஆனால் அவர் விண்ணுலகிலிருந்து ஸ்ரீ மகாதேவதேசாய், லோகமான்ய திலகர், கவிபாரதி, அன்னை அனிபெஸண்ட் முதலியோரோடு சுதந்திர விழாவின்போது ஆசிகூற முடிந்திராதல்லவா?

✻

திகைப்பின் காரணம்

ரஸிகர்:—நண்பரே, உங்கள் கற்பனைச் சித்திரங்களைக் கண்டு நான் திகைத்துப் போகிறேன்.

நண்பர்:—எப்படி எழுதினேன் என்று?

ரஸிகர்:—இல்லை. ஏன் எழுதினீர் என்று!

நாகலக்ஷ்மி

குன்னத்தூர் பெரிய பண்ணையின் வீட்டு ஆண்டு நிறைவுக்குப் போய்விட்டுத் திரும்பி வரும் வழி முழுதும் அத்தையின் வாய் ஏதேதோ பொரிந்து கொண்டிருந்தது.

"ஏதோ சிறிசு. அப்படி அழகு பண்ணிண்டிருக்கு. அதுக்காக நீ ஏன் இப்படி அங்கலாய்த்துக் கொள்றே?" என்று கேட்டு விட்டேன்.

"என்னடி சிறிசு? பிரபாவுக்கு இருபத்தைந்து வயசு ஆகிறதாக்கும்" என்ருள் அத்தை.

அதனுல் என்ன? அந்த வயசிலேதான் வெள்ளைக்காரர்கள் நாம் கல்யாணம் பண்ணிக்கலாமென்னு யோசிப்பா."

"அதுதான் தெரியறதே. நீங்கள்ளாம் உங்களையும் வெள்ளைக்காராள்னு நினைச்சுண்டு அவா மாதிரி நடக்க ஆரம்பிச்சுட்டேளே!"

"காலத்துக்குத் தகுந்தபடி தானே நாமும் நடந்துக்கணும்."

"ஆமாம். நல்ல காலமடி நீ பேசறது? வெள்ளைக்காராளே ராஜ்யத்தை விட்டுட்டுப் போயிட்டா. அவா மாதிரி நீங்களும் நொந்துப் பிடியுங்கோ யாரையாவது."

"அவாளிட மிருக்கும் நல்லது படியப்படாதா? கெட்டதுதானு நமக்குப் படியணும்?"

"அவாளிட மிருந்து கெட்ட குணம் என்ன படிஞ்சுடுத்தாம்?"

"ஏன் இல்லே? அவா கெட்ட குணம் பூராவும் நமக்கு வந்துடுத்து. நல்லதுலே ஒன்றுகூட இல்லே. அவாளுக்குள்ளே உள்ள தேச பக்தி, ஒற்றுமை விடா முயற்சி, பரோபகாரம் இதிலே ஒண்ணுலே ஒண்ணு நம்கிட்டே இல்லே. நாமெல்லாம் நெல்லிக்கா மூட்டையா இருக்கோம். அதுக்குப் பதிலா, இந்தக் கோரத்தை யெல்லாம் கத்துண்டோம்."

"ஏன் அத்தை, உனக்கு இதையெல்லாம் பார்த்தா இப்படி எரிச்சலா வறது?"

"வராமே என்ற பண்றது? நீயேதான் பாத்தயோ இல்லையோ பிரபாவின் முகத்தையும் உதட்டையும்? என்னென்னவோ பூசிண்டு இருந்தாளே!"

அத்தைக்கு எது எரிச்சலை யுண்டாக்கியது என்பதைத் தெரிந்து

கொண்டு விட்டேன். பிரபாவதி தன் முகத்துக்குப் பவுடர் பூசிக் கொண்டது மட்டுந்தான் அறிவாள். அதற்காக முதலில் 'கிரீம்' தடவி அதன்மீது பவுடரைப் பூசிக்கொண்டாள் என்பது அத்தைக்குத் தெரியாது. ஆனால் பிரபா தன் உதட்டுக்கு 'லிப் ஸ்டிக்' பூசிக்கொண்டது தான் அத்தைக்கு எடுப்பாகத் தெரிந்தது. பிரபாவும் அதை ஓர் இழை கனமாகவே பூசி யிருந்தாள். அதனால் அவள் உதடு தனியாக கருஞ் சிவப்பாக பார்ப்பதற்குக் கொஞ்சம் விகாரமாகத் தான் இருந்தது.

"உதட்டுப் பூச்சு கொஞ்சம் கனமாத்தான் இருந்தது" என்று நான் அத்தையைச் சமாதானம் செய்ய முயன்றேன்.

"கொஞ்சம் கனமா? பேஷ். அது இல்லாட்டாத்தான் என்ன முழுகிப் போயிடுத்தாம்?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள் அத்தை.

"ஏன் அத்தை, பழைய நாளிலே கூட எல்லாரும் இப்படி உதட்டுக்கு வர்ணம் பூசிண்டுதானே இருந்தாளாம்.

"யாரு சொன்னா?"

"பழைய நாள் புஸ்தகங்களில் சொல்லியிருக்கே. பொம்மனாட்டிகள் செவ்வரக்குப் பூசி அழகு செஞ்சுண்டான்னு."

"அது என்னமோ, அம்மா, எனக்குத் தெரியாது."

தமிழ், வடமொழி ஆகிய இரண்டிலும் உள்ள பழைய இலக்கியங்களில் இந்தப் பழக்கம் குறிக்கப்பட்டிருக்கிறது, அந்தக் காலத்திலே பெண் மக்கள் தங்கள் உதடு நல்ல சிவப்பாகத் தோற்றம் அளிப்பதற்காக அதற்குச் செவ்வரக்குப் பூசி வந்திருக்கிறார்கள். ஆகவே உதட்டுக்குச் சாயம் பூசிக்கொள்ளும் வழக்கம் நம் நாட்டுக்குப் புதியதல்ல வென்று அத்தைக்குச் சொல்லி விட்டு.

"இல்லாட்டா, உதட்டுசோகை மாதிரி வெளுப்பாத் தெரியும் என்பதையும் தெரிவித்தேன்.

"உடம்பிலே நல்ல ரத்தமிருந்தா உதடு ஏன் வெளுத்துப் போகுது?"

"நெசந்தான். அவளுக்கு உடம்பிலே 'கால்ஷியம்'னு சுண்ணும்புச் சத்து இல்லையாம். அதுக்காக 'இஞ்சக்ஷன்' பண்ணிக்கிறா."

"நல்ல கூத்துடி இது? பிள்ளைப் பெத்த பொம்மனாட்டி நன்னா சாப்பிட்டு வெத்திலே போட்டுண்டு வீட்டு வேலை செய்தா, எப்படி உடம்பு வீணாப் போகுமாம்?"

"அத்தை: நீ சொல்றது வேடிக்கையாயிருக்கு. வெத்திலே போட்டுக்கொள்வதும், உதட்டுப் பூச்சுக்கும், 'கால்ஷியம்' இஞ்சக்ஷனுக்கும் என்ன சம்பந்தம்?"

"ஏன் இல்லே? நீயேதான் சொல்லு. வெத்திலே போட்டுண்டா, அப்புறம் இந்த வர்ணம் பூசிக்க வேண்டாமே! அதுமட்டுமா? உதட்டுக்கு வர்ணம் பூசிக்கிறதிலே என்ன என்ன கெடுதல் உண்டாகிறது தெரியுமா?"

"என்ன கெடுதல்?"

"முதல்லே அந்த வர்ணம் உலர ஆரம்பிச்சதும், உதட்டை 'வறவற'ன்று இழுக்கும். அடிக்கொரு தரம், உதட்டை நாக்கால் தடவி ஈர நைப்புக் கொடுக்கணும். அதுமட்டுமா? அப்புறம், அந்த மாதிரி நாக்கால் தடவற போது, அந்த வர்ணம் கொஞ்சம்

கொஞ்சமாகக் கரைந்து வயிற்றுக்குள்ளே போயிடும். இது உடம்புக்கு நல்லதா? இன்னும், நீண்ட நாளா இப்படியே பண்ணிண்டு வரபோது, அந்த வர்ணம் நாக்கிலே ஒடு போட்ட மாதிரி ஒரு கறை உண்டாயிடும்.''

''வெள்ளைக்காராள்ளாம் உபயோகப் படுத்தலியா?''

''அவா ஊரு குளிர்ந்த தேசம். நம்ம ஊரு அப்படியில்லே. வெயில் கொளுத்தும் உஷ்ணப் பிரதேசம். அவா ஊருக்கு நல்லதெல்லாம் நமக்கு நல்லதிண்ணு ஆகாது...எண்டி. எதுக்கு இவ்வளவு உபத்திரம்? வெத்திலே போட்டு உதட்டுக்குக் காவி ஏத்தின இந்தத் தொல்லையே இல்லையே.''

''இது தெரியாமேதான் நம்மள்ளே பழைய காலத்திலே செவ்வரக்குப் பூசிண்டாளோ?''

''அதைப்பத்தி நாம் என்னமா நிச்சயமாச் சொல்ல முடியும்? அந்தக் காலத்திலே யார் யார் எந்தெந்தச் சமயங்களிலிருந்து செவ்வரக்குப் பூசிண்டான்னு தெரியாது. இன்னும், வெத்திலையைப்பத்திப் பழைய வடமொழி இலக்கியத்திலே அதிகமா இருக்கிறதாகவும் தெரியல்லை. வெத்திலையைக் கூட நம் நாட்டுச் சரக்கில்லே, வெளி நாட்டிலேருந்து வந்ததுன்னுதான் சொல்ரு. ஆனால் அதனாலே என்ன? வெத்திலை போட்டுக்கறதினாலே எத்தனையோ சௌகரியங்கள் உண்டு.''

''அத்தை. பிரபாவை நீ அந்த மாதிரி சொல்லாதே. நம்ம ஊரிலே பொறந்து வளர்ந்த பொண் வெத்திலை போட்டுக்க மாட்டாள்னு நீ சொல்லாமா?''

''என்னிக்கோ வருஷத்துலே ஒரு நாள் போட்டுண்டா சரியாய், போயிடுமா? தவிரப் பிள்ளை பெற்ற பொம்மனாட்டிகளுக்கு, தாயார் குழந்தை ரெண்டு பேருக்கும், வெத்திலை ரொம்ப நல்லது. அதை வழி தெரிஞ்சு முறையா உபயோகப் படுத்தணும்.''

(அத்தை வெற்றிலையைப் பற்றி சொன்ன விஷயங்களை அடுத்த கட்டுரையில் கூறுகிறேன்.)

*

அங்கும் உண்டு!

ஹாலிவுட்டிலிருந்து வெளியாகும் சினிமாப் படங்கள் பலவற்றில் அரை, முக்கால் நிர்வாணக் கோலத்தில் நடிகைகள் தோன்றுகிறார்களே என்று நம்மூர்ப் பெண்மணிகள் அங்கலாய்க்கிறார்கள் அல்லவா? இவர்கள் அங்கலாய்ப்பை உத்தேசித்துத் தானோ என்னவோ சமீபத்தில் ஒரு பிரபல நட்சத்திரம்—மௌரீன் ஓஹாரா என்பவள்—இனி முழு ஆடை தரித்துத்தான் நடிக்கமுடியும் என்று கூறிவிட்டாள். எவ்வளவோ சொல்லியும் கூட, அரை நிர்வாணம் பெண்களுக்கு அவமானமாயிருக்கிறது என்று மறுத்துவிட்டாளாம். அப்புறம் முதலாளிகள் கெஞ்சிக் கூத்தாடியதில் ஸ்நான உடை தரிக்கும் காட்சியில்மட்டும் ஒரு ஸ்வெட்டருடன் காட்சியளிக்க ஒப்புக்கொண்டாளாம். மற்றபடி படம் பூராவும் முழு ஆடை அலங்காரம்தானும். அங்கேயும் இப்படி ஒருத்தி இருப்பது ஒரு அதிசயம்தான்.

அரிய புத்தகங்கள்

நாவல்கள்

வானவில்	வாண்டா வாசிலெவ்ஸ்கா	ரூ. 5-0
காதல்	,,	3-12
சுந்தரி	வ. ரா.	5- 0
பவானி	'லக்ஷ்மி'	2- 8
வனிதாலயம்	சகுந்தலா ராஜன்	2- 0

சிறு கதைகள்

மஞ்சி விரட்டு	கொத்தமங்கலம் சுப்பு	3- 8
சஞ்சீவி	குகப்ரியை	3- 4
ஜெயகாதல் கீதம்	துர்கனேவ்	0- 8

கட்டுரைகள்

வாழ்க்கைச் சித்திரம்	வ. ரா.	2- 8

(தபால் செலவு தனி)

பவானி பிரசுரம்

ராயவரம் : (புதுக்கோட்டை) ஸ்டேட்

" தமயந்தி "

நள பாகம், பீம பாகம் என்றெல்லாம் புராணங்களில் சாப்பாட்டின் ருசியை விவரித்திருக்கிறார்கள். அந்த மாதிரி ருசியான பதார்த்தங்களைச் செய்து சாப்பிட நம்மால் இந்த உணவுப் பங்கீடு காலத்தில முடியாது. ஆனால் கிடைக்கும உணவை நாக்கிற்கும் மற்ற ஜீரணக் கருவிகளுக்கும் அருவருப் புண்டாக்காமல் செய்து சாப்பிடலாம். அதோடு தற்காலத்தில் கிடைக்கும் ஆகாரம் அனேகமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாலோ, சேமித்து வைக்கப் பட்டிருந்ததாலோ புஷ்டிக் குறைவாக இருக்கிறது. அவற்றில் நமது வளர்ச்சிக்கும், போஷாக்கிற்கும் இன்றியமையாத ஜீவ சத்துக்கள் குறைவாகவோ இல்லாமலோ இருக்கின்றன. இந்தப் பகுதியில் ஆகாரத்தைச் சுவையுடையதாகவும் சரீரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் செய்யக் கூடிய சில முறைகளை எழுதுகிறேன்.

விடமின் பச்சடி; வேண்டுவன : பசலைக்கீரை, நான்கு கோப்பைகள், பச்சைக் கொத்தமல்லி, புளியாரை இலை ஒரு கோப்பை, சீரகம் ஒரு ஸ்பூன், உப்பு தேவையான அளவு, தயிர் ஒரு கோப்பை, நெய் ஒரு ஸ்பூன்.

செய்யும் முறை : கீரையையும் இலைகளையும் நன்றாக சுத்த ஜலத்தில் அலம்பவும். பிறகு கீரையைப் பொடிப் பொடியாக நறுக்கவும். புளியாரையை இலை இலையாக ஆய்ந்து எடுக்கவும். தயிரில் உப்பையும் கீரையையும் இலையையும் போட்டு நெய்யில் சீரகத்தைத் தாளித்து எல்லாவற்றையும் நன்றாகக் கலக்கி கொத்தமல்லியைக் கிள்ளி மேலாகத் தூவிப் பரிமாறவும்.

பயறுகோசுமல்லி; வேண்டுவன: கல்லில்லாமல் பொறுக்கிய முழுப் பயிறு அரைக் கோப்பை, உப்புதேவையான அளவு, மிளகு பொடி ஒரு ஸ்பூன், பச்சைக் கொத்தமல்லி, தேங்காய்த் துருவினது அரைக் கோப்பை.

செய்யும் முறை : பயறை 24 மணி நேரம் கோப்பை நிறைய ஜலம் விட்டு ஊற வைக்கவும். வெண்மையான முளை வெளியே தெரியும் பொழுது, தண்ணீரில் கழுவி, அதிகப்படியான நீரை இறுத்து, ஒரு வாயகன்ற பாத்திரத்தில் போடவும். உப்புப்பொடி, மிளகு பொடி, தேங்காய்த் துருவல் மூன்றையும் சேர்த்து நன்றாகக் கலக்கவும். கொத்தமல்லியைப் பொடிப் பொடியாகக் கிள்ளிச் சேர்த்துப் பரிமாறவும்.

தற்காலத்தில் உருளைக்கிழங்கு வற்றல் கிரம்பக் கிடைக்கிறது.

அதைக் கொண்டு போளி செய்யலாம்.

வேண்டுவன : உருளைக்கிழங்கு வற்றல் 1 ஆழாக்கு, கடலைப் பருப்பு $\frac{1}{2}$ ஆழாக்கு, மைதா மாவு $\frac{1}{2}$ ஆழாக்கு, உப்பு, பெருங்காயம், மிளகாய்வற்றல் எல்லாம் தேவையைப் போல் சேர்க்கவும்

செய்யும் முறை: கடலைப் பருப்பை வேகவைக்கவும். வெந்த

பருப்புடன், உருளைக் கிழங்கு வற்றல், உப்பு, மிளகாய் வற்றல், பெருங்காயம், எல்லாவற்றையும் சேர்த்துக் கல்லுரலில் அரைக்கவும். பச்சைக் கொத்தமல்லி, கருவேப்பிலை இவைகளைப் பொடியாக நறுக்கி மாவுடன் கலந்து வைத்துக் கொள்ளவும். மைதாவோ, கோதுமை மாவோ, கொஞ்சம் ஜலம் விட்டு பிசைந்து சிறிய அப்பளங்களாகச் செய்து அரைத்து வைத்திருக்கும் பூரணத்தை சிறிய உருண்டைகளாகச் செய்து அப்பனத்தில் வைத்து மூடி இலையில் எண்ணெய் தடவி போளி தட்டி தவ்வாவில் நெய்விட்டு சுட்டு எடுக்கவும்.

குழந்தைகளுக்குப் புஷ்டியைக் கொடுக்கக்கூடிய கேக். ஒரு முறை செய்து வைத்துக் கொண்டால், இரண்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தினம் காலையில் ஒருகேக்கொடுக்கலாம்.

சோள மாவு ½ ஆழாக்கு, சர்க்கரை ½ ஆழாக்கு, சோடா உப்பு (பருப்பு வேகவைக்க உபயோகிக்கிறோமே அந்த உப்பு) ஒரு டீஸ்பூன், வெண்மணய், 2 அவுன்ஸ், பால் ½ ஆழாக்கு, பாதம் எஸென்ஸ் 10 துளிகள்.

சர்க்கரை, வெண்ணெய் இரண்டையும் நன்முய்த் தட்டிக் கலக்கவும். மாவை நன்ருகச் சலித்து சோடா உப்பு சேர்த்து தண்ணீர் விடாமல் கையால் பிசையவும். கொஞ்சம் கொஞ்சமாக பால் சேர்த்து கலந்து வைத்துள்ள சர்க்கரையையும் வெண்ணெய்யையும் சேர்த்து பிசையவும். ஹார்லிக்ஸ் மூடிகளில் நெய்தடவி பிசைந்த மாவை அப்பி, கேக் சுட்டெடுப்பதைப் போல் சுடவும். 10 கேக்குகள் செய்யலாம். ஒரு பாத்திரத்தில் மணல் வைத்து ஹார்லிக்ஸ் மூடிகளை மண்ணின் மேல் பரப்பி, பாத்திரத்தை தணல் வைத்துத் தட்டால் மூடவும். மண் வைத்துள்ள பாத்திரத்தை நன்ருக எரியும் அடுப்பின் மேல் வைக்கவும்.

சமத்துச் சங்கரன்

நாணு

பள்ளிக்கூடம் விட்டவுடன் பையன்கள் கும்மாளம் அடித்துக்கொண்டு வீடுகளுக்குப் புறப்பட்டனர். ஒரே ஒரு பையன் மட்டும் யாருடனும் பேசாமல் ஒதுங்கி தனியாகப் போனான். சில பையன்கள் கேலியாக 'அதோ பாரு, ஓராங் காணிச் சங்கரன்' என்று கேலியாகச் சொன்னார்கள். ஆனால் சங்கரன் காது கேளாதவன் போல் வேகமாகப் போய்க் கொண்டிருந்தான்.

சங்கரன் மிகவும் ஏழைப் பையன். அவனுக்குத் தாய்தந்தை இல்லை. அவனுடைய பாட்டிதான் அவனை வளர்த்து வருகிறாள். அந்தப் பாட்டியோ ஒரு பணக்காரர் வீட்டில் வேலைக்காரியாக இருந்து பிழைப்புக்கு வழி தேடிக் கொண்டவள். சங்கரனிடம் அவளுக்கு ரொம்பவும் ஆசை.

ஆனால் சங்கரன் இரண்டு மூன்று நாட்களாகவே பாட்டியிடம் கோபித்துக் கொண்டிருந்தான். பாட்டியைத் தனக்கு ஒரு சாய வேட்டி வாங்கித் தரும்படி எத்தனையோ முறை கேட்டான். அவளோ கையில் காசில்லாததால் 'பொங்கல் வரட்டும், புதுசா வாங்கித் தரேன்' என்று சொன்னாள். சங்கரன் சின்னப் பையன் தானே. பாட்டி படும் கஷ்டம் அவனுக்குத் தெரியுமா? சாய வேட்டி வாங்கித்தர அவள் இஷ்டப் படவில்லை என்றெண்ணிக் கோபித்துக் கொண்டான். சரியாகச் சாப்பிடுவதும் இல்லை. பாட்டி சொல்வதைக் கேட்பதும் இல்லை. இப்படியே இரண்டு மூன்று தினங்கள் கழிந்தன. இவனுடைய சக மாணவர்களெல்லாம் கூட இவன் வருத்தமா யிருப்பதையும் கலகலப்பா யில்லாமல் ஒதுங்கி இருப்பதையும் கண்டு ஆச்சரிய மடைந்தார்கள்.

இன்று உபாத்தியாயர் 'அடுத்த வாரத்தில் திங்களும் செவ்வாயும் பொங்கலுக்கு விடுமுறை' என்று பையன்களுக்குச் சொன்னார். சங்கரனுடைய வருத்தம் அதிகமாய் விட்டது. இன்னும் ஆறு நாட்கள்தானே இருக்கிறது பொங்கலுக்கு? என்று எண்ணினான். பாட்டி மேல்

ஏற்கனவே இருந்த கோபம் இன்னும் பெருகிற்று.

வீட்டிற்குப் போனதும் பாட்டியுடன் சண்டைபிடிக்க வேண்டும் என்று தீர்மானித்தவனாய், அவசரம்அவசரமாக நடந்து வீடு சேர்ந்தான். அவன் வீட்டுக் கதவு சாத்தப்பட்டிருந்ததைக் கண்டு தட தட வென்று இடித்தான். ஆனால் கதவு தானே திறந்து கொண்டது. கூடத்தில் பாட்டி படுத்திருந்தாள். சிலேட்டுப் பலகையைத் தடார் என்று எறிந்துவிட்டு பாட்டியிடம் நெருங்கினான். ஆனால் அவளோ முக்கி முனகி அழுதுகொண்டிருந்தாள். மெதுவாக 'வாடா தம்பி, என்று அழைத்தாளானாலும் அவள் விம்மி அழுவது நிற்கவில்லை. சங்கரன் கோபம் குறைந்து பதட்டத்துடன் 'ஏன்பாட்டி அழணும் நீ? எனக்குச் சாய வேட்டி வாங்க முடியல்லேன்னு தானே? சாய வேட்டியும் வாணும், கியவேட்டியும் வாணும்!' என்று சொன்னான். கிழவி அவனை அருகில் இழுத்து அணைத்தபடி 'அதுக்கில்லேடா தம்பி, எசமானி அம்மா என்னை வேலைக்கு வேணும்னு சொல்லிப் போகச் சொல்லிட்டாங்க. கோபத்தோடு சம்பளமும் கிடையாதுன்னுட்டாங்க. அவுங்க வீட்டுக் குழந்தையோட கொலுசைக் காணுமாம். நான்தான் திருடினேன்னு பழி சாட்டினாங்க என்று அழுது கொண்டே சொன்னாள். சங்கரன் கோபம் வேறு விதமாகத் திரும்பியது. தன் பாட்டி மீது அவர்கள் வீணாகப் பழி சுமத்தியது கண்டு அவன் மனம் கொதித்தது. என்னதான் இருக்கட்டுமே? ஏழை என்றால் இவ்வளவுகேவலப்படுத்தலாமா? ஏழை என்பதற்காக திருட்டுப் பட்டம் கட்டினால் கடவுள் பொறுப்பாரா? என்றெல்லாம் அவன் எண்ணினான். 'எளியாரை வலியார் வாட்டினால், அவரை தெய்வம் வாட்டும்' என்று அவன் படித்திருக்கிறான் அல்லவா? ஆனாலும் அவனுக்குப் பொறுக்க முடியவில்லை.

பாட்டி வேலை செய்யும் வீடு அவனுக்குத் தெரியும். எஜமான் வீட்டுப் பையன்களும் இவன் படித்த பள்ளிக்கூடத்திலேயே படிப்பவர்கள். எனவே நேராக எஜமான் வீட்டுக்குப் போய் என் பாட்டி மீது அனியாயமாகப் பழி சுமத்தலாமா வென்று ஏன் கேட்கக்கூடாது என்று எண்ணினான். எண்ணியபடியே பாட்டியிடம் கூடச்



சொல்லாமல் எஜமான் வீட்டுக்கு ஓடினான். அங்கே ஒரே

அமர்க்களமா யிருந்தது. இவனுடைய பாட்டியைப் போல் அங்கு மற்ருெரு வேலைக்காரி யுண்டு. அவள் இவனைக் கண்டதும் "பாத்தீங்களா எசமான், இந்தப் பையன்தான் அந்தக் கௌவியின் பேரனுங்க. அப்பனும் இல்லே, ஆயியும் இல்லே. பத்து வயசு கூட ரொம்பாத பச்சைப் புள்ளைங்க. எசமானி அம்மா அவமேலே குத்தம் காட்டிப் போகச் சொல்லிட்டாங்களே. நீங்க யோசிச்சிப் பாருங்க எசமான். கொலுசு கட்டிலுக்கும் கீளே கிடந்துதுங்க. தேடிக் கண்டுபிடிக்கிறதுக்குள்ள எம் மேலேயும் அவ மேலேயும் குத்தம் சாட்டி அம்மா போகச் சொல்லிட்டாங்க. ஏழையாப் பொறந்துட்டோம் அதுக்காகத் திருட்டுப் பட்டம் கட்டலாமுங்களா?" என்று அந்த வேலைக்காரி எஜமானைக் கேட்டாள். அவர் இரக்கமான மனம் உடையவர். சங்கரனைப் பார்த்து "பயலே, வீட்டுக்குப் போய் உன் பாட்டியை வரச் சொல்லு வேலை செய்ய. கொலுசு அகப்பட்டுவிட்டதுன்னு போய்ச் சொல்லு. போ, வரச்சொல்லு!" என்று திரும்பவும் சொன்னர். சங்கரனுக்கு இன்னும் மனம் நிம்மதி யடையவில்லை. திடீரென்று திருட்டுக் குற்றம் சாட்டும்எஜமானியம்மாளிடம் திரும்பவும் தன் பாட்டி வந்து வேலை செய்வதா வென்று யோசித்தான். எஜமான் அவனைப் பார்த்து "ஏண்டா நான் சொன்னது காதில் விழவில்லையா?" என்று கேட்டார். சங்கரன் நிதானமாக "காதில் விழுந்ததுங்க. ஆனு அம்மாதான் திருட்டுப்பட்டம் கட்டி பாட்டியை போகச் சொல்லி விட்டாங்களே. திரும்பியும் இங்கே பாட்டி வந்து வேலை செய்தா எசமானி அம்மா ஏதாவது கன்னு பின்னுன்னு சொல்லாம இருப்பாங்களா? என்று தான் யோசிச்சேன்" என்ருன். எஜமானர் இந்த வார்த்தைகளைக் கேட்டுப் பிரமித்து விட்டார். ஒரு ஏழைப் பையன், அதுவும இவ்வளவு சின்ன வயதுள்ளவனு இப்படிக் கேட்கிருன் என்று நினைத்தார்; இதற்குள் உள்ளே குய்யோ முறையோ என்று சத்தம் கேட்டது. எஜமான் உள்ளே ஓடினர். எஜமானியம்மாள் மாடத்தி லிருந்த சீப்பை எடுக்கும் போது கையில்தேள் கொட்டி விட்டதால், அவள் கூகூவென்று கதறி அழுதாள். "ஐயோ, அந்த அஞ்சலை (சங்கரன் பாட்டி) மந்திரிச்சால் தேவலையே, பாவி; நான் போகச் சொல்லிப் புட்டேனே; என்று கதறினள். எஜமான் கெஞ்சுவது போல் பையா, "நீ நல்ல பையனல்லவா? போய் அவளை வரச் சொல்லு. உனக்கு எது வேணும்னலும் தரேன்!" என்ருர். சங்கரனும் இரக்க மனமுள்ளவனல்லவா? எஜமானிக்கு கடவுள் தண்டனை கொடுத்து விட்டதாகத்

தோன்றியது அவனுக்கு. இது போதும் அவள் செய்த காரியத்துக்கு என்று திருப்தியடைந்து பாட்டியிடம் ஓடி விஷயத்தைச் சொன்னான். அவள் மிகவும் ஆச்சரியமடைந்தவளாய், எஜமான் வீட்டுக்குப் பேரனுடன் போய்ச் சேர்ந்தாள்.

'அஞ்சலை, உன்னை அனியாயமாக் குத்தஞ் சொன்னத்துக்காக, இதோ பாரு; பகவானே தண்டனை கொடுத்துட்டார்'' என்று வலியால் துடித்தபடி புலம்பினாள். அஞ்சலை மந்திரித்ததும் அவள் வலி குறைந்தது. சற்று நேரத்தில் முற்றும் மறைந்து விட்டது தேள் கடி வலி.

எஜமானருக்குச் சங்கரனுடைய சமர்த்தைக் கண்டு சந்தோஷமுண்டானதால் அவன் விரும்பிய சாய வேட்டியை வாங்கிக் கொடுத்ததுமல்லாமல் தம் வீட்டுக் குழந்தையைப் போலவே பராமரித்தார். எஜமானியும், அவன் பாட்டிக்கு சம்பளத்தையும் கூடக்கொடுத்து ஆதரித்து வரத் தீர்மானித்தாள்'

*

மூக்கு பெரிதா?

பெரிதா யிருந்தால் நல்லது தானாம்! நெப்போலியன் பெரிய மூக்குள்ளவர்களைத்தான் தன் படையில் சேர்த்தானாம். அப்படி யிருந்தும் வாடர்லூ யுத்தத்தில் அவன் தோற்றுவிட்டான். ஏன் தெரியுமா? அவனைத் தோற்கடித்த வெலிங்டனின் மூக்கு மற்றெல்லோரையும் விடப் பெரியதாம்!

சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்ற மகிழ்ச்சி மயக்கத்தை உண்டுபண்ணி உறக்கத்தில் ஆழ்த்தி இப்படிப்பட்ட கனவைக் காணச் செய்ததில் அதிசயம் என்ன?

அதிசய விளக்கு

[குஞ்சலம்]

சுதந்தர ஜோதி உதயமான புனித தினம். கார்த்திகைப் பண்டிகையைப் போலக் கொண்டாட வேண்டும் என்று அண்ணு திட்டம் போட்டான். நானூறு அகல்களும் நான்கு மணங்கு மணிலாக்கொட்டை எண்ணெயும் வாங்கி வந்தான். ஐம்பது ரூபாய்க்குக் கொடி வாங்கினன். தீபங்களினுலேயே தர்ம சக்கரக் கொடியையும் ஏற்றி வைத்தான். எங்கள் வீட்டு அலங்காரத்தைப் பார்க்க கோனேரிப்பட்டி, இடப்பாடி, ஏன்? நங்கவள்ளி, திருச்சங்கோட்டி விருந்துகூட ஜனங்கள் வந்தார்கள்.

ஞாயிற்றுக்கிழமை இரவு ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்த தீப ஜோதிகளைக் கண்டு வியந்துகொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென்று ஒரு விபரீத எண்ணம் தோன்றிற்று. அரை வீசை எண்ணெயைக் குடித்துவிட்டு சுடர்விட்டு அண்ணுமலை தீபம் போல நட்ட நடுவில் ஒரு அகல் எரிந்துகொண்டிருந்தது. இந்தத் தீபம் தலை கீழாக எரிந்தால் திரிக்கு எண்ணெய் இன்னும் அதிகமாகப் பாய்ந்து சுடர் இன்னும் பெரிதாக எரியுமல்லவா என்று நினைத்தேன். அவ்வளவு தான்! என்ன அதிசயம்!

அகல் தலை கீழாக நின்றது. ஒரு சொட்டு எண்ணெய்கூட சிந்தவில்லை. கதிரவனே போல் ஒளி வீசிச் சுடர் கீழே பாய்ந்தது.

என் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டேன். நான் காண்பது கனவல்ல, நிஜமே தான். ஏன்? அதோ வெள்ளியங்கிரி கவுண்டன் வாயைப் பிளந்து கொண்டு பார்க்கிருனே? நல்லாயி முகவாய்க் கட்டையில் கையை வெத்துக் கொண்டு போட்ட கூச்சல் காதில் கேழ்க்கிறது. "இந்த அதிசயத்தை பாத்தியாம்மா? வெளக்கு தலை கீழா எரியுதே?"

என்னிடம் ஒரு அற்புத சக்தி இருப்பதை உடனே உணர்ந்தேன். அதைப் பரீட்சிக்க "விளக்கு முன்போல் எரியட்டும்" என நினைத்தேன். உடனே சிறு பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் டிரில் வாத்தியார் "பின்புறம் திரும்பு" என்ற உடன் திரும்புவது போல அகல் மேலே திரும்பிக் கொண்டது. சுடரும் மேல் நோக்கி எழுந்தது.

என் தேகம் சிலிர்த்தது. என்ன மகத்தான சக்தி? அடடா, இரண்டு வருஷங்களுக்கு முன்

இந்த சக்தி என்னிடம் இருப்பது தெரிந்திருந்தால் அணுகுண்டுப் பிரயோகத்திற்கே அவகாசம் ஏற்பட்டிராதே'' என்று நினைத்தேன்.

சுப்பு அத்தை கொங்கணவரத்திலிருந்து வந்து கொண்டு இருந்தாள். என் அற்புத சக்தியைப் பிரயோகித்தேன். "எனக்குப் பிடிக்காத சுப்பி அத்தை பின்னாலேயே போகட்டும்'' என நினைத்தேன். உடனே சுழற்காற்று வேகத்தில் சுப்பி அத்தை பின்னோக்கிப் பறக்க ஆரம்பித்தாள். "ஐயோ பாவமே,'' என்று கொங்கணவரத்தில் நின்று விடட்டும் என சங்கல்பம் செய்து கொண்டேன். மறுநாள் விசாரித்ததில் ஏதோ ஒரு பிசாசு தன்னைப் பின்னோக்கித் தள்ளிக்கொண்டு வந்து கொங்கணவரத்திலேயே விட்டுவிட்டதாக அத்தை சொன்னாள்.

அண்ணா நிலத்தை உழுதுவிட்டு மழைக்காகக் காத்துக்கொண்டிருந்தான். நான் மழை வர வேண்டும் என்று நினைத்தேன். உடனே மழை பொழிய ஆரம்பித்து சுதந்தரக் கொடிகளெல்லாம் நனைந்துபோய் விட்டன. அண்ணா உடனே விதை நெல்லைத் தூக்கிக் கொண்டு ஓடினது ஆறுதலாக இருந்தது.

விஷ்ணுகோயில் பட்டாச்சாரி தாழங்குடையைப் பிடித்துக் கொண்டு வந்தார். அவர் முகத்தில் முக்கால் பாகத்தை மறைக்கும் நாமத்தைக் கண்டால் எனக்கு ஏதோ வேதனையாயிருக்கும். "நாமம் தான் எத்தனை பெரிசு. சித்த சின்னதாகக் கூடாதோ என்று நினைத்தேன். உடனே பட்டை நாமம் மறைந்து தாசில்தார் அய்யங்கார் மாமா நாமத்தைப் போல மெல்லிய கோடுகள் தோன்றின. வீட்டுக்குப் போனதும் பட்டாச்சாரியாரின் மனைவி என்னென்ன சொன்னாளோ?

ருக்கு சித்தி எட்டு வயதிலேயே குறைபட்டுப் போனவள். செக்கச் செவேலென்று தங்கப் பிரதிமையைப்போல இருப்பாள். ஆனால் தாத்தா ஒரே பிடிவாதமாக அவள் மயிரை நீக்கி விட்டார். சித்தியைப் பார்க்கும் போதெல்லாம் "ஐயோ பாவம், தாழம்பூ வைத்துப் பின்னி, மையிட்டு, பொட்டிட்டு அழகு படுத்தினால் எப்படியிருக்கும்''என்று நான் நினைப்பதுண்டு. ஆனால் இன்று நான் திடமாக சங்கல்பம் செய்து கொண்டு அதையே தான் நினைத்தேன். சமையல் அறையிலிருந்து வெளியே வந்த சித்தியைப் பார்த்ததும் எல்லோரும் அப்படியே பிரமித்து விட்டனர். சாந்திக் கல்யாணப் பெண்ணைப் போல இருந்தது அவள் வெள்ளைப் புடவையும் ஜடை சிருங்காரமும்.

"ஏண்டி, குஞ்சலம், மணி ஏழாச்சு. இன்னம் தூங்கறயே'' என்று ருக்கு சித்தி என்னை எழுப்பினாள். அவளுடைய முகம் உருக்கி வார்த்த தங்கம் போல கதிரவனின் இளம் வெயிலில் பிரகாசித்தது. அவள் தலையை மூடியிருந்த முக்காட்டிற்குக் கீழ் தலை அண்ணா முகவாய்க் கட்டை போல இருந்தது. என் கண்ணில் நீர் பெருகிற்று.

"ஏண்டி, செல்லக் குஞ்சு, ஏதாவது கெட்ட சொப்பனம் கண்டாயா?'' என்று சித்தி கொஞ்சினாள்.

"என் விழித்துக் கொண்டோம்'' என்று என் மனம் வெதும்பிற்று.

உங்களுக்குத் தெரியுமா?

காமு

குழந்தைகளே! இந்தியாவின் ஸ்தானிகராக சோவியத் ருஷ்யாவுக்குச் சென்றிருக்கும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிதைதான் உலகத்திலேயே முதல் முதலாகச் ஸ்தானிகர் பதவி வகிக்கும் பெண்மணி என்று சொல்கிறார்களே. இதுவரை வேறு பெண்மணிகள் யாருமே இப்பதவியில் இருந்ததில்லையா ?

* இப்பதவியில் இதுவரை ஒரே ஒரு பெண்மணி இருந்திருக்கிறார். பலவருஷங்களுக்கு முன் சோவியத் ருஷ்யாவைச் சேர்ந்த 'ஸ்ரீமதி கோலாந்தை' என்பவர் ஸ்வீடனில் சோவியத் ருஷ்ய ஸ்தானிகராகப் பணியாற்றியிருக்கிறார். சமீபத்தில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பதவியிலிருந்து ஓய்வு பெற்று இருக்கும் இம் மாதரசியைக் கண்டு அளவளாவினாராம். என்றாலும் இந்தியாவின் சரிதத்தில் ஸ்ரீமதி விஜயலட்சுமிதான முதன்முதலாக இப் பதவி ஏற்றவர்.

* இந்தியாவில் பெண் சிற்பிகள் மிகச் சிலர்தான் உண்டு. அவர்களிலே ஒருவர் பம்பாயைச் சேர்ந்த ஷேரு சித்வா. சீமையிலே புகழ்பெற்ற சிற்பிகளான பேகட், ஸ்கீபிங் முதலியவர்களிடம் பயிற்சி பெற்றவர். பிரபல அமெரிக்க சிற்பியான வில்லியம் ஷோராக் என்பவரிடமும் சிலகாலம் இவர் பயிற்சி பெற்றார். நியூயார்க் கலை அலங்கரிப்புப் பயிற்சிக் கல்லூரிப் பரிசும் இவருக்குக் கிடைத்தது.

பிரிட்டனில் உள்ள ராயல் கலைக் கழகத்தின் அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டுக் கவுரவிக்கப் பெற்று இருக்கிறார்.

* காலஞ்சென்ற டாக்டர் அன்னிபெசண்டு அம்மையாரைப் பற்றி நீங்கள் நிறையக் கேள்விப் பட்டிருப்பீர்கள். படித்தும் இருக்கலாம். இந்திய சுதந்திரத்துக்காகவும், மாதர் உரிமை, முன்னேற்றத்துக் காகவும் அவர் செய்த சேவை மகத்தானது. நூறு வருஷங்களுக்கு முன்னே ஆங்கில நாட்டிலே பிறந்த இவ்வம்மையார் இந்தியாவைத் தமது தாயகமாகக் கொண்டு, இந்தியாவுக்குச் சேவை செய்வதையே தமது லட்சியமாகவும் கொண்டவர். அவருடைய பிறந்த தினம் அக்டோபர் முதல் தேதி அன்று வருகிறது. இந்த நூற்றாண்டு விழாவை அடையாற் பிரம்மசமாஜத்தினர் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.



சினிமாவும் பெண்களும்

"நவயுவதி"

நவ நாகரிக வாழ்விலே தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கும் ஜன சமுதாயத்தை இந்தக்காலத்திலே பெரிதும் வசீகரிக்கும் கேளிக்கைக் கட்சிகளில் சினிமா முதன்மை வகிக்கிறது. இதனுல் நாடகம், நடனம், இசை யரங்குகள் முதய வற்றிற்கு ஆதரவு குறைந்து விட்டதாக நான் சொல்ல வில்லை. இயற்கையும், செயற்கையும் டெக்னிகல் நுணுக்கமும் கூடிப் பிரமிக்கத் தக்க காட்சிகளையும், கதைகளையுக் சினிமா மூலம்தான் தெளிவாகவும் திருப்தியாகவும் காண முடிகிறது என்பதனுல்தான் சினிமாவிடம் ஜனங்களுக்கு இவ்வளவு போகம் என்று கூறலாம். ஆனுல் இன்றைய 'சினிமா' ஜன சமுதாயத்தின் குறிப்பாகப் பெண்களின் முன்னேற்றத்துக்கான வகையில் பயன் படுத்தப் படுகிறதா என்பதுதான் இப்போதைய பிரச்னை. அயல் நாட்டுப் படங்கள், இந்தியப் படங்கள் எல்லாம் எந்தெந்த வகையில் உயர்வோ, தாழ்வோ கொண்டவைகளாக இருக்கிறது என்பதை பார்ப்போமானுல் பதில் சுலபமாகக் கிடைத்துவிடும்.

அயல் நாட்டிலிருந்து வரும் படங்களைப் பற்றி நாம் பரிசிலனை செய்வ திருக்கட்டும். உள்ளூர் படங்களை முதலாகக் கவனிப்போம். இந்த நாட்டிலே இது வரை வந்துள்ள பல் வேறு பாஷைப் படங்களில் நம் சமூகத்துக்குக் கவுரவமும், பயனும் தரக்கூடிய படங்கள் மிகச் சிலவே! இப்படிச் சொல்ல வருத்தமாகத்தான் இருக்கிறது என்ருலும் உண்மையை சொல்லாமலிருக்க முடியுமா? 'பெர்னடேடயின் கானம்' 'மாடேம் க்யூரி' முதலிய ஆங்கலப் படங்களைப் பார்க்கும் போது நம் நாட்டில், நம்பாஷையில் இம்மாதிரிப் படங்கள் என்று வருமோ என்று நாம் ஏங்காமல் இருக்க முடிய வில்லை. இந்தியப் பெண்மைக்குக் கவுரவம் கொடுப்ப திருக்கட்டும். பெண் இனத்தை இழிவு படுத்தும் படங்கள் பிடிக்காமல் இருந்தாலே போதும் என்று கூட நாம் நினைத்து வருந்த வேண்டி இருக்கிறது. ஏனெனில் இதுவரை வெளியாகி யுள்ள படங்களில் பல, நம் சமூகத்தை இழிவு படுத்தும் பல பகுதிகள் கொண்டதாகவே இருக்கின்றன.

"ஆங்கிலப் படங்களிலே பல ஆபாசக் காட்சிகள் இல்லையா? பெண்களை அரை நிர்வாணமாக நடிக்கச் செய்து காமலாகிரி ஏற்படுத்தும் கதைகளைச் சினிமாவில் கொண்டு வரவில்லையா? அவைகளை நாகரீக மக்கள் ரஸிக்காமலா இருக்கிருர்கள்? இந்த நாட்

டில் உள்ள எத்தனையோ ஆண் பெண்கள் அந்தப் படங்களைப் பார்க்கத்தானே செய்கின்றனர்! என்ற கேள்வி எழலாம். ஆனால் இக்கேள்விகளுக்குப் பதில் கூறுவதற்கு முன் நான் உங்களுக்கு ஒரு உண்மையைச் சொல்லத்தான் வேண்டும். அயல் நாடுகளிலிருந்து வரும் படங்களில் நூற்றுக்கு ஒன்றுவது நல்ல படமாக இருக்கிறது என்று நான் சொன்னால் நீங்கள் மறுக்க முடியாது. பிரமிக்கத்தக்க சீன் ஜோடனைகள். டெக்னிகல் அம்சங்கள், காலத்துக்கும், சமுதாயத்துக்கும், பயன் தரும் அம்சம், நிறைந்த அற்புதமான ஆங்கிலப் படங்கள் வந்துள்ளன. வந்து கொண்டும் இருக்கின்றன 'குட் எர்த் அல்லது 'நல்ல பூமி' என்னும் உலகப் பிரசித்தி பெற்ற படம் பிரபல அமெரிக்க நாவலாசிரியை ஸ்ரீமதி 'பேர்ல்பக்' கின் சிருஷ்டியாகும். இந்த நாவலுக்காக அவருக்கு 'நோபல் பரிசு' கிடைத்தது என்பதும் அனேகருக்குத் தெரிந்த விஷயமே. அந்தப் படத்தைப் பார்த்தவர்கள் இவ்வளவு உயர்ந்த படமும் பிடிக்க முடியும்ா? என்று பிரமித்ததும் உண்டு.

இவ்வளவு தூரம் நான் ஏன் பரிசீலனை செய்கிறேன் என்றால் இந்திய சினிமாப் படங்களில் பெண்களுக்கு உரியஸ்தானமும் கவுரவமும் கொடுக்கப் படவில்லை என்பதனால்தான். தமிழ்ப்படங்கள் பல புராணக் கதைகள். அவைகளிலே தோன்றும் நடிகைகள் எம்மாதிரி அலங்காரத்துடன் தோன்றுகிறார்கள் என்று பெண்களாகிய நமக்கு நன்கு தெரியும். அக்காட்சிகளுக் காகத்தான் பட முதலாளிகள் வசூல் வகையில் வெற்றியும் அடைகிறார்கள். பெண்களை இந்த மாதிரியாகக் கேவலப் படுத்தும் ரீதியில் படங்கள் வெளியாகும்போது குடும்பப் பெண்கள் சினிமாவில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறுவது வியப்பாயில்லையா?

✲

விவாக ரத்து அதிசயம்

சிகாகோவிலே சமீபத்தில் ஒரு விவாகரத்து நடந்ததாம். வழக்கு தொடர்ந்த ஆலிவ்வோன் என்பாள் தன் கணவன் மீது சாட்டியகுற்றம் என்னதெரியுமா? தினந்தோறும் பன்றி இரைச்சி தின்னும்படி கட்டாயப்படுத்தப் பட்டாளாம்! இதற்கு காரணம் அவள் கணவனுடைய பெற்றோர்கள் கசாப்புக் கடை வைத்திருப்பதுதான்! நான் இப்படிப் பலவந்தப்படுத்தப் பட்டதனால் கடந்த ஆறு மாதங்களில் என் உடல்நிறை 59 பவுண்டு கூடிவிட்டது! என்று அங்கலாய்த்துக் கொள்ளுகிறாள் அந்த மாதுசிரோன்மணி.

கலிபோர்னியா கோர்ட்டிலே இன்னும் ஒரு விவாகரத்து வழக்கு. எனக்கு மாமிச உணவுதான் பிடிக்கும். காய்கறி பதார்த்தமே பிடிக்காது. ஆனால் என் கணவன் காய்கறி உணவைத்தான் நான் உட்கொள்ள வேண்டுமென்று கட்டாயப் படுத்தினார். இதனால் என் நிறை 40 பவுண்டு குறைந்துவிட்டது! என்று கூறினாளாம். நாகரீக அமெரிக்காவின் நாரிமணிகளின் வாழ்க்கையிலே' விவாக ரத்து செய்துகொள்வதும், அதற்கு விசித்திரமான காரணங்கள் காண்பிப்பதும் வெகு சகஜமாகிவிட்டது.

மிஸ். மாலினி

நடிகர்கள் :

கொத்தமங்கலம் சுப்பு	எல். நாராயண ராவ்
என். சீதாராமன்	எச். கிருஷ்ணமூர்த்தி
புஷ்பவல்லி,	சுந்தரிபாய்,

வசனம், பாட்டு, டைரக்ஷன்

கொத்தமங்கலம் சுப்பு

தயாரிப்பு : **கே. ராமநாத்**

ஸ்டூடியோ : **ஜெமினி**

கதை : மாலினி ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஓர் அழகி. தந்தையைக் காப்பாற்றும் நிமித்தம் அவள் தோழி சுந்தரியினால் தூண்டப்பட்டு உயர் நோக்கங்களோடு நடத்தப்படும் கலாமந்திரத்தில் நடிகையாகிறாள். கண்கவர் வனப்பாலும், உயரிய நடிப்பாலும் பொது மக்களின் ஆதரவு பெற்று வாழ்க்கையில் உன்னத நிலை அடைகிறாள். சமூகத்தில் புல்லுருவியாக உலாவிவரும் சம்பத்தின் ஆடம்பர வாய் வீச்சில் மாலினியும் சிக்குகிறாள். அவன் துர்ப்போதனைக் கிணங்கி கலாமந்திரத்திலிருந்து விலகி தனியே ஓர் நாடகசாலை ஆரம்பிக்கிறாள். சம்பத்தின் ஆடம்பரச் செலவுகளால் கம்பெனிக்கு வாங்கிய கடன் கொடுக்கப் படாமல் மாலினியின் பொருள்கள் ஏலம் போடப்பட்டு மீண்டும் ஏழ்மை நிலை அடைகிறாள். மறுபடியும் அதே தோழி சுந்தரியின் ஆதரவில் கலாமந்திரத்தில் சேர்ந்து சுக வாழ்வு பெறுகிறாள்.

நடிப்பு: மாலினியாக நடிக்கும் புஷ்பவல்லி நன்றாக நடித்திருக்கிறார். தமிழ் தாய் பாஷையாக இல்லாவிடினும் தெலுங்குப் பாணி இல்லாமல் நன்கு லாகவமாகப் பாடியும் பேசியு மிருக்கிறார். சுந்தரியாக நடிக்கும் சுந்தரிபாயின் நடிப்பு சந்தர்ப்பத்திற்குகந்தாற்போல் ஈடுபட்டு உணர்ச்சியுடன், அற்புதமாக அமைந்திருக்கிறது. "ஆறெல்லாம் நீரோடி" என்ற பாடலை இவர் சொற் சுவை, பொருள் சுவை குன்றாது உணர்ச்சியுடன் பாடும்பொழுது உண்மையில் உயிர்த் துடிப்பு உண்டாகிறது.

சமயோசிதமாக நடிக்கும் நாராயணராவும், சம்பத்தாக நடிக்கும் சுப்புவும் படத்தில்நடிக்கிறார்கள் என்ற உணர்ச்சியே நமக்கு ஏற்படவில்லை. அவ்வளவு இயற்கையாக இருக்கிறது. கலாமந்திரம் டைரக்டராகத் தோன்றும் சீதாராமன் இத் துறைக்குப் புதியவர் என்பதைக் காண்பித்துக் கொள்ளாமல் நன்கு கண்ணியமாக நடித்திருக்கிறார், ஹோட்டல் முதலாளியாக வரும் எச். கிருஷ்ணமூர்த்தியின் நடிப்பில் "கண்ணம்மாவில்" இருந்த துடியைக் காணோம். மற்றவர்களின் உயரிய நடிப்பும் சேர்ந்து படத்



தின் வெற்றிக்கு அனுகூலமாக இருக்கிறது. வசனம் பல இடங்களில் உன்னத நிலையை அடைகிறது. பாடல்கள் சுவையூட்டும் கருத்துக்களடங்கி படத்திற்கு உயிரூட்டுகிறது. வர்ணமெட்டுகளில், அதிகம் வடநாட்டு வாடை தட்டாமல், கர்நாடக சுத்தமாகவும், கம்பீரமாகவும், இனிமையாகவும் பாடப்பட்டிருக்கின்றன. எத்தனை தடவை கேட்டாலும் நன்கு ரசிக்க முடியும்.

பட நுணுக்கங்கள் அதிகம் உணர்ந்த ஸ்ரீராம்நாத் அவர்களின்

தயாரிப்பு: சுய புத்திக் கூர்மை யாலும், சலியா உழைப்பாலும் வெற்றி கண்ட சுப்புவின் டைரக்ஷன்; சாதனங்கள் நிறைந்து தலை சிறந்து விளங்கும் ஜெமினி ஸ்டுடியோ, ஆகியவை கொண்டு உருவாகிய இப் படம் பார்ப்பவருக்குக் குதூகல மளிப்பதுடன் உயரிய கருத்துக் களைப் போதிக்கும் ஓர் சிறந்தக் கற்பனைச் சித்திரம். இத்துடன் காட்டப்படும் 'கார்ட்டூன்' படம் ஜெமினியின் பெருமையையும், தயாரித்த 'தாணு'வின் திறமை யையும் நிரூபிப்பது போல நேர்த்தியாக இருக்கிறது.

மங்கை வாசகர்களுக்கு,

'மங்கை மாதப்' புத்தகமாக வெளியானபோது நீங்கள் காட்டிய ஆதரவுக்கும், பத்திரிகையான பிறகு இன்னும் அமோகமான அன்பும் ஆதரவும் காட்டுவதற்கும் எங்கள் நன்றி.

பத்திரிகையான பிறகு வாசகர்களின் ஆதரவும், பாராட்டும் அமோகம் பெருகி வருகிறது. கட்டுரை, கதைகளைப் பாராட்டி உங்களிட மிருந்துவரும் கடிதங்களைப் படிக்கப் படிக்க எங்களுக்குத் தெம்பும், தைரியமும் வளர்கிறது. இந்த இதழிலே இணைக்கப்பட்டுள்ள புது அம்சங்களை நீங்கள் அவசியம் வரவேற்பீர்கள் என்று நம்புகிறோம்.

மராட்டி சிறு கதை ஆசிரியர்களிலே பிரபலமான குமாரி கிருஷ்ணு குல்கர்னி எழுதிய 'கதாசிரியை' இவ் விதழில் வெளியாகி யிருக்கிறது. டாக்டர் திருபுரசுந்தரி ; கர்ப்பிணிகளின் ஆகாரத்தைப் பற்றிய சிறந்த வைத்தியக் கட்டுரையொன்றை எழுதியுள்ளார். செய்திக் குறிப்புகளும் சேர்த்துள்ளோம். ஸ்ரீமதி கமலாதேவியின் வரலாறும் வந்துள்ளது. 'சூரியகாந்தி' புஷ்பத்தைப் பற்றிய கட்டுரை உங்களுக்குப் பிடித்திருக்கிற தல்லவா? அரசியல், பொருளாதாரத் துறையில் இந்திய மாதர் திலகங்கள் இன்று பெரிய அளவில் பங்கெடுத்துக் கொள்ளும்போது 'மங்கை' அவைகளிலும் கவனம் செலுத்த வேண்டாமா? அரசியல் சமூக மலர்ச்சி, ஆடை அலங்காரம், சம்பந்தமான கட்டுரைகளைப் பிரபல பெண்மணிகளைக் கொண்டு எழுத ஏற்பாடு செய்துள்ளோம்.

அடுத்த இதழில் தமிழ் நாட்டு இளம் நாவலாசிரியர்களில் ஒருவரால் எழுதப்பட்ட 'காணிநிலம்' என்னும் தொடர் நாவல் வெளிவருகிறது. இந்தியாவில் உள்ள ஏழு லட்சம் கிராமங்களின் உண்மை நிலைமையையும், அங்குள்ள ஆண் பெண்களின் வாழ்க்கையையும், அவர்களது ஆசாபாசங்களையும், சம்பவங்களையும் பின்னணியாகக் கொண்டு ஆசிரியர் வரைந்துள்ள இந்தத் தொடர் நாவல் உங்களுக்குச் சுவாரஸ்யத்தை உண்டாக்கக் கூடியது.

பிரபல குஜராத்திக் கதாசிரியர் 'தூமகேது' எழுதிய 'திக்குவாயன்' என்னும் அற்புதச் சிறு கதை அடுத்த இதழில் வெளியாகி வாசகர்களைப் பெரிதும் மகிழ்விக்கும்.

இவ் விதழில் ஆரம்பமாகியுள்ள குழந்தைகள் பகுதி அடுத்த இதழில் இன்னும் விரிவான முறையில் வெளிவரும்.

குழந்தை - குறிப்பாகப் பெண் குழந்தைகள் இப் பகுதியைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளலாம். சின்னச் சின்னக் கதைகள்; வேடிக்கைப் பாட்டுகள்; விடுகதைகள் எல்லாம் இப் பகுதியில் வரத்தானே வேண்டும்! அப்போதுதானே குழந்தைகள் பாடு ஒரே கொண்டாட்டமாயிருக்கும்!

வைத்திய சம்பந்தமான முக்கிய விவரங்கள் தொடர்ச்சியாக வெளிவரும். அனுபவ பூர்வமானதும், அவசியமானதுமான இந்தக் குறிப்புகள் பெண்மணிகளுக்குப் பல விதத்திலும் பயன் தரக் கூடியது.

உங்களுக்கு மிகவும் சந்தோஷம் தரக்கூடிய இன்னும் ஒரு முக்கியமான செய்தி; 'மங்கை'யிலே சிறு கதை போட்டி ஒன்றை வைத்துள்ளோம். உங்களுக்குக் கதை எழுதுவதில் எவ்வளவோ ஆர்வமுண்டு என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் சந்தர்ப்பமும், திறமையும் இருந்தால் முடியாத தெதுவுமில்லையே! உங்கள் சொந்த வாழ்க்கையிலே எத்தனையோ குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகள் உண்டல்லவா? அந்தச் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டே நீங்கள் கதை எழுதலாம். மொழி பெயர்ப்பு வேண்டாம். சொந்த சிருஷ்டிதான் பெருமைக்கு ஆதாரம், திறமைக்கு ஒரு சான்றாகும்.

எங்களுக்கு வரும் சிறு கதைகளிலே எது சிறந்த கதையாயிருக்கிறதோ அக் கதைக்கு முதற் பரிசு ரூ. நூறு தரப்படும். இரண்டாவது பரிசாக ரூ. எழுபத்தைந்து கிடைக்கும். பிரசுரிப்பதற்குத் தகுதியான கதைக்கு உரிய சன்மானம் அளிக்கப் பெறும். உங்கள் அதிர்ஷ்டத்துக்கும், திறமைக்கும், ஏன்? ஆசைக்கும் இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதல்லவா? எங்கே? இதைச் சரியான முறையில், சரியானபடி பயன்படுத்திக் கொள்ளுங்கள் பார்க்கலாம்: போட்டியில் கலந்து கொள்ள டிசம்பர் மாதக் கடைசிவரை காலம் உண்டு என்பதை மறந்துவிடாதீர்கள். இக் கதைப் போட்டியில்ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

'சகோதரிகளின் சந்தேகங்கள்' என்ற தலைப்பில் மீண்டும் கேள்வி பதிலை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம். 'மங்கை' வாசகர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் அடிக்கடி எத்தனையோ சந்தேகங்கள் எழுகின்றன. யாரை யாவது கேட்டு அவைகளைத் தீர்த்துக் கொள்ளவும் ஆவலேற்படுகிறது. 'மங்கை'யில் இந்த ஆவலைப் பூர்த்திசெய்யத் தயாராயிருக்கிறோம். நேர்மையும் அவசியமும் உள்ள எந்தக் கேள்வியானாலும் கேளுங்கள். பதில் கிடைக்கும்.

தக்க முறையில் சரியான கேள்வியை கேட்பவருக்கு ஐந்து ரூபாய் சன்மானங் கிடைக்கும். முயற்சிக்குப் பலன் கிட்டாமற் போகாது. ஆகவே முயற்சித்துப் பாருங்கள்.

இன்னும் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல மறந்துவிட்டேனே! 'சங்கீதக் குறிப்புகள்' இதுவரை 'மங்கை'யில் வெளிவராதது அனேகருக்குக் குறையாயிருந்தது என்பது எங்களுக்குத் தெரியாமல் இல்லை. நல்ல முறையில், சிறந்த இசைவாணரைக்கொண்டு இந்த சங்கீதக் குறிப்புகளை எழுதவேண்டுமென்பதற்காகவே நாங்கள் இவ்வளவு காலமும் தாமதித்தோம். அடுத்த இதழிலிருந்து இந்த சங்கீதக் குறிப்புகளை எழுதப் பிரபல சங்கீத வித்வான் ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார். இவைகள் எல்லாம் உங்களுக்கு மகிழ்ச்சியும், பலனும் தரக்கூடிய செய்திகள் அல்லவா?

197643

இப்படிக்கு,

ஆசிரியர்,
மங்கை

இந்திய சர்க்காரின் சுகாதார மந்திரி
ஸ்ரீமதி ராஜகுமாரி அமிருதகௌரி

Regd. No. M. 4845 MANGAI
September 1947



வாழ்க நீ எம்மான்!

Edited, Printed & Published by Vai. Govindan at Shakti Press Ltd., P.I.C. No. MS. 23,
For Shakti Karyalayam, Royapettah, Madras P I.C No. MS. 202.